ஜன. 23 – 29, 2005
Jan. 23 - 29, 2005
16.00
24 பக்கங்கள்
REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI
සුඩර් ඔළි
வார மலர்




## பிரபாவின் பிரசன்னத்தால் வதந்திகளுக்கு ஆப்பு!



# மத்தியில் குவியும் நிவாரணம்



# மிஸ்டர் வேதாளம்




எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே... இந்த நாட்டிலே...

பெரிதாக யாரோ பாடும் சத்தம் கேட்டது. யாரப்பா இது அலுவலகத்தில் பாட்டுப்பாடுவது என்று பார்த்தால்... எல்லோரும் சீரியஸாக கடமையில் கண்ணாக இருந்தனர். அப்படி என்றால் யார் பாடுவது... என்று காதை நீட்டிக்கேட்டோம். தூரத்தில் கேட்ட பாட்டுச்சத்தம் கொஞ்சம் கொஞ்சமாக நெருங்கி வந்தது. யார் இந்த மதுரக்குரல் மன்னன் என்று பார்த்தால், நமது வேதாளத்தார் பாடலுடன் லான்ட் ஆகினார்.

''என்னய்யா குஷியாக பாடலுடன் வருகிறீர்?''என்றோம்.

''கடந்த வார சிங்கள வார இதழ்கள் ஒரு கடையிலே தலைகீழாகத் தொங்கிக்கொண்டிருந்தன. அவைகளை சும்மா நோட்டம் விட்டுப்பார்த்தேன்.இந்தப்பாடல் ஞாபகம் வந்தது.'' என்றார் வேதாளம்.

''என்ன செய்தி பார்த்தீர்?''

''இதற்கு முந்திய வாரத்தில் வந்த சிங்கள வார இதழ்கள் எல்லாம் சுனாமியில் தலைவர் பிரபாகரன் எவ்வாறு மாட்டினார்... எவ்வாறு இறந்தார் என்று விலாவாரியாக கற்பனைச் செய்திகளை விளாசித்தள்ளியிருந்தன. ஒரு பத்திரிகை பிரபாவுக்காக கொண்டுசெல்லப் பட்ட விலை உயர்ந்த பிரேதப்பெட்டி இதுதான் என்று படம் கூடப்போட்டிருந்தது.''

''அதுதான் எல்லாம் புஷ்வாணமாகிவிட்டதே! பிறகென்ன?''

''ஆம் இந்த லட்சணத்தில் இவ்வாரம் வெளியான பத்திரிகைகள், அந்நிய நாட்டுப்படைகள் இங்கே குவிந்திருப்பதால் தனது பிரபாகரன் வழமையான இடத்தை மாற்றி விட்டிருக்கிறார் என்று கப்ஸா செய்திகளை வெளியிட்டுள்ளன.''

''அப்படி என்றால், இறந்துபோன பிரபாகரன் எப்போ உயிருடன் வந்தார்..?''

''அதுதான் தெரியவில்லை. பிரபாகரன் இறந்தது என்ற செய்தி பொய் என்றோ... அப்படி எதுவும் நடக்கவில்லை என்றோ எந்தவிதமான தகவலையும் வெளியிடாமல் சுலபமாக தோசையை திருப்பிப் போட்டிருக்கிறார்கள்.''

''அப்படி என்றால் இந்தப் பத்திரிகைகளை வாசிக்கும் வாசகர்கள் முடியைப் பிய்த்துக் கொள்ள வேண்டியதுதான் என்கிறீர்...''

''அவ்வாறேதான்'' என்ற வேதாளம் அடுத்த விடயத்துக்குத் தாவத் தயாரானார்.

''கடந்தவாரம் அதிரடியாக தமிழ்நாட்டுப்பக்கம் விசிட் அடித்தேனே!''என்றார்.

''அதுதானேபார்த்தோம். உம்மை இந்தப்பக்கத்தில் கடந்த வாரத்தில் காண முடியவில்லையே!'' என்றோம்.

''ஆம்...ஆம்...'' தமிழ்நாட்டிலே இலங்கைப்போராளிகள் என்ற பெயரில் சிலரை வைத்துப் பராமரித்ததினால் இப்போது அந்த அவலாகி நொந்து நூலாகிப் போயிருக்கிறார்கள் அதிகாரிகள்''என்றார்.

''என்ன? விஷயத்தை விபரமாகச் சொல்லுமேன்!'' என்றோம்.

''இந்தியப் படைகளுடன் கைகொடுத்து நின்ற சில தமிழ் குழுக்கள் இந்தியப்படை வெளியேற்றத்தின் பின்னர் தமிழ்நாட்டுக்குத் தப்பி ஓடின அல்லவா!''

''ஆமாம்''

''அவர்களில் சிலர் தமிழ்நாட்டில் தங்கி கொஞ்சம் வசதியாக வாழ்க்கை நடத்திவந்தனர். அவர்களை இனியும் இங்கே வேண்டாம் உங்கள் ஊருக்குத்திரும்பிச் சென்று அரசியல் பண்ணுங்கள் என்று நெருக்கடி கொடுத்துவந்தது தமிழ்நாட்டு அரசு.

''ஆம்... இதுபற்றி ஏற்கனவே விலாவாரியாக எம்மிடம் சொல்லியிருந்தீர்...''

''அவர்களில் ஒரு குழுவினர் இங்கே திரும்பிவந்து அரசியல் பண்ண கொழுகொம்பு ஒன்றைத் தேடினர்.''

''ஆம்... கொழுகொம்பாக அவர்களுக்குக் கருணாவின் குழப்பம் உதவியது.''

''ஆம். கருணா குழுவினருடன் சேர்ந்து கட்சி ஆரம்பிக்க தடல் புடல் பண்ணினார்கள். ஆனால் அது ஆரம்பத்திலேயே பொசுங்கிவிட்டது. அவர்கள் ஒன்றை நினைக்க, கடவுள் வேறொன்றை நினைத்துவிட்டார். அதனால் அவர்களுக்கு இங்கே காலூன்ற முடியாமல் போய்விட்டது. ஆனால்...''

''ஆனால்...என்ன? ஆனால்..''

''கருணா குழுவினர் சிலர் அவர்களோடு ஒட்டிவிட்டனர். அவர்களை... இவர்கள் தமிழ் நாட்டுக்கு கூட்டிச்சென்று தமது பராமரிப்பில் வைத்திருந்தனர். சென்றவர்கள் சும்மா இருக்க வேண்டாமோ''

''ஏன், என்ன செய்தார்கள்?''

''கடந்த மாவீரர் தினம் அன்று தலைவர் பிரபாகரனுக்கு எதிராகவும்— விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும் துண்டுப்பிரசுரம் ஒன்றை வெளியிட்டு தமிழ்நாட்டின் பல பகுதிகளிலேயும் விநியோகித்திருக்கிறார்கள்.''

''அடடா... ஒண்டிய இடத்தில் சும்மா இருக்க தெரியாதோ அவர்களுக்கு!''

''அதுதானே! இந்த துண்டுப்பிரசுரங்கள் ரோ... மற்றும் கியு, போன்ற புலனாய்வு பிரிவினர் கைகளில் கிடைத்திருக்கின்றன. அடடா... ஏதோ நாம ஜோலி பண்ணாம கம்மினு கெடக்கோமே. இவனுங்க வந்து இப்புடி பண்ணினா அவுக நம்மகிட்டக் கடுப்பு காட்டுவாங்களே என்று பயந்த அதிகாரிகள் அந்தக் கூட்டத்தையே கூண்டோடு அள்ளி செங்கல்பட்டிலே உள்ள தடுப்பு முகாமில் போட்டுவிட்டார்கள்.''

''அடடா...சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்த கதையாகப் போய்விட்டதோ!''

''அங்கே போட்டதுடன் கதை முடியவில்லை. செங்கல்பட்டிலே ஏற்கனவே பல விடுதலைப்புலி ஆதரவாளர்கள் தடுத்து வைக்கப்பட்ட நிலையில் அதே முகாமில் இவர்களையும் போட்டது சங்கடத்தைத் தோற்றுவித்துவிட்டது.''

''என்ன சங்கடம்?''

''இரு பகுதியினருக்கும் அடிக்கடி முட்டல்கள், மோதல்கள்; கைகலப்புகள். இதனால் இப்போ இரு பகுதியினரையும் இருவேறு பிரிவுகளாகப் பிரித்து தடுத்து வைத்திருப்பதுடன் தடுப்பு முகாமின் நடுவில் பெரிய சுவர் எழுப்பி இரு பகுதியினரையும் பிரித்து விட்டார்களாம்.''

''அடடா... துன்பத்தின் மேல் துன்பம்தான்.'' என்றோம்.

''பாய்.. வேறு விடயமில்லை.''என்றுவிட்டு விசுக்கெனப் பறந்தார் வேதாளத்தார்.

# ஜெயலலிதா ஆடிய கூத்தால் தி.மு.க காங்கிரஸ் சங்கடத்தில்

தமிழக முதல்வர் ஜெயலலிதா தனிநபராக அரசியலில் எதிர் நீச்சல் போட்டு முன்னணிக்கு வந்த திறமைசாலி என்பதில் சந்தேகமில்லை.

ஆனால், அதே அளவுக்கு சர்ச்சைக்குரிய முடிவுகளை அதிரடியாக எடுத்து விரலைச் சுட்டுக் கொள்வதிலும் அவருக்கு நிகர் அவரேதான்.

ஒரு காலத்தில் வாஜ்பாய் அரசை கவிழ்த்த அவர் பின்னர் மதமாற்ற தடைச்சட்டத்தை இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழ்நாட்டில் கொண்டுவந்தார். மதவெறி பாரதீய ஜனதாவே செய்யத்துணியாத கைங்கரியம் அது. எனினும் தேர்தலில் தோற்ற மறுநிமிடமே அச்சட்டத்தை வாபஸ் பெற்றார். கருணாநிதி மீது பொய்க்குற்றம் சாட்டி தரதரவென்று தெருவில் இழுத்துச்சென்று சர்ச்சை உண்டாக்கினார். கோடி ரூபாக்கள் செலவு செய்து ''வளர்ப்பு மகனுக்கு'' திருமணம் செய்தார். அதே மகனை பின்னர் சிறையிலிட்டார். ஆயிரக் கணக்காக அரச ஊழியர்களை வேலைநிறுத்தம் செய்ததற்காக பதவி நீக்கினார். தேர்தல் தோல்வியை அடுத்து அந்த முடிவும் மீளப்பெற்றுக் கொள்ளப்பட்டது.

இப்படியே சர்ச்சைக்குமேல் சர்ச்சையான முடிவுகளை எடுக்கும் ஜெயலலிதா கடைசியாக எடுத்த சர்ச்சைக்குரிய முடிவு காஞ்சி மடாதிபதி மீதான வழக்கு.

தன்னிடம் உறுதியான ஆதாரம் இருப்பதாலேயே மடாதிபதி மீது நடவடிக்கை எடுக்கப்படுவதாக ஆரம்பத்தில் கூறி வந்த ஜெயலலிதாவுக்கு சாதகமாகவே வழக்கு நடந்துவந்ததாக தோன்றியது. மொத்தம் 3 வழக்குகள் மடாதிபதி மீது இருந்ததால் அவர் பிணையில் வெளிவரவேண்டுமாயின் மூன்றிலும் பிணை பெறவேண்டும். அதற்கு வாய்ப்பில்லை என்றே ஜெயலலிதா நம்பினார்.

எனினும் சென்னை உயர்நீதிமன்றால் பிணை மறுக்கப்பட்ட காஞ்சி மடாதிபதி உச்சநீதிமன்றில் செய்த பிணை மனு ஏற்றுக்கொள்ளப்பட்டு அவர் பிணையில் வெளிவந்தும் விட்டது ஜெயலலிதாவுக்கு பெரும் பின்னடைவாக மாறியுள்ளது.

இந்தியாவின் தலைமை நீதிபதி உள்ளிட்ட மூவர்கொண்ட நீதிபதிகள் குழு சங்கராச்சாரியாருக்கு பிணை வழங்கியதுடன் தமிழக பொலிஸார் வழக்கை கையாளும் விதத்தை குறித்து சில கண்டனங்களையும் தெரிவித்துள்ளது.

மேலும் தேசிய மனித உரிமைகள் குழுவும், விசாரணை கஸட் தனியார் தொலைக் காட்சியில் ஒளிபரப்பானது எப்படி என விளக்கம் கோரி தமிழக அரசுக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளது ஜெயலலிதாவுக்கு நல்ல செய்தி அல்ல.

இதைவிட முக்கிய விடயம் மடாதிபதியை பழிவாங்க அநீதியாக வழக்கு சோடித்ததாக பி.ஜே.பியும் இந்து பரிவாரங்களும் ஜெயலலிதாவை கடுமையாக எதிர்க்கத் தொடங்கியுள்ளன. நாடளாவிய எதிர்ப்பு நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. மேலும் ஜெயலலிதாவை பதவிநீக்க வேண்டும் என்றுகூட பி.ஜே.பி கோரியுள்ளது.

முன்னாள் பிரதமர் வாஜ்பாயே இக் கோரிக்கையை எழுப்பியுள்ளது ஜெயலலிதாவுக்கு கடும் ஆத்திரத்தை ஏற்படுத்தி இருக்கிறது. 1999இல் வாஜ்பாய் அரசை கலைத்த நாளில் இருந்து வாஜ்பாய் – ஜெயலலிதா உறவு நன்றாகவே இல்லை. எனினும் கடந்த தேர்தலில் வேறுவழியின்றி பி.ஜே.பி, அ.தி.மு.கவுடன் கூட்டணி ஏற்படுத்திக் கொண்டது. அப்போது பிரதமர் வாஜ்பாயும் முதல்வர் ஜெயலலிதாவும் மரீனாவில் ஒரு மேடையில் பிரசாரம் செய்தனர்.

இப்போது 356ஆவது சட்டத்தை கொண்டு இவரது அரசை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என வாஜ்பாய் தனது வாயால் கோரி இருப்பது ஜெயலலிதாவுக்கும் அவருக்கும் தனிப்பட்ட முறையில் பெரும்பகையை நிரந்தரமாக ஆக்கிவிட்டது. ஏற்கனவே காங்கிரஸின் தலைவர் சோனியாவை இழிவாக தேர்தலில் பேசி அவருடன் தனிப்பட்ட பகையை ஜெயலலிதா வளர்த்துக் கொண்டுள்ளார்.

இதற்கிடையில் ஜெயலலிதாவின் நடவடிக்கை அவரது எதிரிகளான தி.மு.க மற்றும் காங்கிரஸையும் பெரும் சங்கடத்தில் மாட்டிவிட்டுள்ளது. ஜெயலலிதாவைப் பதவிநீக்க வேண்டும் என பி.ஜே.பி மத்தியிலுள்ள கங்கிரஸ் அரசை பெரிதும் நெருக்கி வருகிறது. ஒருவேளை வழக்கை மேற்கொண்டு வெற்றிகரமாக நடத்தி முடிக்க தமிழக அரசுக்கு இயலாதுபோய் சங்கராச்சாரியார் நிரபராதி என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தால் ஜெயலலிதாவின் நிலை இன்னும் சிக்கலாகும். அதை விட சிக்கல் காங்கிரஸுக்கும் தி.மு.கவுக்கும் ஏற்படும்.

ஏனெனில் தி.மு.க ஜெயலலிதாவை பதவிநீக்க ஆவலாக இருந்தபோதும் இந்த விஷயத்தைக் கொண்டு ஜெயலலிதாவை பதவி நீக்கினால் வேறுபல பாதகங்கள் தி.மு.கவுக்கு ஏற்படும். அதாவது மடாதிபதி மீது பொய்வழக்கு போட்டதாக அரசை பதவிநீக்கினால் பி.ஜே.பியின் செல்வாக்கு பெரிதும் உயர்ந்துவிடும். அரசை பதவிநீக்கியபின் தேர்தலை உடனடியாக நடத்தவேண்டும். இதில் பி.ஜே.பிக்கு பெரும் வெற்றி கிடையாது விட்டாலும் இப்போதுள்ள 5 எம்.எல்.ஏக்களை இருப்பத்தைந்துவரை அதிகரிக்க உதவலாம். இது தி.மு.க, அ.தி.மு.க, காங்கிரஸ், பா.ம.க. எவருக்குமே உகப்பான விடயமல்ல.



மேலும் தி.மு.க அடிப்படையிலேயே நாஸ்திக கட்சி. அது பி.ஜே.பியை தனது நண்பனாக மனதளவில் ஒருபோதும் கருதியது கிடையாது. 1999இல் தி.மு.க. ஒரே ஒரு முறைமட்டும். பி.ஜே.பி அணியில் இணைந்தது அதுகூட ஜெயலலிதாவின் அட்டகாசத்தை எதிர்க்கவேறு வழியின்றியே இணைந்தது. தந்தை பெரியார் பாசறையில் வளர்ந்த கருணாநிதி ஜெயலலிதாவுடன் ஒப்பிடும்போது மதசார்பின்மையை கடைப் பிடிப்பதில் ஆர்வம் அதிகமுள்ளவர். மடாதிபதியை கைதுசெய்ய வேண்டுமென ஆரம்பத்தில் உண்ணாவிரதம் நடத்தியது தி.மு.க தான் என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் குத்துக்கரணம் அடித்து இதே விடயத்துக்காக அரசை பதவி நீக்க தி.மு.க கோர முடியாது.

காங்கிரஸின் நிலையோ இதைவிட சங்கடம். ஜெயலலிதா ஆடிய கூத்தால் அவரை பதவிநீக்க வேண்டுமென்ற பி.ஜே.பியின் நெருக்குதலுக்கு மெல்லவும் முடியாது விழுங்கவும் முடியாது காங்கிரஸ் தவிக்கிறது. ஜெயலலிதா காங்கிரஸின் எதிரி என்பதும் அவரை டிஸ்மிஸ் செய்துவிட்டு தமிழகத்தில் தி.மு.க.வுடன் சேர்ந்து ஆட்சி அமைக்க வாய்ப்பு வரும் என காங்கிரஸ் நம்பாசை கொண்டிருப்பதும் சரிதான்.

ஆனால், மடாதிபதி வழக்கு காரணமாக ஜெயலலிதாவை பதவிநீக்கினால் பி.ஜே.பியின் செல்வாக்கு உயரும் என்பதையும் சோனியா அறிவார். மறுபுறம் நேரு காலத்தைப் போல் மதசார்பின்மையை வலுவாக அமுல்படுத்த முயன்றுவரும் சோனியா மதசார்பின்மைக்கு அச்சுறுத்தல் இப்போதைக்கு பி.ஜே.பியும் அது சார்ந்த அமைப்புகளுமே என கருதுகிறார்.

இந்த அமைப்புகளை பலவீனப்படுத்துவது அவசியம் என காங்கிரஸ் கருதுவதால் மடாதிபதி உண்மையில் குற்றம் செய்திருந்தால் அவரை தண்டித்து அதன்மூலம் மதஅமைப்பு பலவீனப்படுவதை,காங்கிரஸ் கட்சி உள்ளூரவிரும்பக்கூடும்.

எஸ்.சுரேந்திரஜித்.

# பயங்கர சுனாமி யுகே யுகே

பகவத்கீதையில் 4ஆம் அத்தியாயத்தில் உள்ள ஒரு சுலோகம்.

''பரித்ரரணாயா சாதுனாம விநாசாய ச துஷ்க்நதா தர்ம சமஸ்த்தா ப நார்த்தாய சம்பவாமி யுகே யுகே''

எனது பக்தர்களை காப்பற்றவும், துஷ்டர்களை அழிக்கவும் யுகம் யுகமாக நான் அவதாரம் எடுப்பேன் –என்கின்றார் பகவான் கிருஷ்ணர்.

இன்று பயங்கர சுனாமி அலைகள் எமது இலங்கைக் கரைப்பகுதியை அழித்தபோது பச்சிளம் பாலகர் தொட்டு பழுத்த வாயோதிபர்வரை, வயது, இனம், சாதி, சமயம், உயர்குடி, ஏழை, பணக்காரர் என்று எதுவித வித்தியாசமுமின்றி மக்கள் அழிந்தபோது சகல மக்களின் மனதில் இப்படியாகத் தான் பல எண்ணங்கள் தோன்றியிருக்கலாம்.

'இந்த அழிவு ஏற்பட நாம் என்ன பாவம் செய்தோம்'

'எமக்கேன் இந்த அவலநிலை'

'கடவுளுக்கு கூட காண்ணில்லையா?'

இந்த எண்ணங்களை வலுவூட்டும் விதத்தில் அரசியல் வாதிகளிலிருந்து ஆன்மீக வாதிகள்வரை தத்துவங்களை உதிர்த்தார்கள். தமிழக முதல்வர் ஜெயலலிதா – எமது பாவங்களின் விளைவுதான் இந்த அனர்த்தம் என்றார்.

இமாசலத்துக்கு அமைதிக்காக அடிக்கடி ஓடும் ரஜனிகாந்த் கூட நாட்டில் அநீதியும் அதர்மமும் பெருகிவிட்டன அதனால்தான் இந்த அழிவு என்றார்.

இன்னும் சிலர் இந்த அனர்த்தத்தில் கூட தமது சொந்த அபிலாஷைகளை சுட்டிக்காட்டத்தவறவில்லை.

சங்கர மடத்திற்கு முதல்வர் செய்த அநீதி அனர்த்தமாக உருவெடுத்து அழித்துவிட்டது என்றனர் சிலர்.


நாட்டில் நீதித்துறையை அநீதித்துறையாக்கி என்.பி.திஸாநாயக்கா போன்றோரை சிறையிலிட்டதுதான் இந்த அழிவுக்குகாரணம் என்று சில அரசியல் பிரமுகர்கள் கருத்து தெரிவித்தார்கள்.

முதல் அலை தமிழர்வாழும் பகுதியில் அனர்த்தம் விளைவித்தபோது, வானொலியில் அதைக்கேட்டு மகிழ்ந்த சில கடவுள் நம்பிக்கையில்லாத அரசியல் கட்சிகள் கூட அடுத்த இருமணி நேரத்தில் தம்பகுதியிலும் அனர்த்தம் நடைபெறப்போவதை அறியாமல் 'புலிகளின் கொடுங்கோலாட்சிக்கு இறைவனின் தண்டனை அவர்களது தலைநகரம் திருகோணமலை அழிந்தது ஆண்டவனின் சித்தம்' என்று குதூகலித்த நிகழ்ச்சிகளும் உண்டு.

'ஆண்டவனை சீண்டாதீர்கள் அவர் கோபம் கொண்டால் இதுதான் நடக்கும்' என்று தம் மதக்கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்தவர்களுக்கு போஸ்டர் மூலம் 24 மணிநேரத்தில் தமது மனக் கிடக்கையை அறிவித்தவர்கள் சில மதப்பிரிவினர். இப்படி அனர்த்தத்தில் தப்பியர்வர்கள் உத்தமர்கள், அழிந்து போனவர்கள் பாவிகள் என்று தத்துவங்கள் பல பேசினார்கள்.

மனிதர்களே நில்லுங்கள். நீங்கள் அத்தனைபேரும் உத்தமர்தானா சொல்லுங்கள் என்ற சினிமா பாட்டுக்குத்தான் இந்த இடத்தில் நினைவுக்கு வருகின்றது.

சிலப்பதிகார நாயகி கற்புக்கரசி கண்ணகி கூட மதுரையை தீ அழிக்க கட்டளையிட்ட போது 'வயதானவர்கள், பெண்கள், குழந்தைகள், நல்லவர்கள் என்போரை தவிர்ந்து கொடியவர்களை அழி என்று சொன்னாளாம் என்று இளங்கோவடிகள் கூறுகின்றார்.




DIEGO GARCIA

அப்படி தீயவர்களையும் தீயவைகளையும் அழிக்க வந்தது சுனாமி என்றால் பிறந்து ஓரிரு தினம் செல்லாத பாலகர்களை சமுத்திரம் கொண்டு சென்றதை எந்த கணக்கில் வைப்பது?

நாம்எல்லோரும்மனிதர்கள். தவறுசெய்வது என்பது சகஜம். அது தவறு என்று உணர்ந்து கொள்ளும்போது உயர்ந்த மனிதர் ஆகிவிடுகின்றோம்.

இறைவன் என்று ஒருவர் இருந்தால் நாம் எல்லோரும் அவர் படைப்பில் உருவாகியவர்கள் என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டால் நாம் தவறு செய்வதை அவர் தடுப்பது அவரது கடமை. தவறுக்கு தண்டனைதான் அவர் நீதி என்றால் நாம் அவரையும் எமது மனித ஸ்தானத்திற்கு இறக்கிவிடுகின்றோம்.

சமூகங்கள் தம்மிடையே நீதி, நேர்மை, சட்டம், ஒழுங்கு என்பவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு இறைவனின் தண்டனை என்ற கோட்பாட்டை உபயோகித்தன. புராணங்களிலும் மதநூல்களிலும் பாவத்தின் சம்பளம் மரணம் என்பது பிரகடனப்படுத்தப்பட்டது. அதன் விளைவுதான் இயற்கையின் நிகழ்வுகளுக்கும் இறைவனின் தண்டனை என்று பெயர் கொடுக்கப்பட்டது.

**-அருள்-**


உண்மையில் மனிதன்தான் தானே தவறுகளை செய்துவிட்டு தனக்கே தான் தண்டனையை கொடுத்துக் கொள்கின்றான்.

இன்றைய சுனாமி அனர்த்தத்தை எடுத்துக்கொள்ளுங்கள். இந்த இயற்கையின் சீற்றம் இறைவனின் தண்டனை என்றால் காலையில் வந்த சுனாமி முதல் நாள் இரவில் வந்திருந்தால் அழிவுகள் எவ்வளவு பாரதூரமாக இருந்திருக்கும் என்று எண்ணிப்பாருங்கள். இறைவனின் கருணையினால்தான் இப்படி பல உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கின்றனர் என்பதை நாம் ஏன் ஏற்க மறுக்கின்றோம்.

மனிதன் தான் செய்த தவறுகளை இயற்கையிலும் இறைவனிடத்திலும் பொறுப்பேற்றி விடுகின்றான்.

நாம் சூழலுக்கும், இயற்கைக்கும் செய்த தவறுகள் தான் இன்று பேரனர்த்தங்களை உருவாக்கியது. எரிமலை வெடிப்பதும், சுனாமி அலைகள் உருவாகுவதும், கடல் பொங்குவதும், புயல் அடிப்பதும் எல்லாம் இயற்கை நியதிகள். இவ்வளவு கோடானகோடி ஆண்டுகளாக இவை உலகின் எங்கேயோ ஒரு மூலையில் நடந்து கொண்டிருக்கின்றன.

(17ஆம் பக்கம் பார்க்க)





சிறுவர்கள் விரும்பும் கல்வியை
பெற்றுக்கொடுத்து அவர்களின்
கருத்துக்களுக்கும் அபிலாஷைகளுக்கும்
இடமளித்து விருப்பங்களை பூர்த்தி செய்வதன்
மூலம் சிறுவர்களை நாட்டின்
நற்பிரஜைகளாக்க முடியும்.

சிறுவர்களின் கல்வி ஆர்வத்தை
ஊக்குவிப்போம்

அவர்களின் உரிமைகளுக்கு
மதிப்பளிப்பவர்களும் அதற்காக
போராடுபவர்களும் போற்றப்படுவார்களாவர்

National Child Protection Authority
No. 330, Thalawathugoda Road, Madiwela, Sri Jayawardenapura,
Sri Lanka. Telephone : 94-2778911-14 Fax : 94-2778915
unicef E-mail: ncpa@childprotection.gov.lk / Website: http://www.childprotection.gov.lk

# காதல் சொல்ல வந்தேன்

வ.சுதா
ஸ்கந்தபுரம்

சித்தியிடம் விடைபெற்றுக் கொண்டு தோழி மாலாவின் வீட்டை நோக்கி சைக்கிளை மிதிக்கத் தொடங்கினேன். பத்து வருடத்திற்குப் பின்பு வன்னிக்கு வந்ததில் எல்லாமே புதிதாக இருந்தன.

சித்தியின் வீட்டுக்குப் போகப்போகிறேன் என்று நான் சொன்னதும் அம்மாவிற்கே அதிசயம். "சொந்தம் பந்தம் என்று நான் ஒரு வீட்டுக்கும் செல்வதே இல்லை. என்ன திடீரென்று?" அம்மா சிரித்தபடியே அனுப்பி வைத்தார்.

ஆனால், நான் வன்னி வந்ததே சாரங்கனைத் தேடி என்று எவருக்கும் தெரியாது.

சாரங்கனை நினைத்தாலே இதயம் சிறகடிக்கும். அந்தச் சிறிய வயதில் இதயத்தில் எப்படிப் பதிந்தான். பதின்மூன்று பதின்நான்கு வயதில் நடந்ததை நினைத்துக் கொண்டு நான் வாழ்வதை அறிந்தால் எவரும் சிரிப்பார்கள். அவர்கள் சிரிப்பதற்காக என் காதலை அழிக்க முடியுமா?

துணிவோடு சாரங்கனைக் காண வந்துவிட்டேன். ஆனால், அவன் என்னை மறந்திருந்தால்? சீ... சீ... அவனா என்னை மறப்பது? எனக்காக தன்னைத்தியாகம் செய்யத் துணிந்தானே! அதை நினைத்த போது மனதுக்கு பெரும் ஆறுதலாக இருந்தது. இதையே நினைத்துக் கொண்டு எத்தனை காலம் வாழ்வது? இதற்கு ஒரு முடிவு கண்டுதான் வன்னியை விட்டு நகரவேண்டும்.

நினைத்தபடி பழைய நினைவுகளை அசைபோட்டேன்.

********

அந்தப் பாடசாலையில் தரம் எட்டில் மூன்று பிரிவுகள் உண்டு. அதில் 'பி' பிரிவில் நானும் 'சீ' பிரிவில் சாரங்கனும் படித்துக் கொண்டிருந்தவேளை சி பிரிவு ஆசிரியர் ஆசிரிய கலாசாலைக்குச் சென்றுவிட, 'பி'யும் 'சி'யும் ஒன்றாக சேர்க்கப்பட்டன.

சாரங்கன் உயரமாகவும் நல்ல நிறமாகவும் இருந்தான். படிப்பில்பூச்சியம் என்றால் குழப்படியில் நூற்றுக்கு நூறு. ஏனோ பார்த்த முதல் நாளே அவனை எனக்கு பிடிக்கவில்லை. நானும், அவனும் உயரம் என்பதால் பின் வரிசையில் இருப்போம். ஒரே சண்டைதான் இருவருக்கும்.

அன்று வீட்டுப் பாடம் செய்யாமல் வந்தவன் என்னிடம் கொப்பி கேட்க— நான் மறுக்க— மேசையிலிருந்த கொப்பியை பாய்ந்து எடுத்துவிட்டான்.

"கொப்பியை தா இல்லாட்டி சேரிட்டம் சொல்லுவன்."

"நல்லாச் சொல்" என்றபடி அவன் சிரிக்க கோபத்தோடு நான் கொப்பியை பறிக்க அவனும் இழுக்க வகுப்பே வேடிக்கை பார்க்க கொப்பித்தாள்கள் கையோடு வந்தன. ஓடிப்போய் ஆசிரியரிடம் நடந்ததைக் கூறினேன். ஆசிரியர் கோபமாய் சாரங்னைப் பார்த்தார்.

"சேர் இவ சொல்லுவரது பொய். கொப்பி கீழே இருந்தது. நான் யாருடையது என்று பெயரைப் பார்க்க தீபா ஓடிவந்து இழுத்தா கிழிஞ்சிட்டுது."

சாரங்கன் இப்படிச் சொன்னதும் ஆசிரியர் நம்பிவிட்டார். "செய்யிறதையும் செய்திட்டு ஆண்களை மாட்டிவிடுங்கோ" என்று அவர் பேசியபோது எனக்கு சிரிப்பு வந்தது. இவருக்கு பெண்கள் என்றாலே பிடிக்காதாம். 'லவ் பெயிலியர்' என்று யாரோ கதைத்த ஞாபகம். இவரிடம் போய்ச் சென்னேனே! என்னையே திட்டியபடி வகுப்புக்குள் வந்தேன். வெற்றிச் சிரிப்போடு என்னைப் பார்த்தான் சாரங்கன்.

அடுத்தநாள் தேவாரம் நடந்து கொண்டிருந்தது. சாரங்கன் என் கதிரையை எடுத்தது தெரியாமல் தேவாரம் முடிந்ததும் இருந்தேன். குபீர் என்று நான் கீழே விழ எல்லோரும் ஓவென்று சிரித்தார்கள். எனக்கு அழுகை, ஆத்திரம் என்று எல்லை மீறியபோது "சனியனே ஏன் பள்ளிக்கு வாறாய் எங்கேயாவது போய் தொலையேன்" என்று திட்டினேன்.

அவன் சிரித்தபடியே ஆடத் தொடங்கினான். அவனைப் பார்க்க எனக்கும் சிரிப்புத்தான் வரும். இப்படியே எட்டாம் வகுப்பு முடிந்து ஒன்பதில் கால் வைத்தேன். சாரங்கன் பெயிலாக வேண்டும் என்று நான் கடவுளை பிரார்த்தனை செய்தும் அவன் எனது வகுப்புக்கே மீண்டும் வந்துவிட்டான்.

அந்த நேரத்தில் நான் பெரியவளானேன். ஒரு மாதம் பாடசாலை செல்லவில்லை. வகுப்புத் தோழிகள் வந்து போவார்கள். சாரங்கனின் தொல்லை தாங்க முடியவில்லை என்று புலம்புவார்கள். எனது பூப்புனித நீராட்டு விழாவுக்கு சாரங்கனை மட்டும் விலத்திவிட்டு எல்லோருக்கும் அழைப்பிதழ் கொடுத்தேன்.

தன்னை எல்லோரும் வெறுக்கிறார்கள் என்று அவன் திருந்துவான் என்று நினைத்தேன். மீண்டும் பாடசாலை செல்லத் தொடங்கிய முதல் நாள் வகுப்பு மாணவர்களுக்கு ரொபி கொடுத்தேன்.

கடைசியாக சாரங்கனிடம் வந்த போது "நீ ஏன் எனக்கு சாமத்திய வீட்டுக்குச் சொல்லேல எனக்கு ரொபி வேண்டாம்" என்றபடி லேசாக அவளது கையை தட்டிவிட ரொபித் தட்டு கீழே விழ்ந்து சிதறியது. வெட்கிப் போனேன் நான். என்ன மாணவன் இவன், கதைக்கக்கூடத் தெரியாமல் படிக்க வந்துவிட்டானே! எல்லா ஆண்களுக்கு முன்னாலும் சாமத்தியவீடு என்றதே வெட்கத்தில் உடல் நடுங்கியது. மற்றப் பிள்ளைகள் ரொபியை பொறுக்கி தட்டில் போட. நான் அழுதபடி மேசையில் தலை கவிழ்ந்தேன்.

இந்தப் பாடசாலையில் சாரங்கனுக்கு அடிக்காத ஆசிரியர் ஒருவரும் இல்லை. சில ஆசிரியர்கள் அடித்தே அலுத்துப் போனார்கள். இதைப் போய் சொன்னாலும் அடிப்பதோடு சரி. அவன் எப்படியும் திருந்தமாட்டான். மனதுக்குள் திட்டம் போட்டேன். அவனைப் பழிவாங்க இதைவிட்டால் வேறு வழி இல்லை என்ற ஒரு முடிவுடன் மறுநாள் இடைவேளை வரை காத்திருந்தேன். சில நிமிடங்கள் விளையாடி விட்டு மெதுவாக வகுப்புக்குள் வந்தேன். நான் ரெடியாக வைத்திருந்த ஆயிரம் ரூபா காசை சாரங்கனின் கொப்பி உறைக்குள் வைத்தேன்.

ஏழாம் பாடம் நடந்து கொண்டிருந்தது. என் நாடகத்தைத் தொடங்கினேன். "மிஸ் என் காசைக் காணோம்" என்றேன். கரும் பலகையில் எழுதிக் கொண்டிருந்த கமலம் மிஸ் திரும்பினார்.

"எவ்வளவு காசு? பள்ளிக்கூடத்திற்கு ஏன் கொண்டுவந்தாய்?"

"ஆயிரம் ரூபா மிஸ். கடையில குடுக்கச் சொல்லி அம்மா தந்தவ, நான் வரேக்க கடை திறக்கேல. இப்ப என்ன செய்யிறது? வீட்டை போக முடியாது!"

என்றபடி கண்ணீரை சிந்தினேன்.

மிஸ் கோபத்தோடு முன்னே வந்தார்.

"நீங்கள் சின்னப்பிள்ளைகள் இல்லை. தெரிந்தோ தெரியாமலோ எடுத்தா குடுத்திடுங்க. யாராவது காசைக் கண்டீங்களா?"

"இல்லை" என்று எல்லோரது குரலும் ஒலித்தது." "தீபா எல்லாருடைய பாக்கையும் செக் பண்ணு" எனக்கு உத்தரவு கிடைத்த சந்தோஷத்துடன் என் வேலையைத் தொடங்கினேன். ஏனையோரின் பைகளைப் பார்ப்பது போல் பார்த்துவிட்டு சாரங்கனுக்கு முன்னே வந்தேன்.

"என்ன முழிக்கிறாய் நீயா எடுத்தாய்?" மெதுவாக கேட்டேன்.

"பல்லை உடைப்பன் பாத்திட்டு கெதியாப்போ" அவனும் மெதுவாகக் கூறினான். நான் சிரித்தபடியே வைத்த இடத்திலிருந்து காசை எடுத்தேன்.

"மிஸ் இங்க பாருங்க காசு இதுக்குள்ள இருந்தது" என் குரல் கேட்டதும் எல்லோரது கண்களும் சாரங்களைப் பார்த்தன. மிஸ் திட்டியபடியே அதிபரிடம் அவனை அழைத்துப் போக பாடசாலைவிட்டதும் மிக சந்தோஷத்துடன் வீடுநோக்கிப் பறந்தேன்.

அடுத்து சனி, ஞாயிறு லீவு. திங்கள் அன்று பாடசாலைக்குப் போக பயமாக இருந்தது. அதிபரிடம் பிரம்படி வாங்கியவன் என்ன செய்வானோ? மனம் நினைத்தது. அவனுக்கு பயப்படுவதா? அதே மனம் துணிவைத்தந்தது. வகுப்புக்குள் சென்றதும் சரங்கனைப் பார்த்தேன். ஒரு புறம் பாவமாக இருந்தது. மறுபுறம் இதுதான் சரி என்று பேசாமல் இருந்தேன்.

இடைவேளை வந்து எல்லோரும் வெளியே போகும்போது கூட சாரங்கன் அமைதியாகச் சென்றது ஏதோ மாதிரியிருந்தது. குற்ற உணர்வு ஏதோ செய்ய நான் மட்டும் வகுப்புக்குள் இருந்துவிட்டேன். சில நிமிடத்தில் குணா வந்தான். அவன் கண்கள் என்னை முறைத்தன. படிப்பிலும் விளையாட்டிலும் அவன் முதல் மாணவன். அவன் ஏன் என்னை இப்படிப் பார்க்கிறான்?

"நீ செய்தது சரியா?" அவன் அப்படிக் கேட்டதும் திகைப்புடன் பார்த்தேன். இரவு தான் யோசித்தேன். இடைவேளை நேரம் நீ வந்ததையும் போனதையும் கண்டன். சாரங்கன் குழப்படிதான். ஆனா எந்தக் கெட்ட பழக்கமும் அவனிடம் இல்லை. அவன் மேல் உனக்கு கோபம். பழியைப் போட்டிட்டாய். இன்றைக்கு உன்னை அவதானிச்சா வெளியில வாறதா தெரியேல. ஏதோ சதி செய்யப் போகிறாய் என்று சாரங்கனையும் கூட்டி வந்திருக்கிறேன்".

கதவோடு நின்ற சாரங்கன் உள்ளே வந்தான். எனக்கு பயத்தில் உடல் உதறத் தொடங்கியது.

"பிளீஸ் என்னை மன்னிச்சிடுங்க இனிமேல் இப்படி செய்யமாட்டேன்" அழுதபடி கூறினேன்.

"முடியாது இப்பவே அதிபரிடம் நடந்ததை சொல்லுறேன்" குணா செல்ல தடுத்தான் சாரங்கன்.

"வேண்டாம் குணா நானே எடுத்ததாக இருக்கட்டும் தீபாவுக்கு என்மேல் கோபம். அதால இப்பிடி செய்திட்டா" என்றான் அவன்.

கதிரையில் சோர்வாக அமர்ந்தேன். அழுகை வெடித்துக் கொண்டு வந்தது. சாரங்கன் எவ்வளவு நல்லவன். நான் செய்த சதியை அறிந்தும் என்னை காப்பாற்றிவிட்டான். இனி எப்படி இவர்க[ள்] முகத்தில் விழிப்பது? நினைக்க நினை[க்க] தலை வலிக்கத் தொடங்கியது. காய்ச்சல் என்று ஆசிரியரிடம் சொல்லிவிட்டு இடைவேளை முடியமுன்பே வீட்டுக்கு ஓடிவிட்டேன். அம்மா சொன்னதை கேட்டதும் கவலை மறந்து சந்தோசம் ஒடிக் கொண்டது.

"அப்பாவிற்கு வவுனியாவுக்கு மாற்றம். நாளைக்கே வவுனியா போகிறோம். அங்கு உனக்கு பிடித்த பாடசாலையில் படிக்கலாம்."

நான் நினைத்துக் கொண்டேன், இனி ஆண்கள் படிக்கும் பாடசாலையில் படிப்பதில்லை என்று. என்னதான் உறுதி செய்தாலும் காலம் செல்லச் செல்ல சாரங்கனின் ஞாபகம் வளரத் தொடங்கியதை தடுக்கமுடியவில்லை. இன்று காதலை சொல்லும் அளவுக்குத் துணிந்துவிட்டேன்.

******

தூரத்தில் மாலாவின் வீடு தெரிந்தது. உற்சாகமாக இருந்தது. நேற்று கோயிலில் மாலாவின் அம்மாவைக் கண்டு இன்று வருவதாக சொல்லியிருந்தேன். வாசலில்

(11 ஆம் பக்கம் பார்க்க)



# நெருக்கடி நிலையில் சங்கரமடம்!



சங்கரராமன் கொலை வழக்கில் ஜெயேந்திரருக்கு உச்ச நீதிமன்றம் பிணை வழங்கித் தீர்ப்பளித்த சில மணி நேரத்தில் பொலிஸார் சங்கர மடத்துள் புகுந்து இளைய மடாதிபதியான விஜயேந்திரரைக் கைது செய்தனர்.

வரதராஜப் பெருமாள் கோயில் மேலாளர் சங்கரராமன் கடந்த ஆண்டு செப்டெம்பர் 3ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டார்.

இந்தக் கொலை தொடர்பாக சங்கராச்சாரியார் ஜெயேந்திரரை நவம்பர் 11ஆம் திகதி ஆந்திர மாநிலம் மகபூப் நகரில் வைத்துப் பொலிஸார் கைதுசெய்தனர்.

அதைத் தொடர்ந்து அவர் வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

இந்த வழக்கிலே விஜயேந்திரரின் தம்பி ரகு, மடத்தின் மேலாளர் சுந்தரேசன், கூலிப்படைத்தலைவர் அப்பு, ஒப்பந்தக்காரர் ரவி சுப்பிரமணியம் உட்பட 24 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.



இவர்களைத்தவிர மடத்தின் கணக்காளர் காலடி விஸ்வநாதனும் கைது செய்யப்பட்டிருந்தார். மடத்தின் கணக்குப் புத்தகங்களைத் திருத்தியதாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

ஜெயேந்திரருக்குப் பிணைகோரி உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. ஆனால், சங்கரராமன் கொலை வழக்கில் பிணை வழங்கப்படவில்லை. ஓடிட்டர் இராதாகிருஷ்ணன் தாக்கப்பட்ட வழக்கிலேயே சென்னை உயர்நீதிமன்றம் பிணை வழங்கியது.

சங்கரராமன் கொலை வழக்கிலும் ஜெயேந்திரருக்குப் பிணை வழங்க வேண்டும் என்று கோரி உச்ச நீதிமன்றத்தில் ஜெயேந்திரர் தரப்பு வழக்கறிஞர்கள் மனுத் தாக்கல் செய்தனர்.

அரச தரப்பு எதிர்த்தரப்பு வாதங்களைக் கேட்ட உச்ச நீதிமன்றம் ஜெயேந்திரருக்கு நிபந்தனையுடன் பிணை வழங்கித் தீர்ப்பளித்தது.

சங்கர மடத்துக்குச் செல்லக்கூடாது, பாஸ்போர்ட்டைக் கையளிக்க வேண்டும் என்ற சில நிபந்தனைகளின் அடிப்படையிலேயே ஜெயேந்திரருக்குப் பிணை வழங்கப்பட்டது.

அதே தினம், மாலை 5.00 மணிக்கு 3 பொலிஸ் வாகனங்கள் மற்றும் ஜீப்புகள் புடைசூழ பொலிஸார் சங்கர மடத்துக்குள் திடீரென்று சென்றனர்.

40நிமிடங்களுக்குப்பின்னர் விஜயேந்திரரை பொலிஸார் கைது செய்துஅழைத்துச் சென்றனர். விஜயேந்திரர் மடத்தின் வாசலில் இருந்து வெளியேறிய போது பக்தர்கள், 'பெரியவாள்', 'பெரியவாள்' என்று கதறி அழுதனர். மேலும் சிலர் 'ஜய ஜய சங்கர, ஹரஹர சங்கர' என்று கோஷம் எழுப்பினர்.

ஒரு மடாதிபதி பிணையில் விடுவிக்கப்பட்டு சங்கர மடத்தில் தங்குவதற்கு தடைவிதிக்கப்பட்ட நிலையில் மற்றைய மடாதிபதி கைது செய்யப்பட்டுள்ளார்.

பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள ஜெயேந்திரர் காஞ்சிபுரம் கலவையில் உள்ள கலவை சங்கரமடம் சென்று அங்கு தங்கி உள்ளார். மற்றவர் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு சிறைக்குள் தள்ளப்பட்டுள்ளார்.

காஞ்சி சங்கரமடத்தில் தற்போது இரு மடாதிபதிகளும் இல்லாமையால் அங்கு பூஜை வழிபாடுகளைச் செய்வதற்கு எவரும் இன்றி நிர்க்கதிநிலை இருந்து வருகிறது.

பழமை வாய்ந்த சங்கர மடம் பூஜையின்றி இருக்கும் நிலைமை குறித்து இந்து சமய மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தி நிலவுகிறது.

"விஜயேந்திரரைக் கைது செய்தது திடீரென எடுக்கப்பட்ட முடிவு அல்ல. பல்வேறு சாட்சியங்களின் அடிப்படையில் இவரைக் கைது செய்வது என்ற முடிவை எடுத்திருந்தோம். அதனை உச்ச நிதிமன்றில் தெரிவித்திருந்தோம்" என்கிறார் இந்த வழக்கு விசாரணையை மேற்கொண்டு வரும் காஞ்சிபுரம் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் கே. பிரேம் குமார்.

சங்கர மடத்தின் இளைய மடாதிபதி விஜயேந்திரர் கைது செய்யப்பட இருப்பது குறித்து பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு ஏற்கனவே தெரிவித்திருந்தது என்கிறார் பிரதமரின் பத்திரிகை ஆலோசகர் சஞ்சய் பாரு.



தமிழக முதல்வர் ஜெலலிதாவுக்கு இது தொடர்பாக கடந்த ஆறாம் திகதி பிரதமர் கடிதம் எழுதி இருந்தார். அந்தக்கடிதத்தில் "விஜயேந்திரர் கைது செய்யப்பட்டால் சங்கர மடத்தின் பூஜை நடவடிக்கைகள் முழுமையாகத் தடைப்படும் இதில் கவனமாக செயல்பட வேண்டும்" என்று குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், விஜயேந்திரர் கைதாவது தவிர்க்கமுடியாதது என்று தெரிவித்து விட்டார் ஜெயலலிதா. விஜயேந்திரரைக் கைது செய்வதற்கு வலுவான ஆதாரங்கள் இருப்பதாக ஜெயலலிதா நம்புகிறார்.

**-ஐப்ரல்-**

பிணையில் விடப்பட்ட மூத்த மடாதிபதி ஜெயேந்திரரின் வருகையை அடுத்து கலவை சங்கரமடம் தற்போது பரபரப்பாகக் காணப்படுகிறது. ஜெயந்திரரைக் காண்பதற்காக சர்வதேச பத்திரிகையாளர்கள் வந்து குவிகின்றனர். டிவி., நேரடி ஒளிபரப்புவாகனங்களும் வருகின்றன. இவற்றைக் கலவை வாழ்மக்கள் வேடிக்கை பார்க்கின்றனர். வேலூர் மாவட்டம், ஆற்காடு தாலுக்காவில் அமைந்துள்ளது கலவை கிராமம்.

காஞ்சிபுரத்தில் இருந்து 45 கிலோமீற்றர் தூரத்தில் இருக்கும் கலவை சங்கரமடம் ஆதி சங்கரரால் தொடங்கப்பட்டது. இது காஞ்சிபுரம் சங்கரமடத்துக்குச் சொந்தமானது. காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் அனைவரும் அவ்வப்போது கவலைக்கு வந்து செல்வது வழக்கம். பல பீடாதிபதிகள் தங்களது கடைசிக் காலத்தைக் கலவை சங்கர மடத்தில் கழித்துள்ளனர்.

தற்போது காஞ்சிபுரம் சங்கரமடத்தில் இருந்த சந்திர மவுலீஸ்வரரையும் சங்கர மட நிர்வாகிகள் கலவைக்கு எடுத்துச் சென்றுவிட்டனர். அங்கு ஜெயந்திரர் தினமும் சந்திர மவுலீஸ்வரருக்குப் பூஜை செய்கிறார்.

ஒருவர் வெளியில் வர மற்றவர் உள்ளே என்பது போல் காஞ்சிமடத்தின் இரு தலைவர்களும் தமிழக அரசால் பந்தாடப்பட்டிருக்கிறார்கள்.

உண்மையில் மர்மமான முறையில் நகருகின்ற இந்தக் கொலை வழக்கில் சங்கராச்சாரியார் ஜெயெந்திரர் சுவாமிககளும் இளையவர் விஜயேந்திரரும் தொடர்புள்ளவர்களா?

அப்படி இருந்தால் இவ்வளவு காலமும் ஏன் அதை உறுதியாக நிரூபிக்க தமிழகப் பொலிஸாரால் முடியவில்லை? என்ற கேள்விக்கணைகள் அனைவராலும் எழுப்பப்படுகின்றன.

ஜெயெந்திரர் வேலூர் சிறையில் இருந்த போது அவர் மீது பாலியல் குற்றச் சாட்டுக்கள் கூடச் சுமத்தப்பட்டன. தமிழகப் பெண் எழுத்தாளர் அனுராதா ரமணனுடன் சங்கராச்சாரியார் தவறுதலாக நடக்க முயன்றார் என்று கதைகள் பரப்பப்பட்டன.

உடனே அனுராதா ரமணனும் ஜெயெந்திரர் தன்னுடன் பாலியல் ரீதியாகத் தவறான முறையில் நடக்க முயன்றார் என்று பரபரப்பாகத் தகவல்களை ஊடகங்களுக்கு வெளியிட்டார்.

ஆனால், இப்போது அக்கதைகளைக் காணவில்லை. பாலியல் ரீதியாக ஜெயெந்திரர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் புஸ்வாணமாகிவிட்டன.

கலவைக் கிராமத்தில் தங்கியிருக்கும் ஜெயெந்திரர் சுவாமிகளை வடநாட்டுப் பகுதியில் தங்க வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் எனத் தமிழக அரசு சென்னை உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருக்கிறது.

எப்படியோ ஜெயெந்திரரை அவரது மத அனுஷ்டானங்களை நடத்தவும் அறநெறிப் பயணத்தைத் தொடரவும் தமிழக அரசும் பொலிஸாரும் விடப்போவதில்லை என்றே தெரிகிறது.

காஞ்சிமடத்தின் இளையவர் விஜேயேந்திரர் கைது செய்யப்பட்டமையும், ஜெயேந்திரர் பிணையில் விடுதலையாகி மடத்திற்குச் செல்லக்கூடாது என்று நீதிமன்றம் நிபந்தனை விதித்திருப்பதும் ஏதோ ஒரு பெரிய சதி இருப்பதை உணர்த்துகின்றன என்கின்றனர் சங்கர மடத்து பக்தர்கள். இந்து மதத்திற்கு எதிரான சக்திகளின் பின் தூண்டலில் இந்நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளனவா? என்று கேள்வி எழுப்பட்டு வருகிறது. பாரிய அளவிலான அரசியல் பின்னணியைக் கொண்டு சங்கரமடப் பிரச்சினை கிளப்பி விடப்பட்டுள்ளதா என்ற கேள்வியும் எழுகிறது.

## ஜெயேந்திரரின் கைதும் விஜேயேந்திரரும்

ஜெயேந்திரர் சுவாமிகள் கைதான நிமிடத்தில் இருந்து இளையவர் விஜயேந்திரர் பெரிதாக [illegible] பிரதிபலிப்பையும் காட்டவில்லை. சிறைக்கோ, நீதிமன்றத்திற்கோ சென்று தனது குருவைப் பார்க்கவில்லை. புதுடில்லியிருந்து பி.ஜே.பியின் எம்.பிக்கள் குழு வந்து 'இதை இப்படியே விடக்கூடாது. நீங்கள் வெளிப்படையாகக் களமிறங்கி மத்திய அரசுக்கும், தமிழக அரசுக்கும் எதிராகப் பக்தர்களை படை திரட்டுங்கள்.' என்று கேட்டுக்கொண்டபோதும் விஜயேந்திரரிடமிருந்து பிரதிபலிப்புகள் பெரிதாக இருக்கவில்லை.இப்போது அதே வழ்க்கில் அவரே [illegible]தாகி இருக்கிறார்.



# கவிதைப் பூமடல்

## சிரிப்பிழந்த மழலைகள்

இறைவா!
என்னதான்
குற்றம் செய்தார்கள்
எங்கள்
பிஞ்சுக் குழந்தைகள்?
குழந்தையும் தெய்வமும்
ஒன்றாம்
எல்லோரும்
சொல்கிறார்கள்.
அது உண்மையெனில்
அந்த வெள்ளைச்சிரிப்பு
மழலைகளை
ஏன் எதற்காக
தண்டித்தாய்?
பொம்மைகளுடன்
சிரித்து மகிழ்ந்து திரிந்த
எங்கள் குழந்தைகள்
பல
இரக்கமற்ற கடற்தாயின்
கோரத்தாண்டவத்தில்
பலிகொள்ளப்பட்டார்கள்.
தப்பிப் பிழைத்த
பிஞ்சுக்குழந்தைகள்-தம்
வெள்ளை
சிரிப்பை இழந்து
விறைத்த பார்வையுடன்
உணர்விழந்த நிலையில்...!
அதைப் பார்க்கும்போது
எங்கள் விழிகள்
குளங்களாய்...!
கடல்தாயே...
உனக்கு இரக்கமே
இல்லையா?
பிஞ்சுயிர்களையும்
பறித்து
எஞ்சிய உயிர்களின்
உணர்வுகளையும்
உறிஞ்சிக்குடித்துவிட்டாயே?
உலகமறிந்தவர்கள்
ஓரளவு தேறலாம்
நீ தந்துவிட்டுச்சென்ற
துயரிலிருந்து!
எதுவுமே அறியாத
இந்தப் பாலகர்களின்
இதயத்தில்
கோரவடுவாய்
இந்தக்கோர நிகழ்வுகள்
பதிவாகிவிட்டனவே!
இறைவா
உன்னிடம்
இரந்து கேட்கிறோம்
எங்கள் மழலைகளின்
இதயத்துக்கும்
உணர்வுக்கும்
உதடுகளுக்கும்
உயிர் கொடுத்து
எங்கள் பிஞ்சு மழலைகள்
மீண்டும் கொஞ்சமாவது
சிரித்து விளையாட
வரமளித்துவிடு!

கல்வடி றொபட்,
கருந்துறைச்சிறைச்சாலை.

## சோகச்சின்னங்கள்

இன்னும் சில
கிராமங்கள்
வீடுகள்
வீதிகள்
பாதி
உயிரோடு...
பல
அப்பாவிகள்
பல
பாடசாலைகள்
எஞ்சிக்கிடக்கின்றன
எங்கள் பகுதியில்!
அலையே
அழிக்க வந்த
நீ
அவைகளையும்
ஏன்
மிஞ்ச
வைத்தாய்?
சுனாமி தந்த
சோக
சின்னங்கள்
என்று
சொல்லிக்கொள்வதற்கா?

எம்.ஜவாஹிர்,
ஹொரவப்பொத்தானை.

## சமுத்திரதேவி

வாழ வைத்த தெய்வம்
இன்று
வாழ்வை அழித்ததோ
ஆழ்கடல் கரையில் வந்து
ஆர்ப்பரித்ததோ

சமுத்திரமே இல்லாத
நாடுகளுண்டு— அது
தரித்திரத்தில் வாழுகின்ற
சரித்திரமுண்டு.

நாலபுறமும் கடலிருக்க
நாங்கள் மகிழ்ந்தோம்—இன்று
பால்வடியும் பிஞ்சைக்கூட
பறிகொடுத்தோம்.

செம்படவர் போற்றிவரும்
சமுத்திரதேவி
எம்மிடமேன் கோபங்கொண்டாய்
சொல்லடி தேவி?

சண்டைகளும் சச்சரவும்
இன்னுமெதற்கு?
கண்டபின்பும் உணர்ந்திடுமோ
அரசு தரப்பு?

பா.தங்கத் தமிழன்,
வல்வை.

## உன் நினைவு

சிந்திக்கும்
போதெல்லாம்
சிந்தனையில்
உன் நினைவு
தப்பிக்க முடியாமல்
தவிக்கிறது
என் மனசு.
தரணியில்
உனைக்காண
தவம்
என்ன செய்தேனோ?
தலையணையில்
உன் நினைவு
துடம்புரள
வைக்கிறது.
தாரமாய் நீ வரைக்கும்
தவறாது
உன் நினைவு.

கு.சுகந்தினி,
புளியம்பொக்கணை.

## காத்திருப்போம் காதலிப்போம்

நாம் நிஜத்தில்
இருக்கும் தூரங்கள்
நினைவில்
தெரிவதில்லை.
எதிரில் தெரியும்
ஏக்கங்கள்
கனவில்
கருவதில்லை.
காலம் பிரிவை
தந்தாலும்
பிரிவதில்லை.
காத்துக்காத்து
காதல்
செய்வோம்
காதல்
அழிவதில்லை.
ஆண்டுகள் நூறு
சென்றாலும்
ஆசை
மரிப்பதில்லை.

ச.பிரீத்திகா,
புத்தளம்.

## வாடிய மனம்

அன்பே,
பூக்களெல்லாம்
உன்
பாதச்சுவடாய்
தெரிந்தாலும்
உன்
வருகை தெரியாமல்
வாடித்தான்போகிறது
என் இதயம்.

பூ.சுதர்சினி,
கொட்டகல.

## வார்த்தை வேசம்

மரணமும் பிரிக்காது
மயக்கிய வார்த்தை
விதையாக இருந்த நான்
விருட்சமானேன் அன்று!
மறந்துவிடு என
நடந்துபோகிறாய்
மிதித்து மிதித்து
நிலத்தையல்ல
என் நெஞ்சத்தை

கு.தவசீலன்,
விசுவமடு.

## காற்றே...

காற்றே
மெல்ல வீசு...
உந்தன்
தளிர்க்கரங்கள்
போதும்!
இந்தப்பிரபஞ்சமே
எனக்கோர்
அழகிய மஞ்சம்!
வேறு என்ன சொல்ல?
காற்றே உன்
கனிமொழி வேண்டி
காத்துநின்றேன்.
கடலின் ஓர்
அலையாய் வந்தாய்.
நெஞ்சுக்குள்
உன்னை
நினைத்தேன்.
மூச்சாய் ஆகி
உள்ளுக்குள் வந்தாய்!

ஜே.யுமானா,
யாழ்ப்பாணம்

## வேறு காரணம்

காற்று வாங்க
வந்தோம்
நேற்றுவரை
மகிழ்வோடு!
இன்றும்
வருகின்றேன்
வெறுப்புடன்
தனியாக...!
உன்
அசுரத்தனத்தால்
பலியாகிப்போன
என் இனியவளின்
நினைவுகளை மீட்க!

மு.சந்திரகாந்தா,

## என் உயிர் நீயே!

மின்னலென
உன்
பார்வை
என்
விழிகளுடன்
சங்கமித்து
என்
இதயவீட்டில்
ஓரிடம் கேட்டது.
பரிதாபத்தில்
ஓரிடம்
கொடுத்தேன்.
இன்று நீயோ
என்
இதய
அறைகளை
அடைத்து
கணப்பொழுதும்
துடிக்க
வைக்கிறாய்.
உன்னை
ரணப்படுத்த
என்னால்
முடியவில்லை.
ஏனெனில்
என் உயிர்
நீயல்லவா?

தி.தனுஷியா,
சாவகச்சேரி.

## நீ

நீ
என்
கண்கள் பார்க்க
பிரமன்
வெளியிட்ட
நடமாடும் அல்பம்.
நான்
காணும்போது
மூடாத
உன் மூன்றாம்
பிறைச்சிரிப்பில்
உருவான
கன்னக்குழியில்
தினம் விழுந்து
கவிகளில்
மீழக்காரணமானவன்.
தினசரி இவன்
தரிசனம் பெற்றுவா
திருமால் காத்துவரும்
நிலாவெளிச்சிற்பம்.

ஆர்.பிரகாஷ்,
ஒட்டுசுட்டான்.

## சுனாமியும் நீயும்!

சுனாமி
ஆழிப்பேரலையும்
உன் ஆழமான
உள்ளமும்
ஒன்றுதான் பெண்ணே!
இரண்டுமே
பறித்தல் செய்கையைத்தான்
செய்கின்றன.
என்ன பாவம் செய்தோம்?
எல்லாப் பெண்களும்
ஒன்றுதான்!
அம்மா மட்டுமே
என் மீது இரக்கம்

ஜப்ரல் அஸ்கான்

## திசைமாறிய பயணம்

சுதியான
என் வாழ்வில்
விதி வந்து
சதி செய்ததால்
என்கதியே
திசைமாறிவிட்டது.
மனதை
மதித்திடா
மனிதர்களாலே
மகிழ்ச்சியை
இழந்தேன்.
உணர்வை
புரிந்திடா உறவுகளால்
உள்ளம் உடைந்தேன்.
சுயநலம் கொள்
நெஞ்சங்களால்
சந்தோசம் மறந்தேன்.
சமுதாயம் என்ற
சாக்கடையால்
சத்தியம் துறந்தேன்.
உயிரைத்தவிர
இனி
இழப்பதற்கு
என்னிடம்
எதுவுமில்லை.

யஸ்மினா,
மீசாலை.

## காதல்

கனவுகளையும்
கற்பனைகளையும்
தினம்தந்து
முடிவில்
முகவரியைத் தொலைத்து
முகாரி பாட வைப்பது!

எஸ்.வைசாலி,
யாழ்.பல்கலைக்கழகம்.

## சுனாமி அலைக்கு சுருளாத நினைவுகள்

அலையோடு கதைபேசி
அன்றாட வாழ்வுக்காய்
ஆழ்கடல்தான் சென்று
மீன் அள்ளி வந்தநாள்...
அலை உருண்டு வந்து
என்
அடிப்பாதத்தை
முத்தமிட்ட அந்த நாள்...
அப்பாவின்
அரவணைப்பில் அன்றாடம் நாம்
அன்புகொண்டு வாழ்ந்த நாள்...
கடற்கரையில்
பள்ளிகொண்டு
கடைசிவரை
அவ்வாழ்வுக்காய்
கடவுளை
வேண்டிய நாள்...
கடைசிவரை
இவ்வாழ்க்கை
கேட்டதால்
கடைசிப் பொழுதாக
கரைந்து போன அந்தநாள்...
அத்தனையும்
அசையா நினைவுகளாய்
அடிமனதில்
அடங்கிக்கிடக்கிறது.
அன்றைய நிகழ்வுகளை
இன்று
அசைபோட்டுப் பார்க்கிறேன்...
பாதங்களை
முத்தமிட்ட
அலை-இன்று
பரிதவிக்க வைத்துவிட்டு
என்னை
பாராமல் கிடைப்பதேனோ...?
அன்னைக்கு அன்னையாய்
இருந்து
அரவணைத்த அப்பா எங்கே?
அயராது பாடுபடுகிறான்
என்று
ஆழ்கடல் இளைப்பாற
வைத்ததுவோ?
ஆயிரம் உறவெனக்கு
அன்று!
அனுதாபம் கூறக்கூட
யாருமில்லை இன்று!
அத்தனை
சொந்தங்களையும்
அடியோடு அழித்தவன்
அவனியில்
என்னை மட்டும்
அனுபவிக்க விட்டானோ?
இல்லை...
இலங்கைக் கரையோர
அத்தனை உறவுகளுக்கும்
இவர்கள் இன்னல்களை
எழுதிவிட முடியுமோ
இப்படி ஓர் ஏட்டில்?

கே.எஸ்.துஷ்யந்தன்,
மல்லாவி.




## ஆறுமுகத்தான் கோட்டைக்குள் அடிதடியாம்!

'ஊருக்கும், உலகுக்கும்தான் உபதேசம். அது உனக்கும் எனக்கும் இல்லையடி கண்ணே' என்றாராம் அந்தத் தலைவர். அந்த இயக்கமோ காந்திய வாதத்துடன் அஹிம்சை வழியில் ஆரம்பிக்கப்பட்டதாம். ஆனால், இப்போ அடிதடியும், அடக்குமுறையும்தானாம்,

அண்ணன் என்பதும், தம்பி என்பதும் வெளிவேசம்தானாம். பாட்டும்நானே பாவமும் நானே என்பதுபோல், அரசனும் நான்தான் அமைச்சனும்நான்தான் என்றவேதாந்தத்தின்படி அமைச்சின் யாப்பையே மாற்றி அமைத்து அதிகாரங்களையும் தன் கையில் வைத்துக்கொண்டாராம். பெரிய ஐயா கூட இப்படி அடக்குமுறை அதிகாரங்களுக்கு ஆசைப்படவில்லையாம்.

ஆனால், ஐயாவின் வாரிசு எல்லாவற்றையும் தன் கையில் வாரிச்சுருட்டி வைத்துக்கொண்டு அட்டகாசம் செய்கிறதாம். அண்மையில் நடைபெற்ற பொது விருந்து வைபவம் ஒன்றில் கலந்துகொண்ட இந்த அமைப்பின் சில பெரிசுகள்(பெயரில் மட்டும்தான்) இப்படி வாய்விட்டு ஆதங்கத்துடன் உரையாடிக்கொண்டிருந்தனர்.

பேனா நண்பருக்கு இது போதாதா? நண்பர்களுடன் உரையாடிக்கொண்டே தனது கவனத்தை அடுத்த மேசைப்பக்கம் திருப்பினாராம். டம்மி, பொம்மை, ரப்பர் ஸ்டாம்பு அப்படி இப்படி என்று சில வார்த்தைகள் வெளிப்பட்டனவாம்.

அப்போதுதான் மத்திய மாகாணத்திலும், ஊவா மாகாணத்திலும் இருந்து புதிதாக முளைத்த இளவட்டங்கள்தான் அப்படிக் கதைத்தனராம்.

அதாவது மரக்கறித்தோட்ட முத்தர் வெறும் டம்மிதான். அவரால் எதையும் செய்ய முடியாது. இரு என்றால் இருக்கணும், எழும்பு என்றால் எழும்பணும். எல்லாமே தலைவர் தான். டம்மியானவர் ஆசனத்தில் கூட சுதந்திரமாக அமர முடியாதாம். ஆசன நுணியில் தான் பட்டும் படாமல் பயந்து பயந்து அமர்கிறாராம். எப்போது தட்டிப்பறிக்கப்படுமோ என்ற பயத்துடன் காட்டும் இடங்களில் எல்லாம் கையெழுத்துப்போடுகின்றதாம். அமைச்சில் உடன் இருப்பவர்கள் எல்லாம் தலைவரின் அடியாட்களாம். பெரிதாக மூச்சுவிட்டாலும் தலைவரிடம் போய்விடுகிறாராம். இப்படி வெட்கம் கெட்ட ஒரு பதவின்தேவையா, டம்மியாக இருக்க ரோசம் இல்லையா என்று வசை பாடினார்.

கதை ரொம்ப இன்ட்ரெஸ்டாக இருந்தது. நண்பருக்கும் ஏக குஷி. கட்லட் ஒன்றை கடித்துக்கொண்டே நாற்காலியை சற்று நெருக்கமாகத் தள்ளிப்போட்டுக்கொண்டாராம்.

இப்போது அவர்களுடைய சம்பாஷணை ஊவாவுக்குத்தாவியதாம். இவனுங்க எல்லாம் என்ன மனுஷங்க! பேரப்பிள்ளை எடுக்கும்போது இப்ப இளம் குமரிகள் கேட்கிறது. பதவியும், அதிகாரமும் வரவர இளசுகளின் உரசல்களும் அதிகம் தேவைப்படுகிறதாம்.

ஆபிசுக்கு உதவியாள் என்றுதான் எடுக்கிறார்களாம். கடைசியில் பள்ளியறைப் பாவையாக்கி வாழ்க்கையிலும் நிரந்தர பங்காளியாக்கிக் கொண்டாராம் என்று பொருமினார் தபால் காரரின் வாரிசு.

''நீ என்னத்தைத் துள்ளினாலும், அங்கே செல்லாது. அது காலம் காலமாக ஊவாவில் கொட்டை போட்டது. நீ மச்சான் நேற்றுத் தான் வந்தாய். கொஞ்சம் அடக்கி வாசித்தால் உனக்கு நல்லது. எது எப்படியோ நாம போட்ட திட்டத்தின்படி நமக்கென்று ஒரு கூட்டத்தைச் சேர்க்க வேண்டும். டம்மிக்கும், பிரதிக்கும் எதிரான பிரச்சினைகளைக்கிளப்ப வேண்டும். டம்மியை முதலில் தூக்கி எறிய வேண்டும். நம்மைப் போன்றவர்களை அமர்த்தும்படி வற்புறுத்த வேண்டும். அப்புறம் பிரதியைப் பார்ப்போம்.'' என்று கூறினாராம் சகபாடி.

கையில் இருந்த சிகரெட் கீழே விழவே அதை எடுக்கக் குனிந்தவர் பக்கத்து மேசையில் நண்பர்கள் கூட்டம் இருப்பதை அப்போது தான் கண்டனராம்.

ஏதோ அவசரமாகப்போவதுபோல் அசட்டுச்சிரிப்பு ஒன்றை உதிர்த்துவிட்டு மேசையை காலி பண்ணிவிட்டனராம். இது எப்படி எங்கே பார்த்தாலும் குத்து வெட்டுத்தான்.

## ஊர்த்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு அடித்துவிட்டாராம்

''ஐயா தெரியாதையா! இந்தவிடயம் இவ்வளவு சீரியஸாகப்போகும் என்று. தண்ணீருக்குள்ளே முட்டையைப்போட்டாலும் அது மேலே வந்துவிடும் என்ற கதையாகயில்ல ஆகிப்போச்சு!'' என்று ஆதங்கப்பட்டார் அதி உயர் மன்றின் பிரதியான ஆனந்தன்.

''அந்தப் பிரதியானவர் அப்படி என்ன ஐயா செய்துவிட்டார்'' என்று பிரதியின் சகாவிடம் விசாரித்தார் நண்பர்.

''என்னசார் இந்த ஐயாவோட வண்டவாளம். ஊரே கேளு, நாடே கேளு என்று ஆகிப்போச்சு! உங்களுக்குத் தெரியாதா'' என்று நண்பரிடமே எதிர்க்கேள்வி கேட்டார் பிரதியின் சகாவானவர்.

''இது என்ன ஐயா நான் உங்களிடம் கேட்டால் நீங்கள்என்னிடமே திருப்பிக் கேட்கிறீர்கள்! விசயத்தை விவரமாகக் கூறுங்களேன்'' என்றார் நண்பர் விடாப்பிடியாக.

''என்னசார் விடமாட்டீங்க போல இருக்கே! பதுளை, பண்டாரவளை பிரதேசத்தில் உள்ள வர்த்தகர்கள்சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட நமது சொந்தங்களுக்குப் பொருட்களை வாரிவழங்கினார்கள் இல்லையா? அந்தச் சாமான்களை எல்லாம் லொறிகளில் ஏற்றிக்கொண்டு மட்டக்களப்புக்குப் போய் பாதிக்கப்பட்டவர்களுக்கு விநியோகம் செய்தனர்.

பொருட்களை விநியோகித்த மனுசன் வாயை வைத்துக்கொண்டு சும்மா இருக்க வேண்டாமா? காங்கிரஸ் மேடையில் பேசுவதுபோல் பேசித்தள்ளிவிட்டார்.

அதாவது 'எங்கள் ஸ்தாபனமும், தலைவர் தம்பியும் முதல் கட்டமாக இந்த உதவிகளை வழங்கி உள்ளனர். மேலும், என்ன உதவி வேண்டுமானாலும் செய்யத்தயாராக இருக்கிறோம். எங்கள் காங்கிரஸ் உங்களுக்கு சேவை செய்வதற்காகவே அமைக்கப்பட்டது' என்று முழங்கிவிட்டாராம்.

பொருட்களைவழங்கிய வர்த்தகர்களைப் பற்றி ஒரு வார்த்தை கூட சொல்லத்தவறிவிட்டனராம்.

இதனால் ஆத்திரம் அடைந்த வர்த்தகர்கள் பிரதியான ஆனந்தரை மொத்தோ மொத்து என்று சாத்திவிட்டனராம், கைகளால் அல்ல வார்த்தைகளால்.

'என்ன ஐயா! நினைத்துக்கொண்டீர். உங்கள் சங்கமும், உங்கள் தலைவரும் ஒரு தம்படி கூட தரவில்லை. முழுக்க முழுக்க வர்த்தகர்களாகிய நாங்களும், பொதுமக்களும் இல்லையா கொடுத்தோம். நீர் என்னவென்றால் ஏதோ உங்களுடைய தலைவரும், சங்கமும் பெரிதாக கிழித்துவிட்டதாக முழங்கிவிட்டீரே! என்ன ஊர்த்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு அடித்துவிட்டீரே!' என்று ஆள் ஆளுக்கு வாட்டு வாட்டி எடுத்துவிட்டாராம்.

அதோடு விட்டுவிட்டனரா? பிரதி ஆனந்தனின் செயலை அம்பலப்படுத்தி நோட்டீஸ் அடித்து டவுன்பூரா ஒட்டிவிட்டனராம். பாவம் ஆனந்தர்.ஆப்பு இழுத்த குரங்காக மாட்டிக் கொண்டு தடுமாறுகின்றாராம்'' என்றார் பிரதியின் சகா.

விதி யாரை விட்டது?

# சுனாமியைவிட மோசமானவர்கள்!

டிசம்பர் 26 ஆம் திகதி காலி கடலில் பேரலைகளால் அள்ளிச் செல்லப்பட்ட ஒரு மாணவியை ஒருவர் நீந்திச் சென்று காப்பாற்றுகிறார்.

காப்பாற்றியவர் அம் மாணவியை தூக்கிச் சென்று பற்றை ஒன்றுக்குள் வைத்து பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்துகிறார்.

இந்தச் சம்பவம் நிகழ்ந்து மூன்று வாரங்கள் கழிந்து விட்டன. இத்தகைய சம்பவங்கள் தற்பொழுது ஒன்றன்பின் ஒன்றாக வெளிவந்து கொண்டிருக்கின்றன.

நாட்டின் தென்பகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் மனதை உருக்குபவையாக இருக்கின்றன. நினைத்துப் பார்க்க முடியாதவையாக இருக்கின்றன.

அன்றைய தினம் அதாவது சுனாமி பேரலைகள் அழிவை ஏற்படுத்திய தினம் - காலி பஸ் நிலையத்தில் இருந்து எடுக்கப்பட்ட படங்கள் சமீபத்தில் 'டெய்லி மிரர்' பத்திரிகையில் பிரசுரமாகி இருந்தன.

இளம்பெண் ஒருவரை சடலமாகவோ அல்லது உயிருடனோ இருவர் கடலில் இருந்து மீட்டுவருகின்றனர். கரைக்கு கொண்டு வந்த கையுடன் அந்தப் பெண்ணின் நகைகளைப் பிடுங்கி எடுப்பதில் இருவருக்கும் இடையில் சண்டை ஏற்படுகிறது.

சுனாமியை விட மோசமான இப்படியான கொடுமைகள் நாட்டின் தென்பகுதிக் கரைகளில் இடம் பெற்றுள்ளன.

சுனாமி அலை ஒரு சில நிமிடங்களே நீடித்தது. மூன்று தடவைகள் அலை வீசி மக்களை சொல்லொனா துன்பத்தில் ஆழ்த்தியது. ஆனால் மக்களின் துயரம் தான் இன்னும் ஆறவில்லை.

முதலாவது அலையின்போது மக்கள் ஓட ஆரம்பித்தனர். இரண்டாவது அலையின் போது தமது உயிரைக் காப்பாற்றினால் போதும் என்ற நிலை ஏற்பட்டது. மூன்றாவது அலை முதல் இரண்டு அலைகளையும் விட மோசமாக இருந்தது.

இவ்வாறு ஓடியவர்களில், கடல் அலையில் சிக்குண்டவர்களில் பலரே கயவர்களின் கைகளில் சிக்கினர். சிலர் கற்பை இழந்தனர். நகைகள், பணத்தை இழந்தனர்.

சுனாமியின் போது கொள்ளைகளில் ஈடுபட்ட ஒருவரை மாத்தறையில் நாம் சந்திக்க நேரிட்டது.

கொள்ளை அடிப்பதில் மும்முரமாக ஈடுபட்ட அவர் தனது மனைவி குழந்தையைக் காப்பாற்றத் தவறிய நிலையில் விரக்தி அடைந்து தான் கொள்ளைஅடித்த நகைகளை கல்லினால் குத்திக் கொண்டிருந்தார்.

கொள்ளை அடித்த பணத்தையும் அவர் எரித்திருந்தது தெரியவந்தது.

தான் அபகரித்த நகைகளுடனும், பணத்துடனும் இவர் வீடு சென்ற போது வீடு இருந்த இடமே தெரியாது வெளியாகக் காணப்பட்டது. காலில் ஏதோ தட்டுப்படவே கீழே பார்த்தார். அவரது மனைவியும் குழந்தையும் பிணமாகக் கிடந்தனர். இந்த அதிர்ச்சியினால் மூளை குழம்பிவிட்டது அவருக்கு.

தான் அபகரித்த நகைகளை சில அகதி முகாம்களுக்கு எடுத்துச் சென்று உரிமையாளர்களிடம் ஒப்படைக்க முயற்சித்தார். சில நகைள் உரியவர்களிடம் சேர்க்கப்பட்டன. ஏனைய நகைகளே இவரின் கைவரிசைக்கு இலக்காகி கல்லுக்கு இரையாகி சிதறிக் கொண்டிருந்தன.

சுனாமிக்குப் பயந்து ஓடிய பலருக்கு தமது சங்கிலி அறுத்தெடுக்கப்பட்ட விடயம் தெரியவரவில்லையாம்.

முகாமில் இருக்கும் போது கழுத்துப் பகுதியில் நோவு இருப்பதை உணர்ந்து கழுத்தை தடவியபோது தான் சங்கிலி பறிபோன விடயம் தெரியவந்ததாக பலர் தெரிவித்தனர்.

வைத்தியசாலைகளுக்கு கொண்டு வரப்பட்ட சடலங்களில் சில பெண்களில் சடங்களில் ஆடை கிழிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டன என்றும் பெண்களில் உள்ளாடைகளில் உயிர் அணுக்கள் காணப்பட்டன என்றும் தகவல்கள் கூறுகின்றன. இவர்கள் பாலியல் சேட்டைக்கு உள்ளாகி இருக்கலாம்.

காலி தலாப்பிட்டிய பகுதியில் சுனாமியின் போது நகைகளைக் கொள்ளை அடித்த ஆறு இளைஞர்கள் பொதுமக்களால் தாக்கப்பட்டு பொலிஸில் ஒப்படைக்கப்பட்டனர்.

தாக்கப்பட்டவர்களில் ஒருவர் பின்பு உயிரிழந்தார். இறந்தவரின் உடல்களை வைத்து வருமானம் தேடிய கும்பல்களும் உள்ளன.

**-வியாஸா-**

பல்கலைக்கழக மாணவன் ஒருவரின் தாயாரின் சடலத்தை மீட்டுத் தருவாதாகக் கூறி அம் மாணவனிடமிருந்து ஒருவர் 5 ஆயிரம் ருபா பெற்ற சம்பவம் ஒன்றும் இடம் பெற்றுள்ளது.

பெண்களின் காதுகளில் இருந்த தோட்டை கழற்றுவதற்காக காதை அறுத்தெடுத்த சம்பவங்கள் பற்றியும் மோதிரத்துக்காக விரலை வெட்டிய சம்பவங்கள் பற்றியும் தகவல்கள் வெளியாகிஉள்ளன.

(8ஆம் பக்கம் பார்க்க)

**பலரது பாராட்டையும் பெற்ற மனோதத்துவ வைத்தியம்**
**(GENERAL PSYCHOTHERAPY)**

இளம் சதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன்தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்க முடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம்.ஆரம்ப மனநோய் உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரழிவு, தலையிடி, வாதம், குழந்தை பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

**பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுகம் அவர்களை நாடுங்கள்**

**Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)**

மனித உறுப்புக்கள் அனைத்தும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து-வெளிப்படுதலிலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலம் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

**வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு**

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரை செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஓடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

**கொழும்பில்...**

ஜனவரி 20 – 26 வரை சந்திக்கலாம்
New Ahmed Turist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 368427, Cell. 0722 910796
**Hot Line: 0777 569205**

**வவுனியாவில்...**

பெப்ரவரி 05 - 06 ஆம் திகதிகளில்
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
**Hot Line: 0777 569205**

**யாழ்ப்பாணத்தில்...**

ஜனவரி 10 -16
A.S.N. சுற்றுலா விடுதி
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
**Hot Line: 0777 569205**
Tel No. 021 2223181
021 222 5399

பதிவுகளை முன்கூட்டியே செய்துகொள்ளுங்கள்

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road
Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.

சுடர் ஒளி
ஜனவரி 23 - 29, 2005
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு—14 டெலிபோன்: 011-4734401—6
பாக்ஸ் : 011 - 4734404
E-mail: editorial@sudaroli.com

## மத்தியில் குவியும் நிவாரணம்

டிசம்பர் 26 ஆம் திகதி இடம் பெற்ற சுனாமி பேரலைகளின் தாக்கத்தின் போது நாட்டின் வடக்கு, கிழக்குப் பகுதிகளும், தென் பகுதியும் பேரழிவுகளைச் சந்தித்தன.

வடக்கு, கிழக்கைப் பொறுத்தமட்டில் அழிவுகளும் இழப்புக்களும் தமிழ் மக்களுக்கு பரிச்சயப்பட்டுப் போனவை தான். எனினும் எவரும் எதிர்பாராத விதத்தில் பெரும் அளவில் உயிரிழப்புக்களும், பேரழிவுகளும், இடம் பெயர்வுகளும் மிகக் குறுகிய நேரத்தில் ஏற்பட்டது பேரதிர்ச்சியைத் தந்தது.

இந்த அனர்த்தத்தின்போது பல இடங்களில் படையினரும் புலிகளும் ஒன்றாக இணைந்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர். படையினரும், புலிகளும் கடலில் ஒன்றாக நீந்திச் சென்று மீட்புப் பணியில் ஈடுபட்ட சம்பவங்களும் இடம்பெற்றிருந்தன.

அனர்த்தத்தின்போது ஏற்பட்ட இந்த சூழ்நிலை இன நெருக்கடிக்கான சமாதான முயற்சிகளிலும் ஒரு சுமுகமான சூழ்நிலையைத் தோற்றுவிக்கலாம் என்று நம்பப்பட்டது.

ஒரு வருடத்துக்கு மேலாக இடைநிறுத்தப்பட்டிருக்கும் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்க வாய்ப்பு உருவாகி இருப்பதாகவும் கருதப்பட்டது.

ஆனால், அந்த நம்பிக்கைகள் எல்லாம் தற்பொழுது கரைந்து கொண்டிருக்கின்றன. சுனாமி அனர்த்தத்தின் பின்பு இடம் பெற்ற சில சம்பவங்களால் புலிகளுக்கும், அரசுக்கும் இடையிலான இடைவெளி அதிகரித்துவருகிறது.

ஐ.நா.பொதுச் செயலாளர் கொபி அனானின் இலங்கை விஜயத்தின் போது புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு அவர் செல்வதற்கு ஜனாதிபதியினால் தடை விதிக்கப்பட்டமை—

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு அனுப்பப்படும் நிவாரணங்கள் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு விநியோகிக்கப்படாமை — ஆகிய காரணங்களினால் அரசுக்கும், புலிகளுக்கும் இடையில் முறுகல் நிலை உருவாகி வருகிறது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகள் அனைத்தையும் இலங்கை அரசு மத்தியிலேயே குவித்து வைத்துள்ளது.

புனர்நிர்மாணம், மீள்கட்டுமானம், அபிவிருத்தி நடவடிக்கைகள் எல்லாம் கொழும்பை மையப்படுத்தியே மேற்கொள்ளப்படுகின்றன. மத்தியில் குவியும் எந்த நடவடிக்கையும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை ஒரு போதும் பூர்த்தி செய்யப்போவதில்லை.

நாட்டை மீளக்கட்டி எழுப்பும் திட்டத்திலும் வடபகுதி புறக்கணிக்கப்பட்டுவிட்டது.

தேசிய அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்களின் வாழ்வைக் கட்டி எழுப்பும் அரசின் பெரும் திட்டத்தை ஜனாதிபதி கடந்த வாரம் அறிவித்தார். அதில் வடக்கிற்கான மீள் கட்டுமானத் திட்டம் எதுவும் இல்லை. ஜனாதிபதியின் தலைமையிலான, நாட்டை மீளக் கட்டி எழுப்புவதற்கான விசேட செயலணியினால் தயாரிக்கப்பட்ட திட்டத்திலேயே வடக்கு முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

நிவாரணப்பணிகளில் அரசு நேர்மையாக நடப்பதாகத் தெரியவில்லை. வடக்கு, கிழக்கு மக்களை கருத்தில் கொள்ளாமலேயே அரசு செயற்படுகிறது.

நூற்றுக்கு நூறுவீதம் சிங்களவர்களைக் கொண்டுள்ள இராணுவத்தினரை வடக்கு, கிழக்கில் உள்ள இடம் பெயர்ந்த மக்களுக்கான நலன்புரி நிலையங்களில் அரசு குவித்துள்ளது.

இந்த நலன்புரி நிலையங்களில் தங்கி உள்ள தமிழ் மக்கள் சுனாமியினால் தமது வீடு வாசல்களை முற்றாக இழந்தவர்கள். ஆகவே, இந்த மக்களின் அவசர தேவைகளை இராணுவத்தினால் நிறைவு செய்ய முடியாது. தமிழ் மக்கள் இராணுவத்தை நம்பும் நிலையிலும் இல்லை.

உலக உணவுத் திட்ட நிறைவேற்றுப் பணிப்பாளர் வன்னியில் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்த போது, சர்வதேச நாடுகளின் உதவி தமிழ்ப் பிரதேசங்களுக்கு கிடைக்கவில்லை என்பதை தமிழ்ச்செல்வன் விளக்கமாகத் தெரிவித்திருந்தார்.

வெளிநாடுகளில் இருந்து வரும் அரசு தலைவர்களை தமிழ் தேசிய கூட்டமைப்பினர் சந்திக்கும் போதும் இதனையே தெரிவித்து வருகின்றனர்.

ஆகவே, நிவாரண உதவிகளில் அரசு வடக்கிற்கு கதவடைப்புச் செய்துவருவதற்கும், மத்தியில் குவித்து வருவதற்கும் எதிராக சர்வதேச அழுத்தம் அரசுக்கு அவசியம் தேவை.

# பிரபாவின் பிரசன்னத்தால் வதந்திகளுக்கு ஆப்பு!

தமிழர் தாயகப் பகுதிகளில் கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக் சேவையாற்றியவர்களையும், புலம்பெயர் நாடுகளில் இருந்து தாயகத்தைக் கட்டியெழுப்ப வந்தவர்களையும் விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அண்மையில் கிளிநொச்சியில் சந்தித்து அளவளாவினார். பாதிக்கப்பட்ட மக்களுக்காக சேவையாற்றிய தமிழ்ப் புத்திஜீவிகளின் பணியைப் பாராட்டியதுடன் தனது நன்றியையும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வு பல வகையில் முக்கியத்துவம் பெறுகிறது.



தென்னிலங்கைப் பேரினவாத சக்திகளாலும், தமிழ்த்தேசியத்துக்கு எதிரான தமிழ் விரோதிகளாலும் கடல் அனர்த்தத்தின் பின்னர் தேசியத் தலைவர் தொடர்பாகவும் புலிகளின் மூத்த உறுப்பினரும், புலனாய்வுப்பிரிவுப் பொறுப்பாளருமான பொட்டு அம்மான் தொடர்பாகவும் வதந்திகள் பரவவிடப்பட்டன.

இதற்கெல்லாம் மகுடம் வைத்ததுபோல் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் சிங்கள, ஆங்கில சேவைகள் தமது செய்தி அறிக்கையில் கூட்டுப்படைத்தளபதி தயா சந்தகிரியை மேற்கோள்காட்டி இந்த வதந்திகளை செய்தியாக்கி வெளியிட்டன.

அண்மைக்காலமாகவே வதந்திகளைப் பரப்பி தமிழ்மக்கள்மீது ஒரு உளவியல் போரை படைத்தரப்பு மேற்கொண்டு வந்தது. முன்னதாக கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசைக்கும், பிரபாவுக்கும் இடையில் முறுகல் என்ற ரீதியிலும், அது அடிபட்டுப்போன நிலையில் சுனாமிக்குப் பின் கடற்புலிகள் பிரிவுக்குப் பாரிய இழப்பு என்ற ரீதியிலும் பிரசாரப்படுத்தப்பட்டது. உண்மையில் அரச கடற்படையே பாரிய தளபாடரீதியாகவும், ஆள் ரீதியாகவும் இழப்புகளைச் சந்தித்திருந்தது. அண்மையில் கடற்புலிகள் தமது பிரதான தளம் ஒன்றுக்கு பி.பி.ஸி. செய்தியாளரை அழைத்துச் சென்றதுடன் அங்கு புலிகளின் பீரங்கிப் படகுகள் பலவற்றையும் அவருக்குக் காண்பித்தனர்.

இந்த நிலையில்தான் தலைவர் பிரபாகரன் தொடர்பாக வதந்திகள் பரப்பப்பட்டு வந்தன. இதன் நோக்கம் உண்மையில் சிங்களப் பேரினவாதத்தின் ஆழ் மனதினுள் இருக்கும் ஆசையின் வெளிப்பாடுதான்.

தலைவர் பிரபாவே தமிழ்த்தேசியத்தின் அடையாளமாகவும், தமிழினத்தின் எழுச்சியின் குறியீடாகவும் இருந்து வருகிறார். பேரினவாதிகளுக்கும், தமிழின விரோத கைக்கூலிகளுக்கும் நெருப்பாக விளங்கும் தலைவர் தொடர்பாக இவ்வாறான வதந்திகளை இந்தச்சக்திகள் பரப்பி உள்ளூர அகமகிழ்ந்துகொண்டிருக்கின்றன. பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்துள்ள இந்த வேளையிலும் இவ்வாறான வதந்திகள் இச் சக்திகளின் வக்கிரத்தனத்தின் உச்சக்கட்டமேயாகும்.

தலைவர் தொடர்பாக வெளியாகும் வதந்திகள் இது முதல் முறையுமல்ல —புதிதுமல்ல. தலைவர் மக்கள் முன் தோன்றாது போராட்டத்தின் தேவை கருதியும், பாதுகாப்புக் கருதியும் இருந்துவருவது இந்த சக்திகளுக்கு வாய்ப்பாக உள்ளது. இக் காரணங்களுக்காக தலைவர் மக்களிடம் இருந்து விலகிவிடவில்லை. மக்களின் உணர்வுகளையும், எண்ணங்களையும் அவர் நன்கு புரிந்து வைத்துள்ளார். எமது மக்களின் மொத்த வடிவமாகவே தலைவர் இருக்கிறார்.

இவ்வாறான வதந்திகள் பலவற்றை நாம் கேட்டுள்ளோம். இந்தியப்படை இங்கு நிலைகொண்டிருந்த கால கட்டத்திலும் இவ்வாறான வதந்திகள் பிரசித்தமானவை. இவற்றை தமிழின விரோதிகளும் சேர்ந்தே அன்று முதல் ஒத்தூதிவருகின்றனர்.

வடக்கு— கிழக்கு மாகாண முதலமைச்சராய் இருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பைச் சேர்ந்த வரதராஜப் பெருமாள் தனது வாயால் தலைவர் பிரபாகரனை சுட்டு வீழ்த்திய சுவாரஸ்யமான கதையொன்றை இங்கு ஞாபகப்படுத்தலாம்.

''புலிகளின் முரண்பாட்டால் பிரபாகரன் சுட்டுக்கொல்லப்பட்டார். அவரது படத்துக்கு வல்வெட்டித்துறையில் மக்கள் வரிசையாக நின்று அஞ்சலி செலுத்தி வருகின்றனர்'' என்ற வகையில் பெருமாள் செய்தியை வெளியிட தமிழகத்தில் இருந்து வெளியாகும் நாளிதழ் ஒன்றும் தலைப்புச் செய்தியாக இதைப்பிரசுரித்திருந்தது.

இவ்வாறான பல கதைகள் இந்தியப் படை வடக்கு, கிழக்கில் தங்கியிருந்த கால கட்டத்தில் உலாவின. பின் இந்தியப்படைகள் வெளியேறிய பின்பு 1990 ஏப்ரல் 01ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ளூர்ப்பத்திரிகையாளர்களை தலைவர் பிரபா சந்தித்த போது அக்கால வதந்திகள் முடிவுக்கு வந்தன. தலைவர் அச்சந்திப்பில் பின்வருமாறு தெரிவித்தார். ''எனக்குமே சந்தேகம் வந்துவிட்டது. என்னை அடிக்கடி கிள்ளிப்பார்ப்பதுண்டு'' என்று சிரித்த முகத்துடன் கூறினார்.

பின்னர் 1996 முல்லைத்தீவு முகாம்மீது புலிகள் பாரிய தாக்குதல் நடத்தியபோது இராணுவம் பலத்த இழப்பைச்சந்தித்திருந்த நிலையில் அப்போதைய இராணுவப் பேச்சாளராக இருந்தவர் ''இச்சண்டையில் பிரபாவுக்குக் காயம் ஏற்பட்டிருக்கலாம்'' என்றவாறு கூறி மகிழ்ந்துகொண்டார்.

இவ்வாறான கட்டுக்கதைகளின் நோக்கம் மிகவும் பாரதூரமானது. மக்களின் மன உறுதியை குலைத்துவிடுவதும், போராட்டத்தின் மீது நம்பிக்கையீனங்களை ஏற்படுத்துவதும் மக்களை போராட்டத்திலிருந்து அந்நியப்படுத்துவதும் ஆகும்.

இந்த நிலையில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் செய்திகளையும் இவ்வாறான நோக்கங்களைக் கொண்டதாகவே பார்க்கவேண்டியுள்ளது. இச் செய்திக்குக் காரணமான செய்திப் பணிப்பாளர் கட்டுகம்பொல பதவி நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடல் அனர்த்தத்தின் பின்னராக பல சர்வதேச சக்திகளின் இராணுவப் பிரசன்னம் குறித்தும் புலிகள் மிகவும் எச்சரிக்கையாகவே இருப்பர் என நம்பலாம். ஏற்கனவே புலிகளின் பகுதிகளுக்கு அரசும், வெளிநாட்டுச் சக்திகளும் புலனாய்வு வலையினை விரித்து வரும் நிலையில் தற்போதைய இராணுவப் பிரசன்னம் காரணமாக புலிகளின் தலைமை இரகசியமாக தனது நகர்வுகளைச் செய்ய வேண்டி இருப்பதால், தலைவர் வெளிவரவில்லை என்ற காரணத்தை முன்வைத்து வதந்திகள் பரப்பப்பட்டுள்ளன.

ஆனால், உண்மையில் கடல் அனர்த்தத்தின் பின்னர் முல்லைத்தீவுப் பகுதிக்கு தலைவர் பிரபாகரன் தளபதிகளுடன் சென்று பார்வையிட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் மூலம் அறியக் கிடைக்கின்றது. இவை செய்தியாக வெளிவரவில்லை என்றபோதும் மக்களுக்கு நிலைமை வெளிச்சமானதாகவே இருக்கின்றது.

இந்த வதந்திகள் குறித்து மக்கள் பெரிய அளவில் அலட்டிக்கொள்ளவில்லை என்பது தமிழ்த் தேசியத்துக்கு எதிரான சக்திகளுக்கு பலத்த ஏமாற்றமாகவே இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்த நிலையில்தான் தலைவர் பிரபாகரன் உள்ளூர் மற்றும் புலம்பெயர்ந்து வாழும் தமிழ்ப் புத்திஜீவிகளைச் சந்தித்துப் பேசியுள்ளார். அதில் எமது மக்களின் வாழ்வையும் தாயகப் பகுதிகளையும் மீளக்கட்டியெழுப்புவது குறித்தும் வளங்கள் அனைத்தையும் திரட்டி நாமே மீளமைப்பது குறித்தும் தலைவர் வெளியிட்ட கருத்துக்கள் மிகவும் முக்கியமானவை. சிங்கள பேரினவாதிளும் சக்திகளும், அதன் நேச சக்திகளும் தமிழர் தாயகப் பகுதிகளை சகல வழிகளிலும் புறக்கணித்துள்ள நிலையில் எமது தாயகத்தை மீளமைப்பது பற்றிய தலைவரின் கருத்துகள் வந்துள்ளன.

போர்க்காலத்திலும், தற்போதைய சமாதான காலத்திலும் பல நெருக்கடிகள் மத்தியிலும், சவால்களின் மத்தியிலும் இருந்து மீளெழுந்து போராட்டத்தை நகர்த்திச் செல்லும் தலைவர் பீனிக்ஸ் பறவைபோல் சாம்பல் மேட்டிலிருந்தும் மீண்டும் மீண்டும் எழுவார்.

-பின்கலன்-

# சுனாமியை விட .......

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

*சில ஊர் மக்களின் கூற்றுப்படி சில பெண்களில் உடல்கள் அசிங்கப்படுத்தப்பட்டு சாக்கடை பகுதிகளுக்குள் போடப்பட்டிருந்தன.*

*சிறுவர்கள் திடீர் என காணாமல் போவதை அடுத்து சிறுவர் நன்னடத்தை நிலையம், சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் என்பவை இணைந்து சிறுவர்களை பாதுகாக்கும் நடவடிக்கைளில் ஈடுபடுகின்றன.*

*அதேவேளை அரசாங்கமும், வெளிநாட்டுத் தூதுவர்களையும் புண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய அதிகாரிகளையும் சிறுவர்கள் கடத்தல் தொடர்பில் உஷாராக இருக்குமாறு கோரி உள்ளது.*

*பெண்களில் உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கும், பாலியல் இம்மைசகளிலிருந்து அவர்களை காப்பாற்றவும் அரசும், அரசு சார்பற்ற நிறுவனங்களும் இணைந்து செயற்படுகின்றன.*

*அகதி முகாம்களில் பெண்கள் வாழும் போது பல்வேறு வகையான அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.*

*ஒரே அறையில் இருப்பதனால் உடை மாற்றும் சிரமம் காணப்படுகிறது. மாதவிலக்கு காலங்களில் பெண்கள் மிகவும் கஷ்டப்படுவதாகவும் கூறப்படுகிறது. தெற்கு அகதி முகாம் ஒன்றில் ஒரு பெண் உடை மாற்றுவதை படம் எடுக்க முயன்ற இளைஞர் ஒருவர் அடித்து வெளியேற்றப்பட்டார்.*

*இவ்வாறு பெண்கள் பல பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகி வருகின்றனர். பொலிஸ்மா அதிபர் இவ்விடயம் தொடர்பில் சிறப்புப் பொலிஸ் பிரிவை அனுப்பியுள்ளார்.*

*பாலியல் அசம்பாவிதங்கள் குறித்து பொலிஸிடம் அல்லது மனித உரிமைகள் அமைப்பிடம் முறைப்பாடுகள் பதியப்படவில்லை என்றும். ஆனால், பாலியல் துன்புறுத்தல்கள் இடம் பெற்றிருப்பதாகவும் கூறப்படுகிறது.*

# தமிழர் தாயகத்துக்கு கைக்கெட்டாத நிவாரண உதவிகளும் – மீள்கட்டுமானமும்

சுனாமி கடல் அனர்த்தத்தின் பின்னரான தமிழர் தாயகத்தின் மீள்கட்டுமானத்திற்கு உதவிகள் பெரியளவிலும் அதேவேளை அவசரமாகவும் தேவைப்படுகின்றன. சர்வதேச நாடுகளும், நிறுவனங்களும் பெரியளவிலான பொருள் வளங்கள், நிதி வளங்கள், மனித வளங்கள் என உதவிகளை வழங்கிய போதிலும் அவை வடக்கு – கிழக்குப் பகுதிகளுக்கு எதிர்பார்த்தளவில் கிடைக்கவில்லை. தமிழர் தாயகப் பகுதிகளை மீளமைக்க வேண்டிய நிலையில் தமிழர்களே உள்ளனர்.

மீள்கட்டுமானங்கள் அடிமட்டத்தில் இருந்து மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன. சுனாமி கடல் அனர்த்தம் தமிழர் தேசத்துக்கு புதிய அனுபவமாகவுள்ள போதும் அது புதிய பாடங்களை எமக்குத் தந்துள்ளது. கடல் அனர்த்தத்தின்பின் பிரிந்துநின்ற சிங்களக் கட்சிகள் ஒன்றிணைந்துள்ள அதேவேளை அவை தமிழர் தரப்பை தனிமைப்படுத்தும் முயற்சியிலும் தீவிரமாகியிருப்பதை அண்மைக்கால நிகழ்வுகளிலிருந்து தெளிவாக அவதானிக்கக் கூடியதாயிருக்கிறது.

இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் சர்வதேச பிரமுகர்களை பாதிக்கப்பட்ட வடக்கு – கிழக்குப் பகுதிகளுக்கு குறிப்பாக புலிகளின் பகுதிக்கு அனுப்புவதில் அரசு முட்டுக்கட்டைகளை போடுவதுடன் பாதுகாப்பற்ற பகுதியென காரணம்கூறி தடுத்திருப்பது அரசின் உள்நோக்கங்களை தெளிவாக்குகின்றது.

கடந்த யுத்தகாலத்தில் பொருளாதாரத் தடைகளாலும், இராணுவ நெருக்குவாரங்களாலும் மோசமாகப் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு கடல் அனர்த்தத்தின் பின்னரான தற்போதைய சூனியமான அவர்களின் வாழ்வை கட்டியெழுப்புவதில் பலத்த சிரமங்கள் எதிர்கொள்ளப்படுகின்றது. முதன்மைக் காரணமாக சர்வதேசத்தின் உதவிகள் சமச்சீரற்ற முறையில் பகிர்ந்தளிக்கப்படுவதேயாகும்.

கடல் அனர்த்தத்தின் பின்னராக தோன்றியுள்ள மனிதாபிமான நெருக்கடியை கையாள்வதில் அரசு காட்டும் பாகுபாடு தமிழ், சிங்கள இனங்களுக்கிடையேயான



விரிசலை மேலும் ஆழமாக்கவே உதவியுள்ளது.

வடக்கு – கிழக்கு கரையோரத்தின் மூன்றில் இரண்டு பங்கு பிரதேசம் கடல் அனர்த்தத்தினால் உயிர்ச்சேதம், பொருள் சேதம் என்பவற்றை ஏற்படுத்தியுள்ளது. இப்பகுதிகள் கடந்தகால போரினால் பெருமளவில் நலிவடைந்திருந்தன. இவற்றைக் கருத்தில்கொண்டு சர்வதேச உதவிகளை உரிய முறையில் பகிர்ந்தளிப்பதை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு சர்வதேச நாடுகளுக்கு உண்டு. இக்கருத்தை தமிழர் தரப்பு பல்வேறு இடங்களில் வலியுறுத்தியுமுள்ளது. ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் உட்பட சில பிரமுகர்கள், உதவிகள் சீராக பகிரப்பட வேண்டும் எனக் கூறிவிட்டு சென்றுள்ள போதும் உரிய முறையில் அவற்றை கண்காணித்து நடைமுறைப்படுத்த அவர்கள் முயலாததுடன் சிங்கள ஆட்சியாளர்களின் மேலாண்மையின் கீழேயே தமிழர் தாயகத்துக்கான நிவாரண உதவிகள் தொடர்ந்தும் சீரற்ற முறையில் மேற்கொள்ளப்படுவது கவலைக்குரியதாகும்.

அண்மையில் உலக உணவுத்திட்ட நிறைவேற்றுப் பணிப்பாளரை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் சந்தித்தபோது தெரிவித்த கருத்துக்கள் மிகவும் காத்திரமானவையாகும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான சர்வதேச சமூகம் இலங்கைக்கு வழங்கிய உதவிகள் சரியான முறையில் பகிர்ந்தளிக்கப்படவில்லை. இந்தக் கட்டத்தில் சர்வதேச சமூகம் உதவிகளை நேரடியாக தமிழர் பிரதிநிதிகளிடம் வழங்க முன்வரவேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கான அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளையும் நாங்கள் செய்ய வேண்டியவர்களாகவே இருக்கின்றோம். ஆற்றவேண்டிய பணிகளை மூன்று கட்டங்களாக செயற்படுத்தி வருகின்றோம். மருத்துவம், உளவியல் சார்ந்த மனிதநேயப் பணிகள் என்பன முதற்கட்டமாகவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கான சுகாதாரம், தற்காலிக குடியிருப்புகள் இரண்டாம் கட்டமாகவும் அமுல் செய்யப்படும். இறுதிக்கட்டமாக மக்கள் நிரந்தரமாக குடியேறும் நடவடிக்கை வகுக்கப்பட்டுள்ளது என தமிழ்ச்செல்வன் தமது நடவடிக்கைகளை விளக்கினார்.

இன்றைய நிலையில் தமிழர் தாயகத்தின் தேவைகளை சர்வதேசம் உணர்ந்து நேரடியாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ முன்வரவேண்டும்.

சுனாமி கடல் அனர்த்தத்தின் பின்னரான மீள்கட்டுமானங்களை பொறுத்தவரை ஒரு சவாலான விடயமாகவே உள்ளது. மீட்பு மற்றும் நிவாரண உதவிகளைப் பொறுத்தவரையில் தென்னிலங்கையிலும் பார்க்க வடக்கு – கிழக்கில் மிக விரைவாக இவை மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதற்கு முக்கிய காரணமாக ஏற்கனவே படையியல் ரீதியாக கட்டியெழுப்பப்பட்டிருக்கும் நிர்வாகக் கட்டமைப்பு பெரியளவில் புலிகளின் பகுதிகளில் பயன்படுத்தப்பட்டது. அது நிவாரண மீட்பு நடவடிக்கையில் தமிழருக்கு ஒரு சார்பான நிலையை தோற்றுவித்திருந்தது. தென்னிலங்கை நிலை அப்படி இருக்கவில்லை. இதனால்தான் தென்னிலங்கையுடன் ஒப்பிடும்போது புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் வடக்கு – கிழக்கின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் மீட்பு நடவடிக்கைகள் விரைவாக நடந்துள்ளன.

மீள்கட்டுமானத்தைப் பொறுத்தவரை மக்களை மீண்டும் தமது சொந்தக் காலில் நிமிர்ந்தெழ வைக்கவேண்டிய தேவை உள்ளது. மோசமாக பாதிக்கப்பட்டுள்ள மீன்பிடிதுறையினை மீளக்கட்டியெழுப்ப வேண்டியுள்ளது. இனியொரு சுனாமி தாக்கி உயிர், உடமை அழிவுகளை ஏற்படுத்தாதவாறும் பார்த்துக்கொள்ள வேண்டியுள்ளது. பல கிராமங்களையும், நகரங்களையும் பலநூறு மீற்றர் நகர்த்த வேண்டியிருக்கும். இம்மீள்கட்டுமானம் எனப்படுவது சுனாமி தற்பாதுகாப்பு கட்டுமானமாகவும் இருக்கவேண்டியுள்ளது. இதற்கு பெருமளவு நிதியும், துறைசார் ஆளணிவளமும் தேவை.

மக்களை உளவியல் ரீதியாகவும் கட்டியெழுப்ப வேண்டியுள்ளது. இதற்கு இருவருடமாவது செல்லும் என்கிறார் வைத்திய கலாநிதி எழுமதி கரிகாலன்.

மொத்தத்தில் இவற்றை கையாள்வதற்கான கட்டமைப்பு மட்டும் தமிழர் தாயகத்தில் இருக்கின்றது. இதை இயங்க வைக்க சர்வதேசத்தின் உதவி முக்கியத்துவம் பெறுகின்றது.

சமாதான காலத்தில் உதவி வழங்கும் நாடுகள் உறுதியளித்த பல ஆயிரம் கோடி நிதியினை தமிழர் தாயக மீள்கட்டுமான நிவாரண நடவடிக்கைகளுக்கு அளிப்பதன்



மூலம் டோக்கியோ உதவி வழங்கும் நாடுகள் சமாதானத்திற்கான ஒரு அடியினை முன்நோக்கி வைக்க முடியும். இது ஒரு சாதகமான ஒரு நிலையை தோற்றுவிக்கும்.


சர்வதேசத்தின் நிவாரண உதவிகள் இதுவரை தமிழர் தாயகப் பகுதிகளுக்கு திருப்பப்படாத நிலையில் மக்களின் நம்பிக்கைகள் குறைவடைந்துவரும் நிலையில் அரசு பல புதிய நெருக்குவாரங்களை மக்கள் மீது திணித்து வருகின்றது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவசரகால நிலையினைப் பிரகடனப்படுத்தும் அறிவித்தலில் கடந்தவாரம் கையெழுத்திட்டுள்ளார். இது தமிழ் மக்களுக்கு மீண்டும் போர்க்கால பீதியினை ஏற்படுத்தியுள்ளது.

இராணுவ மேலாதிக்கத்தை தமிழ் மக்கள் மீது திணிக்கும் இந்தப்போக்கு நிலைமையை மேலும் மோசமாக்கவே வழிவகுக்கும்.

சுனாமி–2004 ஒரு காலப்பிரிகோடு என்று கூறப்படுகின்றது. சுனாமிக்கு பின்னான அரசின் நிலைப்பாடும், சர்வதேச சமூகத்தின் நிலையும் தமிழ் மக்களை மிகவும் சிந்திக்க வைத்துள்ளது.

– க.கலன் –



களத்தில் முதன்மையான
இலங்கையின் முதல் தர பற்றரி
இன்றும் முன்னணியில்
BROWNS GROUP
BG
ESTD 1875
பிரவுண் அன் கம்பனி லிமிடட்
பத்தரி பணியகம்
இல. 65, கிருலை ரோட், கொழும்பு – 05.
தொ.பே:– 2599280, 2599281, 5377988/89
பெக்ஸ் :– 5344636
வடக்கு–கிழக்கு உள்ளடங்களாக நாடு முழுவதும் உள்ள விநியோகஸ்தர்களிடம்

# சுனாமியை விஞ்சும் பேரினவாதம்

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் தமிழ் பேசும் மக்கள் வாழ்கின்ற கரையோரப் பிரதேசங்களை உள்ளடக்கிய புதிய நிர்வாக மாவட்டம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்ற பழைய கோரிக்கை சுனாமி அனர்த்தத்தைத் தொடர்ந்து மீண்டும் ஒலிக்கத்தொடங்கியுள்ளது.

கடந்த டிசம்பர் 26ஆம் திகதி கிழக்காசிய நாடுகளைத் தாக்கிய ஆழிப்பேரலை இந்தோனேஷியாவுக்கு அடுத்ததாக இலங்கையையே மிகக் கடுமையாகப் பாதிப்படையச் செய்தது. இந்த அனர்த்தத்தால் எமது நாட்டில் பலியானோரின் எண்ணிக்கை இப்போது 38ஆயிரத்தைத் தாண்டிவிட்டது. இத்தொகை மேலும் அதிகரிக்க வாய்ப்பிருக்கிறது.

இலங்கையில் ஆழிப் பேரலைகளால் மிகக்கொடுரமாகத் தாக்கப்பட்ட பிரதேசம் அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளாகும். பெரிய நீலாவணை முதல் பொத்துவில் வரையான கல்முனை கரையோரப் பிராந்தியம் பேரலைகளால் பந்தாடப்பட்டு பேரழிவுக்குள்ளானது. இப்பிராந்தியத்தில் பதினைந்தாயிரத்துக்கு மேற்பட்டோர் இறந்திருக்கின்றனர். சுமார் பத்தாயிரம் பேர் காயமடைந்துள்ளனர். மேலும் ஐயாயிரத்திற்கு மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர். ஏனைய சேத விபரங்கள் பற்றி முன்னைய கட்டுரைகளில் குறிப்பிட்டுள்ளோம்.

சுனாமியின் கோரத்தாண்டவத்தால் இவ்வளவு பேரழிவுகளைச் சந்தித்த பிரதேசங்களை இந்த மாவட்டத்தின் அரச அதிபர் வந்து பார்வையிடவில்லை என்றால் எவராவது நம்புவாரா? ஆனால், அதுதான் நடந்திருக்கிறது. தனது நிர்வாகத்தின் கீழ் உள்ளபத்துப் பிரதேச செயலாளர் பிரிவுகளில் நூற்றுக்கு மேற்பட்ட கிராமங்கள் கடல் சீற்றத்தால் பாதிக்கப்பட்டு பேரழிவுக்குள்ளாகி நான்கு வாரங்களாகியும் அம்பாறை மாவட்ட அரச அதிபர் இப்பகுதிகளை வந்து பார்வையிடவில்லை என்பதும் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்திக்கவில்லை என்பதும் ஓர் அதிர்ச்சிகரமான தகவல்தான்.

### அரச அதிபரின் அசட்டை

ஆழிவுப்பேரலைகளுக்கு இரையான இடங்களை அரச அதிபர் நேரில் சென்று பார்வையிடாததன் மர்மம் என்ன? இது இப்பகுதி சமூக ஆர்வலர்களின் நியாயமான கேள்வியும் கவலையுமாகும். பேரழிவுற்ற பிரதேசங்களுக்கு அவரை அழைத்து வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் அவையும் கைகூடவில்லை.



அம்பாறை மாவட்டத்தில் கடல் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட கல்முனைப் பிராந்தியம் முழுக்க நூறு வீதம் தமிழ், முஸ்லிம் மக்கள் வாழ்கின்ற பகுதியாகும். அதனால் சிங்களப் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த அரச அதிபர், அதிகம் கவலைப்படவில்லை. பாதிக்கப்பட்டு நிர்க்கதியடைந்திருக்கின்ற மக்களின் நலன்கள், தேவைகள், பிரச்சினைகள் குறித்து அவர் அலட்டிக்கொள்ளவில்லை, அவர்களுக்கு கைகொடுத்துதவ வேண்டியது தனது தலையாய கடமை என்பதை அவர் உணர்ந்து கொள்ளவில்லை.

சுனாமி அனர்த்த வாடையைக்கூட நுகராத கடலோடு தொடர்பு இல்லாது மிகத்தொலைவில் அமைந்துள்ள அம்பாறைத் தொகுதியிலேயே சிங்களவர்கள் வாழ்கின்றனர். அம்பாறை நகரிலேயே மாவட்ட செயலகம் (கச்சேரி) அமைந்திருக்கிறது. அதனால் கல்முனைக் கரையோரப் பிராந்தியத்திற்கும் கச்சேரிக்கும் இடையிலான தொடர்புகள் – உறவுகள் தற்போதும் குறைந்தளவிலேயே இருந்து வந்திருக்கின்றன. அதற்குப் பிரதான காரணம் கச்சேரி அலுவல்கள் யாவும் தனிச்சிங்கள மொழியில் இடம்பெறுவதும், தமிழ்பேசும் மக்கள் மீதான பாரபட்சமும், புறக்கணிப்புமாகும்.

### கரையோர மாவட்டம்

இதனாலேயே கல்முனைக் கரையோர மாவட்டக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. 1980 களில் இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டபோதிலும் 1994ஆம் ஆண்டுக்குப் பின்னரே அது மக்கள் மயப்படுத்தப்பட்டது. 2000ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையில் கல்முனை நிர்வாக மாவட்டம் உடனடியாக ஏற்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

1999ஆம் ஆண்டு மயோன் முஸ்தபா ஐக்கிய தேசியக் கட்சியில் இணையும்போது அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும் கல்முனை நிர்வாக மாவட்டத்திற்கான உத்தரவாதம் கொடுக்கப்பட்டிருந்தது.

[16ஆம் பக்கம் பார்க்க...]

## இவ்வார 'ராசிபலன்' 24–01–2005 , 30 –01–2005

**பொ. சந்திரன்**




### இவ் வார கிரகநலை

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | சனி |
| | செவ் கேட்டை புதன்<br>சுக்கிரன் பூராடம் உத்+சுக்+சூரி<br>புதன் உத்த+ திரி சூரி+சந்<br>சூரியன் திருவோ சந்திரன்<br>குரு சித்திரை செவ்வாய்<br>சனி புனர்பூசம் குரு | | |
| | | | |
| சுக் புதன் சூரியன் | செவ் | கேது | குரு |

தை11 முதல் தை 17 வரை

சந்திரன் கடகம் முதல் சிங்கம் வரை

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

(1,8)உரிய செவ்வாய் எட்டில் ஆட்சியாக இருப்பது அரைப்பங்கு பலன் செய்யலாம். புதனின் நட்சத்திரத்தில் இருப்பதில் சிறப்பு இல்லை. எடுத்த முயற்சி தாமதமானாலும் நிறைவேறும். ராசியில் ராகு இருப்பது நல்லதல்ல. (2,7) உரிய சுக்கிரன் 9இல் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. (3,6)உரிய புதன் 10இல் இருப்பது நல்ல பலன் செய்யாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். இளைய சகோதரத்துக்கும் கூடாது. 4ஆம் வீடு சுபக்கிரக பார்வை பெறுவதால் வாகன சுகம் உண்டு. தாய் நலம். (10,11) உரிய சனி மூன்றில் இருப்பது விசேஷமானது. தொழில் துறை முன்னேறும். குரு மறைவது சுகக்குறைவானது.

**இடபம் : கார்த்திகை 2,3,4. ரோகிணி, மிருகசீரிடம் 1,2**

(1,6) உரிய சுக்கிரன் எட்டில் இருப்பது நல்லது. ஆனால், தனது சொந்த நட்சத்திரத்தில் இருந்து சூரியனின் நட்சத்திரத்திற்குச் செல்வது சிறப்பு இல்லை. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. (2,5)உரிய புதன் 9இல் நன்மை செய்யாது. கையில் பணம் இருக்காது. குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். நாலுக்குரிய சூரியன் 9இல் நன்மை செய்யாது. வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. (7,12)உரிய செவ்வாய் 7இல் ஆட்சியாக இருப்பது தோசமான நிலை. திருமண முயற்சி பாதிக்கலாம். சயன சுகம் இருக்காது. (9,10) உரிய சனி இரண்டில் இருப்பது கூடாது. தொழில் துறையைப்பாதிக்கலாம் தகப்பனுக்கும் நல்லதல்ல.

**மிதுனம்: மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் எட்டில் சிறப்பு இல்லை. ஆனால், சூரியனோடு இணைவது நன்மை செய்யும். இருப்பினும், சூரியனின் நட்சத்திரத்தை விட்டு சந்திரனின் நட்சத்திரத்திற்கு வருவது நன்மை செய்யாது. எடுத்த முயற்சி தாமதமானாலும் நிறைவேறும். வாகன சுகம் இருக்காது. தாய்க்குச் சம சுகம். இரண்டாம் வீடு சுபக்கிரக பார்வை பெறுவதால் கையில் பணம் இருக்கும். (7,10) உரிய குரு நாலில் இருப்பது கேந்திராதிபத்திய தோசம். மேலும், இவ்விரு வீடுகளையும் சனி பார்ப்பதால் தீயபலன்களைத் தரக்கூடும். தொழில்துறை பாதிக்கலாம். திருமண வாய்ப்புத் தவறலாம். ராசியில் சனி இருப்பது மன அமைதியைப் பாதிக்கலாம். தேவையில்லாத பிரச்சினை வீடுதேடிவரும்.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசிக்குரிய சந்திரன் முதலாம் இரண்டாம் வீடுகளில் சஞ்சரிப்பது நல்லது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். மன அமைதி இருக்கும். கையில் பணம் இருக்கும். கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற முடியும். (4,11) உரிய சுக்கிரன் 6இல் இருப்பது கூடாது. வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. மூத்த சகோதரத்துக்கும் கூடாது. நண்பர் பகைவராகக் கூடும். (5,10) உரிய செவ்வாய் 10இல் ஆட்சியாக இருப்பது சமசுகம். நட்டமும் இல்லை லாபமும் இல்லை. (7,8) உரிய சனி 12இல் இருப்பது கூடாது. திருமணவாய்ப்புப் பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. குரு மூன்றில் இருப்பது சுபக் குறைவு. சூரியன், புதன், சுக்கிரன் ஆகிய கிரகங்கள் ராசியைப் பார்ப்பது விசேஷம்.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

ராசிக்குரிய சூரியன் 6இல் இருப்பது மிகவும் விசேஷமானது. மேலும், சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பது நல்ல பலனைச் செய்யும். எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். செல்லும் இடங்களில் சிறப்பான வரவேற்புக் கிடைக்கும். (2,11)உரிய புதன் 6இல் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மூத்த சகோதரத்துக்கு நல்லது. (3,10) உரிய சுக்கிரன் ஐந்தில் இருப்பது சிறப்பானது. தொழில்துறை முன்னேறும். இளைய சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. (4,9) உரிய செவ்வாய் நாலில் ஆட்சியாக இருப்பது தோசம். பெற்றோருக்கு நல்ல பலன் இல்லை. வாகன சுகம் இருக்காது. (6,7)உரிய சனி 11இல் திருமணவாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். பகை நட்பாகக்கூடும். வெளிநாட்டுப் பயணம் அமையலாம்.

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் ஐந்தில் இருப்பது நல்லது. ஆனால், சூரியனின் நட்சத்திரத்தில் இருந்து சந்திரனின் நட்சத்திரத்துக்குச் செல்வது நல்லதல்ல. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். தொழில் துறை முன்னேறும். வெளிநாட்டுப் பிரயாணம் அமையலாம். (2,9) உரிய சுக்கிரன் நாலில் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். பிதாவுக்கு நல்ல பலன் உண்டு. (4,7) உரிய குரு ராசியில் இருப்பது கேந்திராதிபத்திய தோசம். வாகன சுகம் இருக்காது. மாதாவுக்கும் நல்ல பலன் இல்லை. திருமணவாய்ப்புப் பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. மேலும், இவ்விரு வீடுகளையும் சனி பார்ப்பது கூடாது. (5,6)உரிய சனி 10 இல் இருப்பது பகை விலகும். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். குழந்தைகளின் செயல்பாட்டை பெரியோர் அவதானிக்க வேண்டும்.

**துலாம்: சித்திரை3,4 சுவாதி, விசாகம்1,2,3.**

(1,8) உரிய சுக்கிரன் மூன்றில் இருப்பது நல்லது. இருப்பினும் தன் சொந்த நட்சத்திரத்தில் இருந்து சூரியனின் நட்சத்திரத்திற்கு வருவது நல்லதல்ல. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். மன அமைதி உண்டாகும். (2,3) உரிய செவ்வாய் இரண்டில் இருப்பது தோசமானது. கையில் பணம் இருக்காது. திருமணவாய்ப்புப் பாதிக்கலாம். 7இல் ராகு இருப்பது குடும்பத்தில் அமைதி இருக்காது. (4,5)உரிய சனி 9இல் இருப்பது கூடாது. வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டமாட்டார். 10ஆம் வீட்டை இரு சுபக்கிரகமும், சூரியனும் பார்ப்பது நல்லது. தொழில்துறை முன்னேறும். அரச தொடர்பு கிடைக்கும். குரு 12 இல்மறைவதும், ராசியில் கேது இருப்பதும் தீய பலனைக் கொடுக்கலாம்.

**விருச்சிகம்: விசாகம் 4, அனுசம், கேட்டை**

(1,6)உரிய செவ்வாய் ராசியில் ஆட்சியாக இருப்பது ராசிக்கு நல்ல பலன். 6ஆம் வீட்டுக்குத் தீய பலனுமாக அரைப்பங்கு நன்மை செய்யக்கூடியவர். இருப்பினும் புதனின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லதல்ல. எடுத்த முயற்சி தாமதமானாலும் நிறைவேறும். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். (2,5)உரிய குரு 11இல் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். குழந்தைகள், கல்வியில் ஆர்வம் காட்டுவர். (3,4)உரிய சனி 8இல் இருப்பது வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. இளைய சகோதரத்துக்கும் கூடாது. (7,12)உரிய சுக்கிரன் இரண்டில் இருப்பது நல்லது. திருமணப் பலம் உண்டு. குடும்பத்தில் அமைதி இருக்கும். 10க்குரிய சூரியன் மூன்றில் இருப்பது தொழில்துறை முன்னேறும். புதிய தொழில்வாய்ப்பு உருவாகும்.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4) உரிய குரு 10இல் இருப்பது கேந்திராதிபத்திய தோசம் உண்டு. இருப்பினும், செவ்வாயின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. எடுத்த முயற்சி தாமதமாகும். வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்லதல்ல. மேலும், இவ்விரு வீடுகளையும் சனி பார்ப்பது தீய பலனைக் கொடுக்கலாம். (2,3)உரிய சனி 7இல் இருப்பது கூடாது. கையில் பணம் இருக்காது. இளைய சகோதரத்துக்குக் கூடாது. (7,10)உரிய புதன் இரண்டில் இருப்பது நல்லது. திருமணவாய்ப்பு உண்டு. தொழில்துறை முன்னேறும். 7இல் சனி இருப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்காது. வெளியார் தலையீடு குடும்பத்தில் இருக்கும். ஒன்பதுக்குரிய சூரியன் இரண்டில் இருப்பது பிதாவுக்குக் கூடாது. அதிஷ்டம் இருக்காது.

**மகரம்: உத்தரடாம்2,3,4,. திருவோணம், அவிட்டம்1,2**

(1,2)உரிய சனி 6இல் இருப்பது விசேஷம். மேலும், குருவின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். கையில் பணம் இருக்கும். செல்லும் இடங்களில் எல்லாம் சிறப்புக் கிடைக்கும். (4,11)உரிய செவ்வாய் 11இல் ஆட்சியாக இருப்பது நல்லது. வாகன சுகம் உண்டு. தாய்க்கும் நல்ல பலன் உண்டு. மூத்த சகோதரத்துக்கும் நல்ல பலன் உண்டு. (5,10) உரிய சுக்கிரன் 12இல் இருப்பது நல்லது. தொழில்துறை முன்னேறும். குழந்தைகளின் செயல்பாடு திருப்தி தரும். 7ஆம் வீட்டை சுபக்கிரகங்கள் பார்ப்பினும், எட்டுக்குரிய சூரியன் பார்ப்பதால் திருமணவாய்ப்புத் தாமதமாகலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. குரு 9இல் இருப்பது விசேஷம்.

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1,12) உரிய சனி ஐந்தில் இருப்பது கூடாது. ஆனால், குருவின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. எடுத்த முயற்சி தாமதமாகலாம். சயன சுகம் இருக்காது. பிரயாணவாய்ப்புப் பாதிக்கலாம். (2,11)உரிய குரு எட்டில் இருப்பதால் கையில் பணம் இருக்காது. நண்பர்களால் தொல்லை வரலாம். மூத்த சகோதரத்துக்கும் கூடாது. (3,10) உரிய செவ்வாய் 10இல் ஆட்சியாக இருப்பது சமசுகம். தொழில்துறையில் பொதுவான முன்னேற்றம் இருக்கும். இளைய சகோதரத்துக்குக் கூடாது. (4,9)உரிய சுக்கிரன் 11இல் இருப்பது சிறப்பானது. பெற்றோருக்கு நல்லது. வாகன சுகம் உண்டு. 7க்குரிய சூரியன்12இல் இருப்பது கூடாது. திருமணவாய்ப்புத் தடைப்படலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. குரு மறைவது குறை.

**மீனம்: பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி.**

(1,10)உரிய குரு 7இல் இருப்பது நல்லது. ஆனால், கேந்திராதிபத்திய தோசம் உண்டு. இருப்பினும், செவ்வாயின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். தொழில்துறை முன்னேறும். (2,9) உரிய செவ்வாய் 9இல் ஆட்சியாக இருப்பது கூடாது. கையில் பணம் இருக்காது. பிதாவுக்கும் நல்ல பலன் இல்லை. (4,7) உரிய புதன் 11இல் இருப்பது விசேஷம். வாகன சுகம் உண்டு. நல்ல இருப்பிடம் அமையலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தாய்க்கும் நல்ல பலன் உண்டு. 6க்குரிய சூரியன் 11இல் இருப்பதால் உடல் ஆரோக்கியம் உண்டு. பகைவர் நண்பராக வாய்ப்புள்ளது. ராசியைச் சனி பார்ப்பதால் ஏற்படும் தோசம் குரு பார்ப்பதால் நிவர்த்தியாகும்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# நெருப்பாறு

## குறுநாவல்

4

பகலில் ஆறுதலாக இருக்கும்வேளைகளில்கூட அவனிடம் பேச்சுக் கொடுத்து, அவனது நிலையை அறிய அவள் எடுத்த முயற்சிகளின் போதெல்லாம்கூட, அவன் முகம் விகாரமுற்று, வியர்வை பெருக்கெடுத்து அவன் நடுங்கவே அவள் நொடிந்து போனாள்.


இல்லற வாழ்வின் வெற்றி புரிந்துகொள்ளலிலேயே இருக்கிறது. ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டால்தானே எதையும் மேற்கொண்டு செய்திட முடியும்? விட்டுக்கொடுப்பு, புரிந்துணர்வு என்பவற்றுக்கு மேலாக இருவரினதும் உணர்வுகளும் புரிந்துகொள்ளப்பட்டு வடிகால் காணவேண்டும். அவனைப் பொறுத்தவரையில் அனைத்தையும் புரிந்திருக்கிறான். தனது குறைபாட்டுக்காக மிகவும் வருந்துகிறான். அவளைப் பூப்போல் மதிக்கிறான். இத்தனை இருந்தும் உடற்சுகம் இல்லை என்கிறபோது அவள் விரக்தியுற்றாள். எனினும், அவனைப்போலவே அவளும் பிறவிடயங்களிலெல்லாம் சகல விதத்திலும் ஆதரவாகவும், ஆறுதலாகவும் இருக்க முயல்கிறாள். இது இன்னும் எத்தனை நாட்களுக்குத் தாக்குப் பிடிக்கும்? எப்போதாவது ஒரு நாள் எரிமலையாக வெடிக்கத்தான் போகிறது.

எதையும் மனம் விட்டுக்கதைத்துப் பேசி தீர்வு காண்பது நன்று. எனினும், அது சாத்தியமாகாத வேதனையில், அவளது மலர்ந்த முகம் மனதின் பாதிப்புக்கு ஏற்ப வாடியவண்ணம் மாற்றம் கண்டது. வசந்தமலர் நடைப்பிணம் போலானாள்.

சிநேகிதிகளின் கிண்டல்களும், கேலிகளும், கண்சிமிட்டல்களும் ரசிப்பை ஏற்படுத்துவதற்குப் பதிலாக அவளைச் சினக்கவைத்தன.

உளவியல் சம்பந்தமான பல புத்தகங்களை படித்திருந்தமையினால், அவள் கடவுள் மீது பழியைப் போட்டுவிட்டு இதமாக அவனை அணுகினாள். வாழைப்பழத்தில் ஊசி குத்துவதுபோல மென்மையாக அவனது குறைபாட்டுக்கான காரணங்களை அறிய முற்பட்டாள்.

சொல்லாத சொல்லுக்கு விலையேதும் இல்லை என்பார்கள்.




மௌனத்தின் மூலம் அவளும் அடர்த்தியான அன்பையும், பாசத்தையும் பரிமாறிக்கொண்டு, தனது ஆசாபாசங்களுக்கெல்லாம் கவசமிட்டு, தான் அதிக வேதனைப்படுவதாக அவனுக்குக் காட்டிக்கொள்ளாது நடந்தாள்.

இளங்கோ அவளிடம் அன்பைச் சொரிகிறான். இந்த சில நாளில் அவளுக்கு எத்தனையோ பரிசுப் பொருட்களை வாங்கிக் குவித்தான். எனினும், அவையாவும் அவளுக்குத் தங்க விலங்காகக் கசத்தன; சுமையாக அழுத்தின.

ஒரு மாதம் நரக வேதனையில் தவித்தபடி ஓடிக்கடந்துவிட்ட நிலையில், அவளது மனதில் ஒரு தீர்மானம் உறுதியாய் பற்றிக்கொண்டது. இன்னும் எத்தனை காலம் தான் இந்த நரக வாழ்வில் கிடந்து உழல்வது? இதைவிடக் கன்னியாகவே கற்பனைகளிலாவது சுகம் கண்டிருக்கலாமே!

இந்த ஒட்டுறவிலிருந்து நிரந்தரமாக நீங்கிவிடும் எண்ணம் வலுப்பெற்றுக் கொண்டுவந்தது. வாழ்வின் பிடிப்பற்ற நிலையில் அவள் ஊமையாய் மனதில் அழுதுகொண்டிருந்தாள். உடலின் தாகங்களை, உள்ளத்திற்குக் கிடைக்கும் அவனது ஒத்தடங்களால் சீர்செய்ய முடியாது சினப்பும், சிடுசிடுப்பும்கூட அவ்வப்போது எட்டிப்பார்த்தன. பரம்பரை, பரம்பரையாக வந்த பண்பாட்டு விழுமியங்களும், கலாசார சிந்தனைகளும் ஏற்படுத்திய நிர்ப்பந்தங்களும்தான் இன்றுவரை உறவைப் பிரியவிடாமல் இழுத்துப் பிடித்துக்கொண்டிருக்கின்றன. இது சாத்தியமா? தொடர்ந்தும் இது சாத்தியமா? பட்டமரம் தளிர்க்கலாம் என அவள் எதிர்பார்த்ததுகூட இன்றுவரை ஈடேறவில்லையே!

இனி சேர்ந்து வாழ்வது என்பது சாத்தியமில்லை. கசப்பும், உவர்ப்பும் கலந்த நிகழ்காலம் மனதை என்னமாய் உடைத்துவிட்டது! சுட்ட மண்ணும், பச்சை மண்ணும் ஒட்டி உறவாட முடியுமா? இனியும் அவனோடு சேர்ந்து வாழ்வது முடியாது என்று அவளுக்குத் தோன்றியது.

அவன் தினமும் அவளது கைகளைக் பற்றிக்கொண்டு அழுகிறான்; தவிக்கிறான். இப்படி என்று தெரிந்திருந்தால் திருமணம் செய்யாமல் இருந்திருப்பேன் என்கிறான். யாருக்கு வேண்டும் ஆறுதல் வார்த்தைகள்? ஆயிரம் வார்த்தைகளால் முடியாததை ஒரு அணைப்போ, அன்பு முத்தமோ தந்துவிடும் அல்லவா?

அவளது நினைவுச் சுழலில் நெஞ்சின் மாறா ரணங்கள் எரியத் தொடங்கின. பூவுக்குள்ளே ஒரு பூகம்பம் வெடிக்கப்போவதை வீட்டில் வேறு யாரும் அறிந்திருக்கவில்லை. தனது சோகத்தை சிநேகிதிகளிடம்கூட அவளால் சொல்ல முடியவில்லை. நினைவை நெருடும் உணர்வுகளின் கொடும் இம்சை இதயத்தை துப்பாக்கிச் சன்னங்கள் கொண்டு துளைத்தன. கிளர்ந்தெழும் உணர்ச்சிக் கொந்தளிப்பை அடக்கியாள்வது கடினமாக இருந்தது.

'தற்கொலை செய்வோமா?' என்று எழுந்த சாத்தானின் ஓலம் மனதில் விஸ்வரூபமெடுத்தது. தற்கொலை கோழைத்தனமானது, பிரிந்துபோய் விடலாமா என்று ஒருகணம் நினைத்தாலும், அதற்கான வலுவான ஒரு காரணத்தை வெளியே சொல்ல முடியாதென்பதால் இருதலைக்கொள்ளி எறும்பாகத் தவித்தாள் வசந்தமலர். விக்கிரமாதித்தனிடமிருந்து பிரிந்து சென்ற வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறியது போலவும்; பின்னர் அவன் அதைக் கைப்பற்றுவதுபோலவும் மாறி மாறி மனது உடைந்து நொருங்கி, பின் தளர்ந்து, மறுபடியும் உடைந்து நொருங்கி... ஆம்... தற்கொலைதான் இதற்குச் சரியானதீர்வு....!

தொடரும்......

# காதல் சொல்ல வந்தேன்.....

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காத்திருந்த மாலா ஓடிவந்து கட்டி அணைத்துக்கொண்டாள். சின்ன வயதிலிருந்தே அதிகம் பழகிய வீடு என்பதால் தாய், தங்கை, தம்பி எல்லோரும் வந்து பேசினார்கள். சிற்றுண்டி, தேநீர் என விருந்துகள் முடிந்ததும், மாலாவும் நானும் மட்டும் அமர்ந்திருந்தோம். பழையது, புதியது என்று கதைகள் தொடர்ந்தன. அதே நேரம் சாரங்கன் பற்றிய பேச்சைத் தொடக்கினேன்.

சொல்லி முடிந்த பின் மாலாவின் முகத்தை ஆவலாகப்பார்த்தேன். "வேண்டாம் தீபா இந்தக் காதல் சரியாகப் படேல. காலம் கடந்த பின்"

அவள் முடிக்கவில்லை. நான் தொடர்ந்தேன். "எத்தனை காலம் சென்றாலும் சாரங்கனை நான் மறக்க மாட்டேன் மறக்கவும் முடியாது. ஒரு தரம் அவனைப் பார்த்தால் போதும். நிச்சயம் என் காதலை ஏற்பான்.

"இல்லை தீபா"

"ஒன்றுமே சொல்லாதே, மாலா. நான் எவ்வளவு ஆசையாக வந்திருக்கேன். அவனது வீட்டை மட்டும் காட்டு நாளைக்கே போகலாமா பி ...ளீ....ஸ்...."

"சரி நாளைக்கே போகலாம்" மாலா சொன்னதும் நான் சந்தோசத்தில் குதித்தேன்.

மறுநாள் மாலாவைக் கண்டதும் திகைப்புடன் கேட்டேன், "எதங்கடி மாலை"

"பயப்படாதே சாரங்கனுக்கு போடமாட்டேன். போறவழியிலதானே மாவீரர் துயிலும் இல்லம். என் அண்ணா கல்லறைக்குத்தான் மாலை. எத்தனை நாள் பாடம் சொல்லித் தந்திருப்பார். இன்னும் நான் மறக்கேல."

கண்கலங்க மாலா என்னைப் பார்த்தாள். இருவரும் ஏதேதோ பேசியபடி சென்றோம். துயிலும் இல்லம் வந்ததும் இருவரும் உள்ளே சென்றோம். கால்வைத்ததும் தெய்வீக உணர்வுபோல் உடலில் ஒட்டிக்கொள்ள அமைதியும் அடுக்கப்பட்டிருந்த கல்லறைகளும் புனித தலத்தினை ஞாபகப்படுத்தின.

மாலா காட்டிய கல்லறைக்கு முன் மண்டியிட்டேன். அதில் சாரங்கன் என்ற பெயரைப் பார்த்து கத்தினேன்.

"மாலா என்ன இது"

"யாருக்கு உன் காதலை சொல்ல வந்தியோ அந்த சாரங்கன் தான். தன் உயிரை நாட்டுக்காக தியாகம் செய்த வீரன். இதை முதலே நான் சொல்ல நினைத்தேன். நீ தான் ஒன்றுமே சொல்லாதே என்று தடுத்திட்டாய்" குரல் கரகரக்க மாலா சொல்லிமுடித்தாள்.

"சாரங்கன் ஒரே ஒரு தரம் என்னைப் பார். நான் சொல்ல வந்ததை கேட்டுட்டுப்போயிடு பிளீஸ்" நான் கெஞ்சினேன், கதறினேன், துடித்தேன். என்ன பலன். சாரங்கன் தூங்கிவிட்டான். அவன் விழிக்கும் காலம் இன்னும் வரவில்லை.

மாலையை எடுத்தேன். சின்னவயது சாரங்கனின் கழுத்தை நினைத்தபடி கல்லறையில் போட்டேன். என் காதல் மாலை கல்லறைக் கழுத்தில் சோகமாய் விழுந்து சிரித்தது.

(முற்றும்.)

# ஜப்பான் மொழி பேசும் எலிகள்

ஜப்பானிய மொழியின் உச்சரிப்பு ஒலியை மையமாக வைத்து எலிகள் தங்களுக்குள் பேசிக்கொண்டன என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.



அமெரிக்க விஞ்ஞானிகள் எலிகளை கொண்டு சமீபத்தில் ஓர் ஆராய்ச்சி நடத்தி இருந்தனர். இதற்காக 64 எலிகள் தேர்வு செய்யப்பட்டன.

இவற்றை விஞ்ஞானிகள் நான்கு, நான்கு குழுக்களாகப் பிரித்தனர். பின்னர் ஒரு சில குழுக்களுக்கு டச்சு மொழியில் பயிற்சி அளித்தனர். வேறுசில குழுக்களுக்கு ஜப்பானிய மொழியில் பயிற்சி அளித்தனர். பின்னர் அனைத்து எலிகளையும் மீண்டும் ஒன்றாகச் சேர்த்தனர்.

ஆனால், டச்சு மொழியில் பயிற்சி பெற்ற எலிகள் தனியாகவும், ஜப்பானிய மொழியில் பயிற்சி பெற்ற எலிகள் தனியாகவும் பிரிந்து விட்டன.

மொழிஉச்சரிப்பு ஒலியை மையமாக வைத்து எலிகள் தங்களுக்குள் பேசிக் கொண்டன என்று விஞ்ஞானிகள்தெரிவிக்கின்றனர்.

## 'சுடர் ஒளி' வார மலர் விளம்பரக் கட்டணம்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
| --- | --- | --- |
| முழுப்பக்கம் | ரூ.30,000.00 | ரூ. 45,000.00 |
| அரைப்பக்கம் | ரூ.15,680,00 | ரூ.23,520.00 |
| C.M. | ரூ. 98.00 | ரூ.147.00 |
| Page Specified C.M.Cl | ரூ.122.50 | ரூ. 183.75 |
| Contract ADV. | ரூ. 70.00 | ரூ. 110.00 |
| (250300 Col. Cms) | | |

# பொங்கல் ரேஸில் ஓடும் குதிரையும் நொண்டிக் குதிரையும்


திருப்பாச்சி

இந்த வருட பொங்கலுக்கு ரஜினி, கமல் படங்கள் இல்லாததால் தித்திப்புக் குறைந்த திருவிழாத்தான் ரசிகர்களுக்கு. ஆனால், விஜய் நடிப்பில் வெளிவந்திருக்கும் திருப்பாச்சி, பொங்கல் படங்களில் பெரிய எதிர்பார்ப்பை உருவாக்கியிருக்கிறது. எப்படியாவது பொங்கலுக்கு வந்துவிடும் என்று எதிர்பார்க்கப்பட்ட அஜித்தின் ஜி இப்போதைக்கு அப்செண்ட். இது தவிர திருப்பாச்சியைச் சேர்த்து ஒன்பது படங்கள் பொங்கலுக்கு வெளிவந்தன. கடைசி நேரத்தில் வாபஸ் கொள்ளப்படுகிற நொண்டிக் குதிரைகளும் இந்தப் போட்டியில் உண்டு.

## 'திருப்பாச்சி'

விஜய், திரிஷா ஜோடி சேரும் படம். ஏற்கனவே கில்லி கதைப்பாணி இருப்பதால் எதிர்பார்ப்புடன் காத்திருக்கிறார்கள் ரசிகர்கள். புதுமுக இயக்குனர் என்பதால் மொத்த எதிர்பார்ப்பும் விஜய் மேல்தான். அண்ணன் தங்கை பாசம்தான் கதையே. அரிவாளுக்குப் பேர் போன திருப்பாச்சி என்ற ஊரையே தலைப்பாக வைத்திருக்கிறார்கள். பேருக்கு ஏற்றால்போல் அரிவாள் பட்டறையில் வேலைபார்ப்பவராக நடிக்கிறாராம் விஜய்.

## 'ஐயா'

'ஏய்' சுமாராக ஓடிக்கொண்டிருப்பதால் லேசாக மூச்சுவிட ஆரம்பித்திருக்கிறார் சரத்குமார். அவருக்கு மேலும் தெம்பளிக்கும் விதத்தில் இருக்கும் இந்த ஐயா என்கிறார்கள். ரன், சாமி என்ற வெற்றிப் படங்களைக் கொடுத்த ஹரிதான் இப்படத்தின் இயக்குனர். முன்னைய படத்தில் வாங்கிய அடிக்கு இந்தப் படத்தில் மருந்து தடவ வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார் ஹரி! சரத்துடன் ஜோடி சேர்வது ரஜினியின் சந்திரமுகி நாயகி நயன்தாரா. அதற்காகவே ரஜினி ரசிகர்களும் தியேட்டருக்கும் நுழையும் வாய்ப்புகள் இருக்கின்றன.


ஆயுதம்

## 'ஆயுதம்'

விரும்புகிறேன் படத்திற்குப் பின்னர் பிரசாந்த்—சிநேகா ஜோடி சேர்ந்திருக்கும் படம். இது ஒன்று போதாதா? எதிர்பார்ப்பைக் கூட்டுகின்றன விளம்பரங்கள். சில பாடல்கள் வெளிநாட்டில் எடுத்திருக்கிறார்கள். மருத்துவக் கல்லூரி மாணவர்களாக நடித்திருக்கிறார்கள் இருவரும். ஆக்ஷன் காட்சிகளில் அனல் பறக்க நடித்திருக்கிறாராம் பிரசாந்த். மாசாலாவுக்கும் பஞ்சமில்லாத கதை என்கிறார்கள்.


ஜதி

## 'அய்யர் ஐ.பி.எஸ்.'

சத்தியராஜ் நடித்திருக்கும் படம் என்பதால் லொள்ளுக்குப் பஞ்சம் இருக்காது. இரட்டை வேடமாம் இவருக்கு. ஒருவர் தாதா. மற்றொருவர்...? மனச்சாட்சியே இல்லாமல் கல்லூரி மாணவர்களாகக் காட்டினாலும் காட்டுவார்கள். மங்கை சின்னத்திரை தொடர் நாடகத்தை இயக்கிய பிரபலமான ஹரிராஜன் என்பவர் இயக்கும் படம். பழக்க தோஷத்தில் செட்டுக்குள் வராமல் இருந்திருந்தால், தப்பிக்க வாய்ப்பிருக்கிறது.


தேவதையைக் கண்டேன்


அய்யர் ஐ.பி.எஸ்.

## 'டான்சர்'

ஒரு கால் மட்டுமே உள்ள குட்டி என்ற பையனை ஹீரோவாக்கியிருக்கிறார் படத்தின் இயக்குனர் கேயார். அந்த ஒரு விஷயத்தைத் தவிர, குறிப்பிட்டுச் சொல்லும் அம்சங்கள் எதுவும் இல்லை இந்தப் படத்தில்.

## 'தேவதையைக் கண்டேன்'

அடுக்கடுக்காகத் தோல்வியைத் தழுவிய தனுஷுக்கு கை கொடுக்குமா தேவதை? குதிரை மேல் பணம் கட்டி விட்டுக் காத்திருக்கும் ஏழை குசேலர்களின் பரிதாப நிலைதான் தனுஷுக்கு. அட்வான்ஸ் கொடுத்தவர்களின் நிலை? டீ விற்கும் பையனாக நடித்திருக்கிறார் தனுஷ். இவருக்கு ஜோடி விஜயகுமாரின் வாரிசு ஸ்ரீதேவி! புது இயக்குனர் என்பதால் நம்பிக்கை வைக்கவும் முடிகிறது. வைக்காமல் இருக்கவும் முடிகிறது. பிரசவம் நிகழ்ந்தால் தான் பிள்ளையைப் பற்றி சொல்ல முடியும் என்கிற சூழ்நிலை!

## 'அறிவு மணி'

இப் போது இந்தப் படத்தின் ரிலீஸ் தள்ளிப் போனால் அந்தக் கால நடிகர் வரிசையில் வைக்கப்படுவோர் முரளி. தை உணர்வை மையமாகக் கொண்ட கதையாம். அறிவுமணி என்ற புதிய இயக்குநர் இயக்கியிருக்கிறார். தயாரிப்பாளரும் ஒரு கதாபாத்திரத்தில் நடித்திருப்பதால் எப்படியாவது வெளியாகிவிடும்.

## 'ஜதி'

அடிதடி படங்களுக்கு மத்தியில் நாட்டியத்தை போற்றுகிற படம். சின்னத்திரை நடிகை சுஜித்ரா, புதுமுகம் சத்யா நடிக்கிறார்கள். நம்பிக்கையோடு போட்டியில் குதித்திருக்கிற தில்லுக்காகவே பார்க்கலாம்.

## 'அனுமான்'

கூட்டத்தோடு கூட்டமாக உள்ளே நுழைந்திருக்கிற டப்பிங் படம். படத்தின் நாயகி சார்மி கவர்ச்சியை இறைத்திருக்கிறார்.


டான்ஸர்

விளம்பரங்களைப் பார்த்தால் இப்படத்தின் ஹீரோ அர்ஜுனை விட, சார்மியின் வெளிச்சத்தையே பெரிதாக நம்பியிருக்கிறார்கள் போல் தெரிகிறது.

ரசிகர்களைப் பொறுத்தவரை இந்தப் படங்கள் காணும் பொங்கல் பெருநாளைக் கொண்டாட.


ஐயா

# லொடுக்குப் பாட்டி

லொடுக்குப் பாண்டி சரி, அதென்ன லொடுக்குப் பாட்டி? பேராண்டி அது நான்தாண்டா என்று முன்னால் வந்து நின்றார் மனோரமா.

ஆச்சி நீயா என்றால், ஏன்டா, லொடுக்குப் பாண்டி இருக்கலாம். லொடுக்குப் பாட்டி இருந்தா கசக்குதா உனக்கு? என்று 'நந்தா' பாண்டி போல நடந்து காட்டினார்.

'கற்க கசடற' படத்தில் மனோரமாவின் பெயர் லொடுக்குப் பாட்டி. கருணாஸைப் போலவே அட்டகாசமான 'தடுக் திடுக்' நடை, வடிவேலுவுக்குப் போட்டியாக இந்த வயதிலும் காமெடியில் கலந்து கட்டியிருக்கிறார்.

'வயசு ஏற ஏறத்தான் நல்ல கதாபாத்திரங்கள் வருவதுடா அம்பி' என்ற ஆச்சி இப்போது தான் அரவாணி கேரக்டரில் நடிக்கிறார். அதனுடன் வித்தியாசமான நடையுடன் இந்தக் கதாபாத்திரம் அமைந்து விட்டது.



மனோரமாவைப் பலர் பல விதங்களில் அழைத்தாலும், ஆச்சி மயங்குவது 'பொம்பள சிவாஜி' என்ற சொல்லுக்கு, சிவாஜி அளவிற்கு வெரைட்டியான கேரக்டர்கள் செய்த நடிகை யாராவது இருக்கிறார்களா என்று தேடினால் முதலில் நினைவுக்கு வரும் பெயர் மனோரமா. ஆச்சியின் மிகப் பெரிய வெற்றி இது!

# கமல், எஸ்.ஜே.சூர்யாவுக்கு படத்தின் தலைப்பால் மிரட்டல்

''நான் சவால் விட்டால் உன்னால் படப்பிடிப்பு நடத்த முடியுமா? படத்தை வெளியிட்டு விட முடியுமா?''


ஏதோ ரவுடியின் மிரட்டல் போல இருக்கிறதல்லவா. ஆனால், இதை பேசியிருப்பவர் மற்ற அனைத்து விஷயங்களிலும் தெளிவாகப் பேசும், திட்டமிடும் விடுதலை சிறுத்தைகள் தலைவர் தொல். திருமாவளவன். கமலின் 'மும்பை எக்ஸ்பிரஸ்'க்கும், எஸ்.ஜே.சூர்யாவின் 'பெஸ்ட் பிரண்ட்'டுக்கும் தான் இந்த மிரட்டல்.

பத்திரிகைகள் ஆங்கிலத்தில் பெயர் வைக்கின்றன. தமிழ் நாட்டில் ஆயிரக்கணக்கான ஆங்கிலப் பாடசாலைகள் நடத்தப்படுகின்றன. ஆங்கிலம் இல்லாத பெயர் பலகைகளை தமிழ் நாட்டில் பார்க்கவே முடிவதில்லை. ஏன்... காலையில் பெட் காபி முதல் இரவு குட்நைட் வரை ஆங்கிலம் பேசாத தமிழர்களை விரல்விட்டு எண்ணி விடலாம்.

ஆனால், தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத்தின் ஒரே டார்கெட் சினிமா! அதுவும் கமல், எஸ்.ஜே.சூர்யா போன்ற எதிர்த்துக் குரல் கொடுத்தால் பத்திரிகைகள் பிரசுரிக்கும் பிரபலங்கள் மட்டுமே இதன் இலக்கு. ஆங்கிலப் பெயர்களை எதிர்ப்பதற்கு இவர்கள் திரையரங்கில் சுரண்டிக் காசு பார்க்கிறவர்கள் தமிழில் பெயர் வைக்காவிட்டால் என்ன செய்வது? எஸ்.ஜே.சூர்யா பேசுகிற பேச்சு ஆணவமாக இருக்கிறது. தமிழையும், தமிழர்களையும் கொச்சைப்படுத்துகிறது.''

திருமாவளவனுக்கு எஸ்.ஜே.சூர்யாவும், கமலும் தமிழர்கள் என்பது தெரியாமல் போனது ஆச்சரியம். எஸ்.ஜே.சூர்யாவின் பேச்சு தமிழர்களை கேவலப்படுத்துகிறதா இல்லையா என்பதை தீர்மானிப்பது ஒவ்வொரு தமிழனின் தனிப்பட்ட சுதந்திரம். அதை விடுத்து ஒட்டு மொத்த தமிழர்களின், தமிழின் பிரதிநிதியாக ஒரு கருத்தைச் சொல்லும் உரிமையை இவர்களுக்கு யார் அளித்தது?''

பாரதி முதல் நேற்றைய கோபிகிருஷ்ணன் வரை தமிழ் எழுத்தாளர்கள் வாழ்ந்ததும் மறைந்ததும் தீராத வறுமையில். தமிழ் தமிழ் என்று முழங்குபவர்கள் தமிழுக்காக உயிர் வாழும் எழுத்தாளர்களை கண்டுபிடித்து உதவினாலே தமிழ் வளரும். அதை விடுத்து தனி மனித சுதந்திரத்தில் தலையிடுவது கண்டிக்கத்தக்கது.


கமல்

எந்த நிலையிலும் தனது நிலைப்பாட்டில் இருந்து மாறுபடாது உள்ளார் கமல். ஆனால், சூர்யா தனது படத்தின் பெயரை 'பி.எவ்' இலிருந்து ப்ரியமான தோழியாக மாற்றியுள்ளார். இன்னும் என்ன மாற்றம் நிகழும் என்று தெரியவில்லை.



நடிகர் விஜய்யின் அப்பா எஸ்.ஏ.சந்திர சேகர் இயக்கத்தில் ஏ.எம்.ரத்தினத்தின் மகன் ரவி கிருஷ்ணா நடிக்கும் சுக்ரன் படத்தின் ஒலிநாடா வெளியீட்டு விழா சென்னையில் நடந்தது. தன் மனைவி சங்கீதா சகிதம் விழா விற்கு வந்திருந்தார் விஜய். முதலில் படத் தின் சில காட்சிகள் திரையிடப்பட்டன. ''இளசுகளை மிஞ்சுகிற பெரிசு'' என்ற பெயரை வாங்கியிருந்தார் எஸ்.ஏ.சி.

பின்னர் மைக் பிடித்த விஜய் 'இது எங்க ...பா இயக்கிய படம்தானான்னு எனக்கே ...தகமா இருக்கு'' என்று சொல்லிவிட்டு ...க, மொத்தக்கூட்டமும் கைதட்டி விஜ ...ன் பேச்சை ரசித்தது. ''ரொம்ப இளமை யாக இருக்கு'' என்ற சான்றிதழும் கொடுத் தார் விஜய்.

சுத்தி சுத்தி அடிக்கிறது. பறந்து பறந்து

# எனது அப்பாவின் படமா இது: விஜய்

அடிக்கிறது என்று பல வித்தைகள் காட்டியி ருக்கிறார் விஜய் இந்த படத்தில். ரவி கி...ஷ்ணா படத்தில் விஜய் எங்கே வந்தார்? வி...ின் பெயர்தான் சுக்கிரன். அதையே ...டிலாக வைத்துவிட்டார் எஸ்.ஏ. சந்திரசேகர்.

''சுக்ரன் என்றால் பணத்திற்கு அதிபதி. இந்தப் படத்தின் தயாரிப்பாளர் பணத்தை மூட் டையில் கட்ட போறாரு பாருங்க'' என்று விழாவில் மைக் பிடித்த எல்லோரும் ஆருடம் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ''அடுத்த படம் நீங்க எனக்குதான் பண்ணணும்'' என்று எஸ்.ஏ.சியிடம் மல்லுக்கு நின்று கொண்டிருந்தார் கலைப்புலி தாணு. எல்லா வற்றையும் கேட்டுவிட்டு கடைசியில் வந்தார் எஸ்.ஏ.சந்திரசேகர்.

''நான் என் மனைவியை இன்னும் காதலிக்கிறேன். அதனாலதான் என் னால இன்னும் காதல் படங்கள் எடுக்க முடியுது. எனக்கு வயசாயிடுச்சுன்னு நான் நினைக்கிறதே இல்லை. என்னை சுற்றி ஒரு இளமைக் குழுவை வச்சிருக் கேன். அதனால் இந்தப் படத்தை பார்த்து விட்டு சொல்லுங்கள்' என்றார் நம்பிக் கையுடன்.

படத்தில்ரகசியா ஆடும் ஆட்டம்ஒன்றை காண்பித்தார்கள். சும்மா சொல்லக் கூடாது எஸ்.ஏ.சந்திரசேகரின் ரத்தம் எந்த குருப்போ தெரியாது. நிறம் மட் டும் பச்சையோ பச்சை!

# தளபதி வில்லன் மரணம்



ஆறரையடி உயரத்தில் வழுக்கை தலையுடன் அலட் டிக்கொள்ளாமல் ரஜினியையும் மம்முட்டியையும் கூடவே பார்வையாளர்களையும் கலங்கடித்தவர் அம் ரிஷ்பூரி. நாற்பது வயதில் சினிமாவிற்குள் நுழைந்த பலாப்பழம் பார்வைக்கு கரடுமுரடாக இருந்தாலும் பழகுவதற்கு இவர் ஒரு கனி.

மணிரத்தினம் தனது 'தளபதி' படத்திற்காக இந்த இந்தி வில்லனை தமிழுக்கு அழைத்து வந்தார். அவ்வை சண்முகியின் இந்தி பதிப்பில் ஜெமினி கணேசனின் ரோலை செய்து வில்லன் மட்டுமல்ல நல்ல காமெடியனும் கூட என்பதை நிரூபித்தார்.

அம்ரிஷ்பூரிக்கு வயது 72. சமீபத்தில் மூளையில் ...பட்ட கட்டிக்கு நடந்த அறுவைச் சிகிச்சையை ...ந்து கோமா ஸ்டேஜுக்கு தள்ளப்பட்டார். இந்த ...ரின் வாழ்வு முடிவுக்கு வந்தது.



...ம்பை எக்ஸ்பிரஸ்'
-கமல்-

# 'மும்பை எக்ஸ்பிரஸ்' லேட்டஸ்ட் தகவல்

மும்பையில் 80 சதவீதப் படப்பிடிப்பு முடிந்துவிட்டது. கமலின் மும்பை எக்ஸ் பிரஸ் படத்தின் சில லேட்டஸ்ட் தகவல்கள்.

கடத்தல் சமாச்சாரத்தை சுற்றி நடக்கும் கதைதான் 'மும்பை எக்ஸ்பிரஸ்', படத் தில் க...ன் 8 வயது மகன் கடத்தப்படுகி றான். அதைச் சுற்றி நடக்கும் சம்பவங் களே திரையில் விரியும். ஒரே சமயத்தில் தமிழ், ஹிந்தி இரண்டு மொழிகளிலும் படத்தை தயாரித்து வருகிறார் கமல்.

இது முழுக்க முழுக்க நகைச்சுவைப் படம். படத்தில் யாரும் சிரிக்கமாட்டார்கள். சீரியஸாக நடிப்பார்கள். ஆனால், அந்த நடிகர்கள் ஒவ்வொருவரின் செய்கையும் ரசிகர்களுக்கு சிரிப்பை உண்டாக்கும்' என்கிறார் படத்தின் வசனகர்த்தர் (ஹிந்தி) சௌரப் ஷுக்லா. கமலின் ஹேராம் படத் தில் கமலுடன் நண்பராக நடித்த சௌரப் ஷுக்லா, கைதேர்ந்த ஓர் படைப்பாளியும் கூட. எனவே இப்படத்தின் ஹிந்தி ரீமேக் கில் நடிப்பதுடன் வசனமும் எழுதுகிறார் அவர்.

பசுபதியை விருமாண்டி படத்தில் கொடூர வில்லனாக காட்டிய கமல் அவரை இப்படத்தில் காமெடியனாக காட்டுகிறார்.

கமலின் மனைவியாக மனிஷா கொய்ராலா நடிக்கிறார். மாதுரி, தபு, பிபாஷா, கஜோல் என மூன்று பேர் நடிக்க மறுத்த பின் இந்தப் படத்தில் நடிக்கிறார் மனிஷா. படத்தின் முக்கிய பகுதி மும்பையில் ஒரு பாடசாலையில் படமாக்கப்பட்டு வருகிறது.

சங்கீதம் சீனிவாசராவ் இயக்குநர் எனக் கூறப்பட்டாலும், வழக்கம் போலக் கதை, திரைக்கதை, வசனம் எழுதும் கமல்தான் இப்படத்துக்கு இயக்குனர். பொலிஸ் ஆணையாளராக நாசர் நடிக் கிறார். ஹிந்தியில் இந்த வேடத்தில் ஓம்புரி நடிக்கிறார். இரண்டு மொழிகளி லும் அப்பாவி இளைஞனாக வருகிறார் ரமேஷ் அரவிந்த்.

# கலைஞரின் மண்ணின் மைந்தன்

கலைஞர் கருணாநிதி கதை—வசனத்தில் உருவாகி வரும் படம் மண்ணின் மைந்தன்., சமுதாய விழிப் புணர்வை ஏற்படுத்தும் கதை இது.

இதில் சத்தியராஜ் சமுதாயப் புரட்சி செய்யும் பொலிஸ் இன்ஸ்பெக்டராக நடிக்கிறார். படத்தில் அவருக்கு ஜோடி இல்லை.



-சிபி, தியா-

இப் படத்தில் சத்ய ராஜின் மகன் சிபி கதா நாயகனாக நடிக்கிறார். இவருக்கு ஜோடியாகப் புதுமுகம் சுகாசினி நடிக்கிறார். இவருடைய தந்தையாக ஊர்வசி யின் கணவர் மனோஜ் ஜே.ஜெயன் நடிக்கிறார்.

படத்தின் கதைப் படி, மனோஜ் கே. ஜெயன், அநியாயம், அக்கிரமங்களின் ஒட்டு மொத்த உருவம். இவர் மீது பொலிஸில் புகார் கொடுக்க ஊரே பயப் படுகிறது.

இந்த சூழ்நிலை யில் அவருடைய ஒரே மகளான சுகாசினி, தந்தை மீது பொலிஸில் புகார் கொடுக்கிறார்.

அந்தப்புகாரின் பேரில், மனோஜ் கே.ஜெயனை சத் யராஜ் கைது செய்து தெருத்தெருவாக அடித்து இழுத்து வருகிறார்.

இப்படி ஒரு காட்சி சமீபத்தில் காரைக்குடியில் படமாக்கப்பட்டது.

ராமநாராயணன் டைரக்டு செய்யும் 112 ஆவது படம் இது. கலைஞர் கருணாநிதி கதை வசனம் எழுதும் 75 ஆவது படம் . பரத்வாஜ் இசை யில் வளரும் இப்படத்தில் சத்யராஜ் லொள்ளுக்கு மேலும் வடிவேலும், பொன்னம்பலம், அலெக்ஸ் ஆகியோரும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

# விக்ராந்த்தின் கற்க கசடற

மாலை ஏழுமணிக்கு 'கற்க கசடற' கேசட் வெளியீட்டு விழா. எங்கும் எப்போதும் சரியான நேரத்திற்கு வரும் ஏ.வி.எம். சரவணன் தவிப் பாகக் காத்துக் கொண்டிருக்க 7.30 மணிக்கு விழா தொடங்கியது. முதலில் குத்து விளக்கேற்றும் சடங்கு. மனோரமா, ஷோபா, சூர்யாவின் அம்மா என அம்மாக்கள் குத்து விளக்கேற்றினார்கள். விஜய் ஒலிநாடாவை வெளியிட பெற்றுக் கொண்டார் சூர்யா. இயக்குனர் ஆர்.வி. உதயகுமாரை பழைய பாசத்தில் மாமா என்று அழைத்துப் பாராட்ட ''அப்பா, கால்ஷீட் நமக்கு ரெடி'' என்று பார் வையாளர் வரி சையிலிருந்துஉதய குமார் கமெண்ட் அடிக்க விழா களைகட்டியது.



-விக்ராந்த், நயாகி-

படத்திலி ருந்து ஐந்து பாடல்களை ஒளிபரப்பினார் கள். இடையி டையே தியா நடித்த ஒல்டு சிக்ரெட் மது விளம்பரம். அனைவரும் மயங்கிப் போயிருக்கும் போது மேடையேறினார் கே.எஸ். ரவிக்குமார். ''விழா முடிந்து போகும் போது 'கற்க கசறட'ங்கிற படத்தோட பெயரை ஒருதரம் சொல் லிப்பாருங்க. கற்க கசடற சரி, நிற்க அதற்கு தக அது மட்டும் முடியாது. கஷ்டம்'' என்று டைமிங் கிற்காகப் பேசி கிச்சுக் கிச்சு மூட்டினார்.

மனோரமா, தயாரிப்பாளர் முரளிதரன் என அனை வரும் தயாரிப்பாளரின் சுமை தெரிந்த இயக்குநர் என ஆர்.வி.உதயகுமாரைப் பாராட்டினர். கறுப்பு உடை தியா வும், நீலகாஸ்ட்யூம் லட்சுமிராயும் விழாவின் மின்மினிகள்.

ஆர்.வி.உதயகுமார் படத்தில் பங்கு பெற்றவர்களை விலாவாரியாக அறிமுகப்படுத்த, நம் நினைவில் நின்றது லட்சுமிராயின் உயர மாக அவர் சொன்ன ஐந்தடி ஆறங்குலம் மட்டுமே.

தனது அண்ணன் விஜய் போல் விக்ராந்த்தும் படு அமைதி. படத்தில் அண்ணனைப் போல பட்டையை கிளப்பினால் தயாரிப்பாளர் சந்தோஷப்படுவார்.



'சந்திரமுகி'
-ரஜினி, நயன்தாரா-
-பிரபு, ஜோதிகா-

# பித்தன் பதில்கள்

*வி.ராமலிங்கம், கலபொட, கங்வெல்ல.*

**கேள்வி:** பித்தா! ஒரு குடிகாரன் இன்னொரு குடிகாரனைப் பார்த்து சிரித்து ஏளனம் செய்வதனைப்பற்றி என்ன நினைக்கிறீர்?



**பதில்:** நாய் ஒன்று கண்ணாடியிலே தனது மூஞ்சியைப் பார்த்துவிட்டு இன்னொரு நாய் எதிரிலே நிற்பதாக நினைத்துக் கொண்டு குலைக்குமே! அதனைப் போன்றது தான் இதுவும்.

*ச.சயந்தினி, ஆவரங்கால்.*

**கேள்வி:** பித்தா! இராமன், கிருஷ்ணன், அர்ச்சுனன், கோவலன் போன்ற புராண கால கதாபாத்திரங்களில் தங்களுக்கு பிடித்தவர் யார்?

**பதில்:** தசரதன். ஆச்சரியப்படத்தக்க மனிதர். நாங்களெல்லாம் ஒரே மனைவியை வைத்துக்கொண்டு அல்லாடும்போது, இவர் மட்டும் அறுபதினாயிரம் மனைவிமாரை வைத்துக்கொண்டு எப்படிச் சமாளித்தார்.... ஆச்சரியப்படத்தக்க மனிதர்.

*எஸ்.மோனதாஸ், முறிகண்டி.*

**கேள்வி:** நாங்கள் கையை பிடித்தால் கன்னத்தில் அடிக்கும் பெண்கள், டாக்டர்கள் கையை பிடித்தால் (நாடி பார்க்க) நாணிக் கோனி நிற்கிறார்களே ஏன்?

**பதில்:** அதுமட்டுமா.... காப்புக் கடைக்காரரும் தான் கையை பிடிக்கிறார். செருப்புக்கடைக்காரர் காலை பிடிக்கிறார். புடைவைக் கடைக்காரர் கண்ணாலே அளவெடுக்கிறார். இவர்களெல்லாம் தொழிலுக்காகப் பிடிக்கிறார்கள். நீர்..... தொழில் இல்லை என்பதற்காக பிடிக்கிறீர், விழும்தானே.



*சி.கண்ணன், மல்லாவி.*

**கேள்வி:** அண்மையில் நடைபெற்ற பேரழிவுகளை நேரிலே சென்று பார்த்தீரா..... உமது மனநிலை எப்படி இருந்தது?

**பதில்:** தாய் – தந்தையரை அலை அள்ளிக் கொண்டு சென்றுவிட்டது தெரியாமல் அம்மா... அம்மா... என்று அழுதபடி இருந்த அந்த இரண்டு வயதுக் குழந்தை.

அன்பான மனைவியும், பிள்ளைகளும் அலையினால் இழுத்துச் செல்லப்படுவதை நேரிலே கண்டும், எதுவும் செய்ய முடியாது கையிலே... ஒரு வயதுக் குழந்தையுடன் புரண்டு, புரண்டு அழுத அந்த இளைஞன். கையிலே, கழுத்திலே இருந்தவைகளையெல்லாம் விற்று வாங்கி சேர்ந்த வள்ளங்களும், வலைகளும் இருந்த இடமே தெரியாது போனதைச் சொல்லி கதறி அழுத அந்த வயோதிபக்குடும்பம்.

அப்பாடா.... இன்னும் எவ்வளவு கொடுமைகள்..... பார்த்தவைகளை... எனது மனத்திரையிலிருந்து அகற்ற நினைக்கிறேன். மீண்டும்.... மீண்டும்... நினைவுபடுத்துகிறீர்களே! வேண்டாம்..... விட்டுவிடுங்கள்... இன்று இரவுக்காவது என்னைத் தூங்கவிடுங்கள்.

*எஸ்.சிந்து, நெடுங்கேணி.*

**கேள்வி:** பித்துக் குட்டி, காதலுக்கும் திருமணத்துக்கும் முன்னால் முத்தம் கொடுப்பது சரியா... தப்பா?

**பதில்:** அந்த முத்தம் தப்பிலேபோய் முடிந்தால் – தப்பு, அது தப்பேதும் இல்லாமல் முகத்தோடு மட்டும் முடிந்தால் சரி.

*வை.வாகீசன், கல்வியங்காடு.*

**கேள்வி:** பித்தா! வாசித்துவிட்டு... அடப்பாவமே என்று சொல்லியபடி சிரிக்கக் கூடிய ஜோக் ஒன்று சொல்லுமன்?



**பதில்:** அந்த வீட்டில் டெலிபோன் அடித்தது. வீட்டு வேலைக்காரன் ஓடிவந்து ரெலிபோனை எடுத்தான். மறுமுனையில் கரகரப்பான குரல் ஒலித்தது.

''ஹலோ நான் முதலாளி பேசுகிறேன்''

வேலைக்காரன் ''ஐயா.. நான் வேலைக்காரன் பேசுகிறேன்''

''சரி உடனடியாக குசினிக்குள் சென்று ஒரு கத்தியை எடுத்துக்கொள்''

கத்தியை எடுத்துக்கொண்டு வந்த வேலைக்காரன், ''சரி ஐயா கத்தியை எடுத்திட்டேன்'' என்றான்.

''கத்தியுடன் எனது படுக்கை அறைக்குச் செல்''

''சரி ஐயா படுக்கை அறைக்குச் சென்று விட்டேன்'' என்றான் வேலைக்காரன்.



''அங்கே எனது மனைவி படுத்திருக்கிறாளா?''

''ஆம் ஐயா! படுத்திருக்கிறாள்'' என்றான் வேலைக்காரன்.

''சரி அந்த கத்தியால் அவளை வெட்டிக் கொலை செய்''

எஜமானுக்கு விசுவாசமான வேலைக்காரன் மறுபேச்சில்லாமல் அவளைக் கொன்று போட்டான்.

அதன்பின் ''சரி ஐயா கொன்று விட்டேன்'' என்றான் வேலைக்காரன்.

''சரி இனி அந்த செத்த உடலை இரண்டாம் மாடியிலிருந்து கீழே போட்டு விடு''

வேலைக்காரனுக்கு எதுவும் புரியவில்லை.

''ஐயா நாங்கள் இருப்பதோ தனி வீடு. இங்கே மாடிப்படியோ இரண்டாம் மாடியோ கிடையாதே!'' என்றான் வேலைக்காரன்.

''என்ன இரண்டாம் மாடி இல்லையா தனிவீடா.. அப்படியென்றால் SORRY றோங் நம்பர்''

*என்.ஜனா, நயனாதீவு.*

**கேள்வி:** அன்பின் பித்தா! பெண்கள் ஆண்களுக்கு தாலிகட்டித் திருமணம் செய்யும் காலம் ஒன்று வந்தால் எப்படி இருக்கும்?

**பதில்:** பல ஆண்களின் கழுத்தில் இரண்டு, மூன்று தாலிகள் தொங்கும்.

*கு.பிரகாஸ், கற்சிலைமடு.*

**கேள்வி:** Dear பித்தா! நீங்கள் CRICKET இல் BATTING செய்வீர்களா? BALL-ING செய்வீர்களா?

**பதில்:** சும்மா ஒரு SIDE இல் இருந்து பார்த்துக் கொண்டிருப்பேன்.

*து.செந்தமிழ், யாழ்ப்பாணம்.*

**கேள்வி:** பித்தா! அல்லல்பட்டு அகதியாக நிற்கும் மக்களுக்கு, கொடுக்கவென வந்த நிவாரணப் பொருட்களை கொள்ளையடிக்கிறார்களே! இவர்களை எப்படித் தண்டிக்கலாம்?

**பதில்:** உலகின் கோடிகளில் இருந்தெல்லாம் கோடிக்கணக்கான மக்கள் கஷ்டப்பட்டு உழைத்த பணத்தை கோடிக்கணக்கில் இங்கே அனுப்பி வைக்க... அவைகளை எல்லாம் தங்கள் வீட்டுக்கோடிகளில் பதுக்கும் இவர்கள் சமூக விரோதிகளாகவும், தேசத் துரோகிகளாகவுமே கணிக்கப்பட வேண்டியவர்கள்.

*மு.தர்ஷினி, உடையார்கட்டு.*

**கேள்வி:** பித்தா! கேட்பதை இல்லை எண்ணாது அள்ளிவழங்கும் கொடையாளிகள் இந்தக் காலத்திலும் இருக்கிறார்களா?

**பதில்:** இருந்தார்கள். கேட்பதை எல்லாம் வழங்கி வழங்கி இன்று அவர்களும் கேட்டும் நிலைக்கு வந்துவிட்டார்கள்.

*எஸ்.சாருகா, நெடுங்கேணி.*

**கேள்வி:** பித்தா! காதலித்து கரம்பிடிப்பது சுவையா? அல்லது பெற்றோர் பார்த்தவனை கரம் பிடிப்பது சுவையா?

**பதில்:** பெ.பா.க.பி. சுவை கா.க.பி.சுவையோ சுவை.

*எம்.தர்ஷினி, உடையார்கட்டு.*

**கேள்வி:** பித்தா! நீ உன்னைக் காதலி, உலகம் உன்னைக் காதலிக்கும் எனும் வாசகம் உண்மையா?

**பதில்:** நிச்சயமாக பொய்யில்லை.

*ஜெ.சஜிதா, கனகாம்பிகைக் குளம்.*

**கேள்வி:** பித்து சார்! நான் அடுத்த பிறவியில் ஜனாதிபதியாக வர ஆசைப்படுகிறேன். எனது ஆசை நிறைவேற என்ன செய்ய வேண்டும்?

**பதில்:** ஜனாதிபதி சந்திரிகா... சுனாமியால் பாதிக்கப்பட்ட ஒரு தமிழ் சிறுமியை தத்தெடுத்து வளர்க்கப்போவதாக அறிவித்திருக்கிறார். முடிந்தால் அந்த தத்துப் பிள்ளையாக செல்ல நீர் முயற்சி பண்ணிப்பாரும். பிற்காலத்தில் சிலவேளை உமது ஆசை நிறைவேறக் கூடும்.

*ஜெ.கல்பனா, இரணைமடு.*

**கேள்வி:** பித்துக்குட்டி! உலகம் பொல்லாதது, உலகம் பொல்லாதது என்று எல்லோரும் முறையிடுகிறார்களே! ஏன் இப்படி? காரணம் என்ன?

**பதில்:** பூமிக்கடியிலே அதிர்வுகள், நடுக்கங்கள் என்றெல்லாம் இருந்து கொண்டு அடிக்கடி மக்களை அழித்தொழிக்கின்றவே! அதனாலாக இருக்கும்.

*கு.விஜிரூபி, துன்னாலை வடக்கு.*

**கேள்வி:** விஞ்ஞானத்தின் வியத்தகு வளர்ச்சியால் எமது இனம் எதனைக் கண்டது பித்து?

**பதில்:** அழிவை.

*வேணாவில் தயாபரன், புதுக்குடியிருப்பு.*

**கேள்வி:** பித்தா! பணத்தால் வாங்க முடியாதவை எவை?

**பதில்:** ஏராளம். அன்பு, பாசம், அம்மா, உண்மைக் காதல்., இன்னும் ஒன்று இருக்கிறது. அண்மையில் வெளியாகிய திருப்பாச்சி திரைப்பட டிக்கட் (எல்லாக் காட்சிகளும் ஹவுஸ்புல்)

*க.நந்தினி, கொக்குவில்.*

**கேள்வி:** அன்புப் பித்தா! வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப்போகும் என்கிறார்களே! உண்மைதானா?

**பதில்:** உண்மைதான். அதுமட்டுமல்ல.. கட்டுப்பல்லுக்காரர்கள் வாய்விட்டுச் சிரித்தால் கட்டிய பல்செட்டும் வாய் விட்டுப் போய்விடும் கவனம்.



*தே.கார்மேகம், அவிசாவளை.*

**கேள்வி:** பித்தா! சுனாமி வேதனைகளுக்கு மத்தியிலும் அண்மையில் நீர் சிரித்த நிகழ்வுகள் ஏதும் உண்டா?

**பதில்:** அண்மைய பத்திரிகைச் செய்தி ஒன்றைப் பார்த்து விழுந்து விழுந்து சிரித்தேன். விடுதலைப் புலிகளின் பெயரைச் சொன்னாலே நெருப்பு எடுக்கும் ஜே.வி.பியினர் தற்போது, 'சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வெளிநாடுகளால் அனுப்பப்படும் நிதி உதவிகளை கணக்காய்வு செய்யும் குழுவில் புலிகளையும் இணைக்க வேண்டும். எமது நாடு அரசியல் வாதிகள், திருடர்களின் கூடாரம். எனவே, கணக்காய்வுக் குழுவில் விடுதலைப் புலிகளும் இணைக்கப்படவேண்டும்'

எதற்கும் விடுதலைப் புலிகளை வன்மையாக எதிர்க்கும் ஜே.வி.பி இதற்கு மட்டும் அரவணைக்கிறதே... விடுதலைப் புலிகள் நேர்மையானவர்கள் என்பதை இந்த விடயத்தில் ஜே.வி.பி. ஒத்துக்கொள்கிறது. சில சமயங்களில் ஜே.வி.பி வாய்தவறி உண்மைகளை ஒத்துக்கொள்கிறது என்று நினைத்தேன் சிரிப்பு வந்தது.



## பித்தனின் கேள்வி

**கேள்வி:–** வீதியில் செல்லும் ஆண்கள் பெண்களைக் கண்டவுடன் கையில் Hand phone எடுப்பது ஏன்?

## வாசகர்கள் பதில்கள்

*சசி – வாழைச்சேனை.*

தான் நேரடியாகக் காண்பவற்றை தொலைவிலிருக்கும் தன் நண்பனுக்குச் சொல்வதற்கு.

*ஜீவா – கொழும்பு.*

பாதையில் செல்லும் பெண்ணைக் கண்டதும் தன்னிடம் உள்ள போனை சற்று ஞாபகப்படுத்திக் கொள்வதற்காக.

*குமார் – திருகோணமலை.*

Hand phone இருந்தால் தானே இக்காலத்துப் பெண்கள் ஆண்கள் பக்கம் தங்களின் பார்வையைத் திருப்புகின்றார்கள்.

*அஞ்சலி – யாழ்ப்பாணம்.*

நேரடியாகப் பேசுவதற்கு துணிவு மிகக் குறைவு எனவே அப்பெண்ணைக் கண்டதும் ஜாலியாக அப்பெணிடம் தொலைபேசி அழைப்பைத் தொடுப்பதற்காக.

*இளங்கோ – மட்டக்களப்பு.*

இக்காலத்தில் காதலுக்கு தூது செல்லும் ஓர் உயிர் உள்ள ஜீவனைப் பார்க்கிலும் இந்த உயிரற்ற Hand phone மிகச் சிறந்தது. காரணம் விழும் அடி, உதை எல்லாம் அந்த Hand phone க்கு மட்டும்தான்.

பித்தன்மீது பித்துக்கொண்ட வாசகர்களுக்கு:–

நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பித்தன் பதில் தருவார். பித்தன் தரும் கேள்விக்கு நீங்களும் பதில் அளியுங்கள்.

ஐந்து தரமான –குறும்பான யதார்த்தமான– பதில்கள் பிரசுரிக்கப்படும். பதில்களை ஜனவரி 29 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.



*கேள்வி:– பேனாக்கள் பேசும் என்பதைப் பற்றி என்ன நினைக்கிறீர்*

பதில்:– சிறுவயதில் பேனாவின் சுயசரிதையை நீர் படித்ததில்லையா?

பித்தனுக்கு எங்கள் பதில்கள்,
சுடர்ஒளி வார இதழ்,
85, ஜெயந்தமல்லிமாராய்ச்சி வீதி,
கொழும்பு-14.

## டேஸ்ட் கடை தணிகாசலம்

# குடியையே கெடுத்தது குடி

தணிகாசலம் அண்ணன் இப்போது ஏக பிஸி. சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணப் பொருட்களைச் சேகரிப்பதும், இளைஞர்களை கூட்டிக் கொண்டுபோய் மீட்புப்பணிகளில் ஈடுபடுவதுமாக இருந்தார்.

இன்றுதான் சற்று ஓய்வாக இருந்தார். சில நாட்களாக படிக்காத பத்திரிகைகளைப் புரட்டிக்கொண்டிருந்தார்.

அப்போது கினிகத்தேனையில் இருந்து அடைக்கலம் பாட்டி வந்து தனது இரண்டு பேரப்பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு மூட்டை முடிச்சுகளையும் தூக்கிக் கொண்டு வந்து சேர்ந்தார்.

அவர்களின் கோலத்தைக்கண்டு தணிகாசலம் அண்ணன் பதறிப் போனார். என்ன பாட்டி இப்படி என்று கேட்குமுன் அந்தப்பாட்டி தணிகாசலம் அண்ணனைக் கட்டிப் பிடித்துக்கொண்டு அழ ஆரம்பித்து விட்டார். கூடவந்தபிள்ளைகளும் கண்ணீர் வடிக்க ஆரம்பித்துவிட்டனர்.

அவர்களை ஆறுதல் படுத்துவதற்குள் தணிகாசலம் அண்ணனுக்குப் போதும் போதும் என்றாகிவிட்டது.

வீட்டுக்குள் இருந்த ஆத்தாவும் சத்தம் கேட்டு ஓடிவந்து வீட்டுக்குள் அழைத்துச் சென்று தேநீர் கொடுத்து களைப்பாற்றினார்.

''அது சரி நீங்கள் மட்டும் வந்திருக்கின்றீர்களே கண்ணம்மா வரவில்லையா? என்று கேட்டார் தணி அண்ணன்.

அப்போது மீண்டும் அழ ஆரம்பித்தாள் அடைக்கலம் பாட்டி. ஒருபடியாக விவரம் தெரிந்த பொண்ணு வாசுகி மெதுவாகப் பேச ஆரம்பித்தாள்.

''அம்மாவை ஜெயில்ல அடைத்து விட்டார்கள் மாமா'' என்று அவளும் அழ ஆரம்பித்து விட்டாள்.

''என்ன... ஜெயில்ல அடைத்துவிட்டாரா? ஒங்க அப்பன் அவன்தான் குடிகார மொட்டை என்ன ஆனான்? ''என்று பதைப்புடன் கேட்டார் தணி அண்ணன்.

''எல்லாம் அந்தப்பாவியால் வந்த கொடுமைதான் தம்பி. இப்ப என் பொண்ணு கம்பி எண்ணுகிறாள்'' என்று கூறினாள் அடைக்கலம் பாட்டி.

''என்ன பாட்டி சொல்லுறீங்க...? வாசுகி நீயாவது சொஞ்சம் வெவரமாச் சொல்லு அம்மா''

''ஆமாங்க மாமா, பாட்டி சொல்லுறது உண்மைதான். அம்மா என்னமோ சொந்தக் காரவுங்க பேச்சைக் கேட்காம அப்பாவை கட்டிக்கிட்டாங்க. நீங்களும் ஒட்டு மொத்தமா ஒதுக்கி வைச்சிட்டீங்க. இந்த இருபது வருஷமா அம்மா படாதபாடுபட்டாங்க. தினமும் அடி உதை. அப்பா தினமும் குடித்து விட்டு வந்து ஒரே குழப்பம்.

அம்மா யாருகிட்டப்போய் சொல்லுவாங்க? சொந்தபந்தம் எல்லாம் ஒதுக்கிப் புட்டாங்க. அப்பாவீட்டுக்காரரும் உருப்படியா யாரும் இல்ல.

பல்லைக்கடித்துக் கொண்டு வருவது வரட்டும் என்று அம்மா எதிர் நீச்சல் போட்டாங்க. ஓய்வு ஒழிவு இல்லாம வேலை செய்தாங்க. சீட்டுப் போட்டு சிக்கனப்படுத்தி எங்களைப் படிக்க வச்சாங்க. அம்மா சேர்த்து வச்ச சொஞ்ச நஞ்சம் காசையும் அப்பா திருடிக் கிட்டு போயிடுவாரு. தோட்டத்தில் இப்ப கசிப்பு விற்கிறாங்க. அதைப் புடிக்க வார பொலிஸ்காரனுகளும் கப்பம் வாங்கிக் கிட்டு போயிடுவாங்க.

அப்படித்தான் போனமாசம் கசிப்புக் குடிக்கிற இடத்தில இருந்து அப்பாவைப் பொலிஸ் புடிச்சிக்கிட்டு போயிட்டாங்க. கசிப்பு வித்தவனை விட்டுப்புட்டு, குடிச்சவனை புடிச்சிக்கிட்டுப் போயிட்டாங்க.

அப்பாவுக்குப் பத்தாயிரம் ரூபா தண்டம் அடிச்சிட்டாங்க'' என்று கண்ணீருடன் கூறினாள் வாசுகி.

''இது என்னட அநியாயமா இருக்கு. தேங்காய் திருடியனை விட்டுப்புட்டு சாப்பிட்டவனைத்



தண்டிக்கிற கதையா இல்ல இருக்கு'' என்றார் தணி அண்ணன்.

வாசுகி தொடர்ந்தாள். '' இந்த மாசம் சம்பளம் போட்டப்ப அம்மா சம்பளம் 7 ஆயிரம் ரூபாவையும் கொண்டுவந்து வச்சி இருந்தாங்க. அதோட சீட்டுக்காசு ஐயாயிரம் ரூபாவும் இருந்திச்சு. எங்க அப்பா எல்லாப் பணத்தையும் தூக்கிக்கிட்டு போய் கசிப்பு விக்கிறவன் கிட்ட கொடுத்துப்புட்டு வந்திச்சி.

இந்த அநியாயத்தை அம்மாவால பொறுத்துக்க முடியல. அப்பாவைக் கண்டவுடன் ஆத்திரம் வந்திரிச்சு. ஏன் இப்படி செஞ்சீங்க என்று கேட்டார். அவ்வளவுதான். குடிபோதையில வந்த அப்பா அம்மாவையும் எங்களையும் தாறுமாறாக அடித்தும் உதைத்தும் போட்டார். வெளிய ஓடமுடியாம வீட்டையும் பூட்டிப்புட்டார். அதோட நிக்கல. கவ்வாத்துக் கத்தியை எடுத்து அம்மாவோட தலைமுடியையும் அறுத்துப் போட்டுட்டு போயிட்டார். இதற்கு மேல் எங்களால் பொறுக்க முடியல.

மூட்டைப்பூச்சிக்கு அடிக்கக் கொண்டு வந்த மருந்தைக் கலக்கி அம்மாவும் குடிச்சிட்டு எங்களுக்கும் கொடுத்தாங்க. நாங்க எல்லோரும் குடித்தோம். அப்படியே மயங்கிட்டோம்.

அக்கம் பக்கத்தில உள்ளவுங்க எங்கள ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனாங்களாம். டொக்டர்மார் எல்லாம் கஷ்டப்பட்டு எங்களைக் காப்பாத்திப்புட்டாங்க. ஆனா சின்னத் தங்கச்சிமட்டும் செத்துப் போச்சி. அதுனால அம்மா சின்னத்தங்கச்சிக்கு விஷம் கொடுத்துக் கொலை செஞ்சிட்டாங்கன்னு ஒரு வருடம் சிறை தண்டனை கொடுத்துப் புட்டாங்க. இப்ப நாங்க ஆதரவு இல்லாம போயிட்டம்'' என்று அழுதாள் வாசுகி.

இது வாசுகி வீட்டுக் கதை மட்டும் அல்ல. இன்று மலையகத்தில் ஒவ்வொரு குடும்பத்திலும் நடக்கும் கதையாகி விட்டது.

''இதை எல்லாம் சட்டம் போட்டுத் தடுக்க முடியாது. ஊர்ச் சனங்க தான் ஒன்று பட்டு இந்த மது ஒழிப்புப் போராட்டதை நடத்தணும். இல்லாவிட்டால் குடியைக் கெடுக்கும் குடியை யாராலும் ஒழிக்கவே முடியாது. அதற்கான வேலையைப்பார்ப்போம். நீங்கள் எங்கும் போக வேண்டாம். மாமா இருக்கின்றேன். என்னோடேயே இருங்க. இனி உங்களுக்கு எல்லாமே நான்'' என்று ஆறுதல் கூறினார் தணி அண்ணன்.

தனி ஒருவர் எத்தனை பேருக்குத்தான் அடைக்கலம் கொடுக்க முடியும்?




# சாது மிரண்டால் காடு கொள்ளாது

ஏதாவது ஓர் அக்கிரமம், அநியாயம் நடக்கும்போது ஒருவர் எதிர்த்துக்கேட்டால் உதாசீனப்படுத்தி விடுவார்கள். நால்வர் கேட்டால் மிரட்டி அனுப்பி விடுவார்கள். பத்துப்பேர் கேட்டால் தட்டி அனுப்பி விடுவார்கள். நாற்பதுபேர் கேட்டால் குழப்பக்காரர்கள் என்று அதிகாரப்பலத்தால் கம்பி எண்ண வைத்துவிடுவார்கள். ஆனால் அதையே ஆயிரம்பேர் கூட்டமாகப் போய்க் கேட்கும்போது அசைந்து கொடுப்பார்கள். ஆணவத்தோடு மிரட்டி அனுப்பியவர்கள் நிச்சயம் அடிபணிந்து வந்தே ஆக வேண்டும். அதுதான் இன்றைய மலையக இளைஞர், யுவதிகளின்நிலைமையும்.

தம்மிடம் இருக்கும் திறமையும், ஒழுக்கத்திறமையும் இவர்களுக்கு இன்னும் புரியவில்லை. படித்துவிட்டோம், பக்குவப் பட்டுவிட்டோம் என்று இருந்துவிட்டால் கடைசிவரை உங்களுக்கு நியாயம் கிடைக்கப் போவதில்லை.

வீட்டுக்குள்ளே இருந்து என்னதான் முழக்கமிட்டாலும், பத்திரிகைகள் மூலம் கிழித்து எழுதினாலும் ஏதும் நடக்கப் போவதில்லை. ரோட்டுக்கு இறங்க வேண்டும்.

உங்களுடைய பெற்றோரின் சந்தாப் பணத்தில் உல்லாச வாழ்க்கை நடத்தும் உங்கள் தலைவர்கள் எத்தனை முறை உங்களை நடுச்சந்தியில் விட்டுள்ளனர்? பட்டை நாமம் சாத்தி உள்ளனர்? இதைச் சற்றுத் திரும்பிப் பாருங்கள்.

பொலிஸ் உத்தியோகம், ஆசிரியர் தொழில், கச்சேரியில் வேலை.. எல்லாம் கேட்டுவிட்டோம். 'ஐக்கம்மா, பொம்மக்கா, சூ மந்திரகாளி. இதோ எல்லாம் எங்கள் கையில்தான்' என்று தெருவித்தைக்காரன் போல் தம்பட்டம் அடித்தனர்.

அமைச்சரவைக்குப் பத்திரங்களை சமர்ப்பித்துவிட்டோம், எல்லாம் சரி என்று பேட்டி அளித்தனர். இதில் எது நடந்தது? எதுவுமே நடக்கவில்லை. எல்லாம் ஏமாற்றும், பம்மாத்தும் தான்.

அமைச்சரவைக்கும் பேப்பர்களைப் போட்டார்கள்தான். எதற்குத் தெரியுமா? பாட்டன், பூட்டன் பெயரில் அரச சொத்துகளை வாரிச்சுருட்டிக்கொள்ள. ஆனால் இவர்களின் ஜம்பம் பலிக்கவில்லை.

பெருந்தோட்டத் துறைக்குப் பொறுப்பான அமைச்சராக முன்பிருந்த சி.பி.ரத்னாயக்க படித்தவர்களின்விவரம் திரட்டினார். அதை உறுதிப்படுத்த நேர்முகப் பரீட்சைகளை நடத்தினார். தகுதியானவர்களின் பட்டியலை ஜனாதிபதியிடம் கையளித்தார். நவம்பர் மாதம் மலையக இளைஞர், யுவதிகளுக்கு நியமனம் வழங்கத் தயார் என ஜனாதிபதியும் கூறிவிட்டார்.

அப்போதுதான் அரசியல் சூறாவளியில் அடித்துச்செல்லப்பட்டார் அமைச்சர் ரத்நாயக்க.

அந்த நாற்காலியைக் கட்டிப்பிடித்துக் கொண்டார் அமைச்சர் முத்து சிவலிங்கம்.

வந்தநாள் முதல், முன்னைய அமைச்சர் எதையுமே செய்யவில்லை. வெறும் பம்மாத்துக் காட்டி உள்ளார். அமைச்சில் எந்த விவரமும் இல்லை என்று குறை கூறிக் கொண்டே இருக்கிறார். கடைசியாக இவர் என்ன செய்தார்? இவரும் பத்திரிகை விளம்பரம் செய்து ஆள் திரட்டினார். அந்த விளம்பரத்தில் முன்பு விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத்தேவை இல்லை என்றும் குறிப்பிட்டிருந்தார்.

அதாவது அமைச்சில் எதுவுமே இல்லை என்று கூறியவர், எப்படி முன்பு விண்ணப்பித்தவர்களின் விவரங்களைக் கண்டார்? இது முழுப் பூசணிக்காயைச் சோற்றுக்குள் அல்ல ஒரு துண்டு ரொட்டிக்குள் மறைத்த கதை போன்றது.

அமைச்சராக வந்தவுடன் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பித்தார். இப்போது அமைச்சுப் பதவியின் ஆண்டுவிழா கொண்டாடப்போகிறார். இன்னுமா அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கவில்லை?

இவர்களுடைய ஏமாற்று வித்தையினால் மலையக இளைஞர்,யுவதிகள் படுகுழியில் தள்ளப்பட்டுள்ளனர்.

அதன் தாக்கம் இம்முறை ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரிக்கு அவசியமான விண்ணப்பதாரிகள் இல்லை.

இதற்கான காரணம் என்ன? ஜீ.சி.ஈ உயர்தர தகுதி உடையவர்கள் அனைவரும் இந்த அமைச்சரின் பேச்சை நம்பிவிண்ணப்பித்துவிட்டனர். அமைச்சரோ அமைச்சரவைக்கு அனுமதி கோரி விண்ணப்பித்துவிட்டேன் என்கின்றார்.

ஆசிரியர்களாக 3500 பேர், பொலிஸ்காரர்களாக ஆயிரம்பேர், கச்சேரியில் ஆயிரத்து 500பேர் நியமனம் பெற வேண்டும் என்று கேட்டே ஒப்பந்தம் செய்து அமைச்சர் பதவி ஏற்றோம். ஜனாதிபதியும் ஒப்புக்கொண்டார் என்று பீற்றிக்கொண்டனர்.

எந்த வழியிலோ நமக்கு ஒரு தொழில் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையுடன் மலையக இளைஞர், யுவதிகள் இம் முறை ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரிக்கு விண்ணப்பிக்கத் தவறிவிட்டனர்.

இந்த மலையகத் தலைமைகள் அப்பாவித் தோட்டத் தொழிலாளர்களின் வாரிசுகளை மீண்டும் நடுத்தெருவில் நிறுத்திவிட்டனர்.

மலையக இந்திய வம்சாவளி மாணவர்களுக்கு மட்டுமே என உருவாக்கப்பட்ட ஸ்ரீபாத கல்லூரியில் 25 வீதம் சிங்களவர்களுக்கும் இடம் வாங்கிக்கொடுத்தார்கள் அன்று.

ஆனால், இந்த அமைச்சரின் திருவிளையாடலால் ஸ்ரீபாதக் கல்லூரியில் சிங்கள இளைஞர், யுவதிகள் பெரும்பான்மையாகிவிட்டனர்.

உங்களுடைய உருட்டும் புரட்டும் மலையக இளம் சமுதாயத்தை நிம்மதி இழக்கச்செய்துவிட்டன.

மலையக இளைஞர் யுவதிகளே! நீங்கள் ஒன்றுபட்டு உரிமைக்குரல் எழுப்பும்வரை உங்களுக்கு விடிவே இல்லை.

காலம்காலமாக உங்கள் பெற்றோரைக் கூட்டு ஒப்பந்தம் என்று அடிமைகளாக்கி வைத்திருப்பது போல் உங்களையும் அடிமைகளாக்கிவிடுவார்கள். இது உங்களுக்கு ஒரு ஆலோசனை மட்டுமல்ல. ஒரு எச்சரிக்கையும் கூட.

இப்போது இக்கட்டுரையின் முதல் பத்தியை வாசித்துப்பாருங்கள். நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று புரியும். சாது மிரண்டால் காடு கொள்ளாது.

# சுனாமியை விஞ்சும் பேரினவாதம்

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

2001ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது தலைவர்கள் ரணில்விக்கிரமசிங்கவும்,ரவூப் ஹக்கீமும் செய்து கொண்ட ஐ.தே.க – மு.கா. புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும் கல்முனை கரையோர மாவட்டம் முக்கியத்துவம் பெற்றிருந்தது.

ஆட்சி அதிகாரத்தில் இருந்த இரு பெரும் தேசியக் கட்சிகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களில் தரப்பட்டிருந்த உத்தரவாதங்கள் நிறைவேற்றித்தரப்படவில்லை. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸைப் பொறுத்தவரை ஒவ்வொரு தேர்தலின்போதும் மக்களின் வாக்குகளைச் சூறையாடுவதற்கான ஒரு யுக்தியாக கல்முனை கரையோர மாவட்ட விவகாரத்தைப் பயன்படுத்தி வந்திருக்கிறது. தேர்தல் முடிந்த பின்னர் ஆட்சியின் பங்காளியாக இருக்கின்றபோது அக்கோரிக்கையை வென்றெடுப்பதற்கான முயற்சிகளை மு.கா. மேற்கொள்ளவில்லை.

## கிடப்பில் போடப்பட்ட கோரிக்கை

கடந்த 2004 ஏப்ரல் பொதுத் தேர்தலின் போதும் இம்மாவட்ட விவகாரம் முக்கிய இடத்தை வகித்தது. ஐ.தே.க – மு.கா. தேர்தல் உடன்படிக்கையில் மாத்திரமல்லாது, ஜனாதிபதி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் அமைச்சர் பேரியல் அஷ்ரப் தலைமையிலான நுஆ, அமைச்சர் அதாவுல்லா தலைமையிலான தேசிய முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன செய்து கொண்ட ஒப்பந்தங்களிலும் கரையோர மாவட்ட உத்தரவாதம் இடம்பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால்,தேர்தல் முடிந்த பின்பு அக்கோரிக்கை வழமைபோல் கிடப்பில் போடப்பட்டது. எவரும் அதற்கான முயற்சிகளில் ஈடுபடவில்லை. அதேவேளை கடந்த 2003ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் போது கரையோர மாவடத்துக்கு முன்னோடியாக கல்முனையில் மேலதிக மாவட்ட செயலகம் ஒன்றை அமைப்பதற்கு அரச மட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டபோதிலும் அமைச்சர் அதாவுல்லாவின் பிரதேசவாத உணர்வு காரணமாக அது தடைப்பட்டது என அப்போது கூறப்பட்டது.

குறித்த மேலதிக செயலகம் அக்கரைப்பற்றிலேயே அமைக்கப்பட வேண்டும் என அவர் அடம்பிடிக்க, முஸ்லிம் காங்கிரஸின் ஏனைய எம்.பிக்கள் கல்முனையையே முன்னிலைப்படுத்தினர். இந்த இழுபறி, அரசு தர முன்வந்ததையும் தடுத்துவிட்டது. இதன் பின்னர் கல்முனை கரையோர மாவட்டம், மேலதிக மாவட்ட செயலகம்,அம்பாறை மாவட்டத்திற்கு தமிழ் பேசும் அரச அதிபர் என்ற பேச்சு மங்கி மறைந்துபோனது எனலாம்.

இந்த நிலையில் சுனாமி பேரனர்த்தம் மக்களிடையே மறந்து போயிருந்த பழைய கோரிக்கையை ஞாபகத்திற்குக் கொண்டு வந்திருக்கிறது. கடல் பேரலைகளால் வீடு, வாசல்கள்,சொத்துகள், உடமைகள் அனைத்தையும் இழந்து, உறவினர்களையும் பறிகொடுத்து விட்டு நடுத்தெருவில் நிர்க்கதியடைந்து நிற்கும் மக்களுக்கு அவசர நிவாரண உதவிகள் சீராகக் கிடைக்கவில்லை. அகதி முகாம்களில் தஞ்சமடைந்திருக்கின்ற அவர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. மீட்புப் பணிகள் மற்றும் சுத்திகரிப்பு வேலைகள் மந்த கதியில் இடம்பெறுகின்றன.



மாவட்ட அரச அதிபரின் அசட்டை – பேரினவாத சிந்தனை – சட்ட விதிமுறைகள் என்ற அழுங்குப்பிடி என்பன அம்பாறை மாவட்ட மக்களின் நிர்க்கதியான நிலையை மேலும் ஆபத்தான நிலைக்கு இட்டுச் சென்றுள்ளன. அரசாங்க அதிபர் கீறிய கோட்டைத் தாண்ட முடியாது பிரதேச செயலாளர்கள் தடுமாறுகின்றனர். பாதிக்கப்பட்டவர்களின் ஏச்சுப் பேச்சுகள் – நெருக்குதல்கள் – சீற்றங்களுக்கு அவர்கள் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

## அரச அதிபரின் கொடூரம்

வரலாறு கண்டிராத அனர்த்த சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு போதுமான தேவையான – அடிப்படை வசதிகளையும்,உதவிகளையும் செய்வதற்கு பிரதேச செயலாளர்களுக்கு வேண்டிய அதிகாரங்களை வழங்காமல் – அரச அதிபர் கைவிலங்கிட்டிருக்கிறார்.

அரச அதிபரின் மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளை இந்த மாவட்டத்தைச் சேர்ந்த அதிகாரம் படைத்த அமைச்சர்களால் தட்டிக்கேட்க முடியவில்லை. அரச அதிபர் தன்னிச்சையாக மேற்கொள்ளும் தீர்மானங்களே அமுல்படுத்தப்படுகின்றன. சுனாமி அனர்த்தம் நிகழ்ந்து நான்கு வாரங்கள் கடந்து விட்டபோதிலும் இம்மாவட்ட அமைச்சர்கள்,எம்.பிக்கள் மற்றும் அதிகாரிகளை ஒன்றுகூட்டி ஓர் ஆலோசனைக் கூட்டத்தைக்கூட அவர் நடத்தவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுனாமி பேரலைகளின் கோரத்தாண்டவத்தைவிட அரச அதிபரின் கொடூரம் தாண்டவமாடுகிறது. இப்பகுதி தமிழ், முஸ்லிம் மக்கள் படும் அவஸ்தைகள் அவரால் உணர்ந்து கொள்ளப்படவில்லை. பாதிக்கப்பட்ட மக்களின் அவலங்களை அவர் நேரில் சென்று பார்க்கவும் தயாரில்லை.

அதனால் கரையோர மாவட்டம் ஒன்று உடனடியாகப் பிரகடனப்படுத்தப்பட்டு தமிழ் பேசும் ஒருவர் அரச அதிபராக நியமிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்று வருகிறது. எனினும் அதனை உடனடியாகச் செய்ய முடியாது என அரச மட்டத்தில் பதிலளிக்கப்பட்டிருக்கிறது.

இதையடுத்து அம்பாறை மாவட்டத்திற்கு தமிழ்பேசும் ஒருவரை மேலதிக அரச அதிபராக நியமிக்குமாறு விடுக்கப்பட்டு வந்த கோரிக்கை நிறைவேற்றப்பட்டிருக்கிறது. 2005.01.18ஆம் திகதி முதல் யூ.எல்.ஏ. அஸீஸ் என்பவர் மாவட்ட மேலதிக அரச அதிபராக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் கல்முனையில் இருந்து மேலதிக அரச அதிபராகப் பணியாற்றுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கண்துடைப்பா?

இந்த நியமனம் அம்பாறை மாவட்ட தமிழ்பேசும் மக்களுக்கு ஓரளவு ஆறுதலைத் தந்திருக்கின்றபோதிலும் அவரது பணிகளைப் பொறுத்தே அதன் பயன்கள் பற்றி முழுமையாக தெரிந்து கொள்ளமுடியும்.

நான்கு தொகுதிகளைக் கொண்ட அம்பாறை மாவட்டத்தில் தமிழ், முஸ்லிம் மக்கள் வாழும் கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் ஆகிய மூன்று தொகுதிகளையும் மாவட்ட அரச அதிபரின் அடக்கு முறையில்லாமல் நிர்வகிக்கக்கூடிய அதிகாரம் மேலதிக அரச அதிபருக்கு வழங்கப்பட்டால் மாத்திரமே இந்த நியமனம் மக்களின் எதிர்பார்ப்பை – அபிலாஷைகளை – நிறைவேற்றித்தரும்.அவ்வாறு இல்லாதவிடத்து ஜனாதிபதியினால் செய்யப்பட்ட இந்த நியமனம் வெறும் கண்துடைப்பாகத்தான் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

எவ்வாறாயினும் இந்த ஆரம்பக்கட்ட முயற்சிகள் – ஏற்பாடுகள் எதிர்காலத்தில் தனிமாவட்டம் ஒன்று அமைவதற்கு கால்கோளாக அமையும் எனக் கூறலாம்.

தமிழ் – முஸ்லிம் எம்.பிக்களும், அமைச்சர்களும் ஒன்றுபட்டு முயற்சித்தால் அம்பாறை கரையோரப் பிரதேசங்களை உள்ளடக்கிய தனிமாவட்டத்தைக் குறுகிய காலத்துக்குள் வென்றெடுக்க முடியும்.

–அஸ்லம் எஸ். மௌலானா

---

## சொற்சிலம்பம் போட்டி இல.144

சொற்சிலம்பம் 144 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்க வேண்டிய கடைசித்தினம் ஜனவரி 30ஆம் திகதி ஆகும். விடைகள் பெப்ரவரி06ஆம் திகதி சுடர் ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் பெப்ரவரி13ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.142க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250ரூபாவும், இரண்டாவது பரிசாக 150ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**
'சுடர் ஒளி'
85,ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14.

## சொற்சிலம்பம் போட்டி இல.142

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 சி | 2 வி | 3 கை | ■ | 4 க | 5 ச | 6 க | 7 சா |
| 8 பி | ர | தி | 9 யு | ப | கா | ர | ம் |
| ■ | க | ■ | 10 க | டி | ■ | ங் | ■ |
| 11 ஆ | தா | 12 ர | ம் | ■ | 13 த | கு | 14 தி |
| 15 த | ப | தி | ■ | 16 த | லை | வி | ரி |
| 17 ர | ம் | ■ | 18 நி | லை | மை | ■ | சூ |
| வு | ■ | 19 ம | னை | வி | ■ | 20 சி | ல |
| ■ | 21 பா | தி | ■ | 22 தி | ர | வ | ம் |

## சொற்சிலம்பம் போட்டி இல. 141

1.நா. அச்சுதன்,
இல.389, திருநகர்,
யோகபுரம்.

2.எஸ்.ராதிகா, ''தாமரை''
கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

3.திருமதி. ரகுநாதன்,
156/ 24, டொக்கியா றோட்,
திருகோணமலை.

### பாராட்டுப் பெறுவோர்

1திருமதி. ராஜினி புண்ணிய மூர்த்தி,
இல. 36, புகையிரத நிலைய வீதி,
மட்டக்களப்பு.
2. உ. சஜீவ்,
J,அன்டர்சன் தொடர்மாடி,
கொழும்பு–05.
3. கே.இராஜகோபால்,
அடைக்கலம் தோட்டம்,
வட்டுக்கோட்டை.
4.எஸ்.பாலமுரளிதரன்,
இந்துக்கல்லூரி வீதி,
பண்டத்தரிப்பு.
5. ரீ.தவேஸ்வரன்,
புகையிரத நிலைய வீதி,
மல்லாகம்,
யாழ்ப்பாணம்.
6.எஸ். சிற்றம்பலம்,
இல.7, பிரதான வீதி,
கொட்டகல.
7. க.நிரஞ்சன்,
22, பிரதிபிம்பராம வீதி,
களுபோவில.
8. சிவா சண்முகலிங்கம்,
71/ 9, காலி வீதி,
தெகிவளை.
9. வ.ஆ. அதிரூபசிங்கம்,
அம்மன் கோவிலடி,
வல்வெட்டித்துறை.
10.இ.ஆறுமுகம்,
தொட்டிலடி,
சங்கானை.

## சொற்சிலம்பம் போட்டி இல.144

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | ■ | 5 |
| 6 | | ■ | 7 | | ■ | 8 | |
| 9 | | 10 | | ■ | 11 | | |
| | ■ | | ■ | 12 | | ■ | |
| ■ | 13 | | 14 | | ■ | 15 | |
| 16 | | | | ■ | 17 | | ■ |
| 18 | | | ■ | 19 | | | 20 |
| 21 | | ■ | 22 | | | | |

## சொற்சிலம்பம் போட்டி இல.144

**இடமிருந்து வலம்**

1.விடுதலைப்போராட்டம் இதற்கு.
6.(பரந்த)தோற்றம்/கட்டமைப்பு.
7.பாடகன்/ குரங்கு.
8.குளிர்மைத்தன்மை.
9.கணவன்–மனைவி
11.காட்டு விலங்கு.
12.மழை காலம்.
13.வலது குறைந்தவன்.
15.உமது.
16.சூரியன்.
17.வனம்.
18.பாம்பு ரகம்.
19.காலணி ஆபரணம்.
21.சாப்பிடு.
22.கடலில் விளைவது. விலையுயர்ந்த சங்கு வகை.

**மேலிருந்து கீழ்**

1. உயிர் வாழ்க்கையின் வெளிப்பாடு.
2. தகைமைத் தன்மை.
3. தினசரி மாறுவது.
4. சூரிய வம்சத்துக்கு இந்தக் குலம் என்றும் கூறுவர்.
5. கண்டது கற்க இவனாவான்.
8. பெருக்கல் குறி.
10. நகரம்.
11. எரிந்தால் மிஞ்சுவது/ யானை.
12. காட்டு விலங்கு. சாதுவானது.
13. வேலன்.
14.பலவந்தமாக(செய்வது)/ வலோற்காரமாக.
15. ஊர்வன வகை விலங்கு.
16. தொடக்கமே குறிப்பிட முடியாதது.
17. நேரத்துடன் தொடர்புடையது.
19. பலவல்ல.
20.செய்.


# பயங்கர சுனாமி யுகே...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

தினசரி குறைந்தது பத்துக்கும் அதிகமான புவிநடுக்கங்கள் பூமியின் வெவ்வேறு பகுதிகளில் நடந்துகொண்டுதான் இருப்பதாக புவியியல் விஞ்ஞானிகள் கூறுகின்றனர். ஆனால், இந்த இயற்கையின் நியதிகளை தமக்கு அழிவுக்கு காரணமாக்குவது மனிதனின் பொறுப்பற்ற செயல்களே.

கடல் என்பதை மனிதனின் கழிவுப்பொருட்களை வீசும் கழிவிடமாக மனிதன் உபயோகிக்கின்றான். உதாரணமாக மடகஸ்கார்தீவில் 6 வீதமான கழிவுப்பொருகள்தான் சேகரிக்கப்பட்டு சுகாதார முறையில் அழிக்கப்படுகின்றன. மிகுதி 94 வீதமும் சுற்றிவர உள்ள கடலினுள் தான் வீசப்படுகின்றன. எமது நாட்டில் கரையோர மக்களின் கழிவறைகள் மட்டுமல்ல, பெரும் தொழிற்சாலைகளின் கழிவுகள் கூட கடலினுள்தான் சேர்க்கப்படுகின்றன. கரையோரமாக கடற்கரைகளில் நடந்துதிரிந்தால் வெற்றுப் பிளாஸ்ரிக் பொருட்கள், பொலித்தின் பொருட்கள், குப்பைகள் என்று எந்த கழிவுப் பொருட்களையும் நிதர்சனமாக காணமுடிகிறது. கடலில் செல்லும் ஒரு பயணிகள் பிரயாணக்கப்பல் 400 கனமீற்றர் தொட்டு 1200 கனமீற்றர் அளவுள்ள கழிவுகளை கடலினுள் வீசி செல்கிறது.

இதுதவிர கப்பலில் சிந்திய எண்ணெய் கழிவுகள், விபத்துக்குள்ளான கப்பல்களிலிருந்து வெளியேறும் எண்ணெய் கசிவுகள் யாவும் இந்த கடலில்தான் சங்கமிக்கின்றன. இவை கடலின் இயற்கை சூழ்நிலையை அழிக்கின்றன. கடலில் வளரும் CORAL REEFS என்கின்ற பவளப்பாறைகளின்வளர்ச்சி தடைப்படுகின்றது. போதாக்குறைக்கு மனிதனும் இந்த பவளப்பாறைகளை உடைத்தெடுத்து வீடுகட்ட சுண்ணாம்பு தயாரிக்கிறான். எமது தெற்கு கடற்கரையோரத்தில் இந்த மாதிரியான சுண்ணாம்பு சூளைகள் ஆயிரக்கணக்கில் இருந்தன. இது தவிர கடலும் நன்னீரும் கலக்கும் இடங்களில் உள்ள தாழை (PANDANUS) போன்ற சதுப்பு நில தாவரவர்க்கங்களும், இன்று அழிந்து போயுள்ளன MANGROVE எனப்படும் இந்த சதுப்பு நிலமும் இன்று வீடு மனைகளை கட்டுவதற்கு மண் நிரப்பப்பட்டு மூடப்படுகின்றது. இந்த இயற்கை வளங்கள் எல்லாம் இயற்கை அழிவுகளிலிருந்து எம்மை காப்பாற்ற படைக்கப்பட்டன. இவைகள் அழிந்து போனதால்தான் இன்றைய சுனாமி அழிவு இத்தனை பயங்கரமான அனர்த்தத்தை ஏற்படுத்தியது என்று புவியியல் வல்லுனர்கள் கருத்து தெரிவிக்கின்றார்கள். இதற்கு அவர்கள் சான்றுகளாக தரும் விஷயங்களைப் பார்ப்போம்.




1999ஆம் ஆண்டில் ஒரிஸ்ஸா மாநிலத்தில் அடித்த பெரும் சூறாவளியினால் பல கிராமங்கள் அழிந்தன.10,000க் கணக்கானோர் மாண்டனர். ஆனால், பைத்ராகனிக வனவிலங்கு சரணாலயத்தை சுற்றியிருந்த கிராமங்கள் பல இந்த அனர்த்தத்தில் இருந்து முற்றாக தப்பின. இந்த வனவிலங்கு *சரணாலயம் இந்தியாவின் மிகப்பெரிய* சதுப்புநில (MANGROVE) காடுகளில் இரண்டாவது ஸ்தானத்தை வகிக்கின்றது. இதுபோல் பங்களாதேஷில் சதுப்பு நில காடுகள் நிறைந்த கிராமங்கள் அங்கு அடிக்கடி ஏற்படும் சூறாவளி தாக்கத்திலிருந்து தப்புகின்றன.

தற்பொழுது ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தில் பெரும் அழிவை சந்தித்த இந்தோனேஷிய நகரங்களான புக்கெட், பெங்நிகா, கிராபி (PHUKET, PHANG NGA, KRABI) என்பவை முன்னர் கரையோரப் பகுதிகளாக இருந்த வனங்களை முற்றாக அழித்து புதிதாக எழுப்பப்பட்ட நகரங்களாகும்.

இதைவிட மிகவும் அதிசயமான ஒரு நிகழ்வு டிகோ கார்சியா (DIEGO GARCIA) என்ற தீவு. இந்து மகா சமுத்திரத்தில் இந்தியாவிலிருந்து 1000 மைல்கள் தெற்கிலும் ஜாவா நிலநடுக்க மையப்பகுதியிலிந்தது 2000 மைல் தொலைவிலும் இது உள்ளது. அங்கு அமெரிக்க, கடற்படைத்தளம் அமைத்து. 1700 கடற்படைவீரர்களும் 1500 குடிமக்களும் இங்கு வாழ்கின்றனர். 39 மைல் நீளமான குதிரை லாட வடிவான இத்தீவு கடல் மட்டத்திலிருந்து 22 அடி உயரத்தில் உள்ளது. தற்பொழுது பாய்ந்து வந்த இந்த சுனாமி அலைகள் இந்த தீவையும் கடந்து சென்றன. இந்த அலைகள் சிறிய பேரலைகளை ஏற்படுத்தி கடல் கொந்தளித்ததே ஒழிய, கடல் நீர் தீவுக்குள் புகவுமில்லை, அலைகள் உயர்ந்து அழிவுகளைத் தரவுமில்லை. அதேவேளை இந்த சிறிய தீவை கடந்து சென்ற பேரலைகள் சுமத்திரா நில நடுக்க மையத்திலிருந்து 3000 மைலுக்கு அப்பாலிருந்த சோமாலியா கரைப்பகுதிகளை தாக்கி, நூற்றுக்கு அதிகமான உயிர் சேதத்தையும் பெரும் பொருட் சேதத்தையும் ஏற்படுத்தின.

இதன் காரணம் என்ன? இந்த தீவை சுற்றியிருந்த பலமைல் நீளமான பவளப் பாறைகளும் (CORAL REEFS) வடக்கிலிருந்த 650 கி.மீட்டர் நீண்டதும் 5000 மீட்டர் ஆழமுமான சாகோஸ் கடல் பள்ளதாக்கும் (CHAGOS TRENCH) இராட்சத சுனாமி அலைகளின் தாக்கத்தை குறைத்து அலை எழும்பும் சக்தியையும் குறைத்து உள்ளன. இயற்கை தந்த கொடையை மனிதன் அழிக்காமல் பாதுகாத்ததால் இந்த சின்னத்தீவு தப்பியது.

இலங்கையின் தெற்கு பகுதியிலும் பவளப் பாறைகள் நிறைய உள்ளன. இவை அகழ்ந்தெடுக்கப்பட்டும், உடைத்தெடுக்கப்பட்டும் சேதப்படுத்தப்படாமல் இருந்திருந்தால் உல்லாச நகர்களான பெந்தோட்டை, தங்காலை என்பன இப்படியான பேரழிவை சந்தித்திருக்காது என்பது புவியியலாளர் வாதம்.

எமது இலங்கையைச் சுற்றியும் 100க்கு அதிகமான சதுப்பு நிலப்பரப்புக்கள் உள்ளன. மண் அரிப்பைத் தடுக்கும் பூண்டுகளும், படரிகளும், கடற்கரைப்பகுதிகளில் காணப்படுகின்றன. காற்றின் வேகத்தை தடுக்கும் சவுக்குமரத் தோப்புக்களும் உள்ளன. இவை யாவும் கடற்கரையோரச் சூழலை பாதுகாக்க இயற்கை அளித்த வரங்கள்.

நாம் என்ன செய்கின்றோம். குடியிருப்புகள், உல்லாச விடுதிகள், தொழிற்சாலைகள், தொழில் முறைகளுக்காக இவற்றை கன்னாபின்னா என்று அழித்தொழித்து விட்டு இயற்கை தனது சாதாரண தொழிற்பாட்டை நடாத்தும்போது அழிவுகளை சந்தித்து கதறி அழுகின்றோம்.

மனிதன்தான் இயற்கையோடு ஒட்டிவாழ வேண்டுமே ஒழிய, இயற்கையை மனிதன் மாற்ற எண்ணுவது மடத்தனமே. இது புரிந்தும் இனியும் நடக்காவிடில் பயங்கர சுனாமி யுகே யுகே தான்.

# மீண்டும் பறவைக் காய்ச்சல்

வியட்நாம் நாட்டில் ஏராளமான உயிர்களை பலி வாங்கிய பறவைக் காய்ச்சல் நோய் மீண்டும் பூதாகரமாக பரவத்தொடங்கி உள்ளது. அங்கு கடந்த ஆண்டு டிசம்பர் வரை பறவைக்காய்ச்சல் நோய்க்கு 22 பேர் பலியாகி இருந்தனர்.

இந்நிலையில் ஹோசி மின்சிட்டி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்த 16 வயது இளம்பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

கடந்த 10 நாட்களில் உயிரிழந்த 3 ஆவது நபர் இந்தப் பெண் என்பது குறிப்பிடத்தக்கது.

இதையெடுத்து அங்கு பறவைக்காய்ச்சலுக்கு பலியானோர் எண்ணிக்கை 23 ஆக உயர்ந்துள்ளது.

மெகா டெல்டா மாகாணத்தைச் சொந்த இளம் பெண்ணுக்கு H5N1 என்ற பறவைக் காய்ச்சல் கிருமி தொற்றி இருப்பது அண்மையில் தெரிய வந்தது. இதையடுத்து தலைநகர் ஹோசி மின்சிட்டியில் உள்ள மருத்துவமனையில் அவருக்கு சிகிச்சை அளித்தனர். இருப்பினும் தீவிர சிகிச்சை பலனின்றி அந்தப் பெண் உயிரிழந்தார்.

இதனிடையே அதே மாகாணத்தைச் சேர்ந்த 18 வயது பெண் ஒருவருக்கு பறவைக் காய்ச்சல் H5N1 வைரஸ் கிருமிகள் தொற்றி இருப்பது உறுதி செய்யப்பட்டு உள்ளது.

இந்நிலையில் பறவைக்காய்ச்சல் நோய் வியட்நாமில் மேலும் தீவிரமாக பரவும் வாய்ப்பு இருப்பதாக மருத்துவ நிபுணர்கள் எச்சரித்து உள்ளனர்.

சென்ற ஆண்டில் ஆசிய நாடுகளில் பறவைக்காய்ச்சல் பரவிய பொது வெகுவாக பாதிக்கப்பட்ட தாய்லாந்தில் இதுவரை எவரும் பாதிக்கப்படவில்லை. இதைப் போல மலேசியாவில் பறவைக்காய்ச்சல் முற்றிலும் ஒழிக்கப்பட்டு விட்டதாக அந்த நாட்டு அரசு கூறி உள்ளது. சென்ற ஆண்டிலும் பறவைக்காய்ச்சல் காரணமாக தாய்லாந்தில் 12 பேர் இறந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 6.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | | |
| 6.59 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | நகழ்ச்சி ஆரம்பம் | நகழ்ச்சி ஆரம்பம் |
| 7.00 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | நகழ்ச்சி ஆரம்பம் | நகழ்ச்சி ஆரம்பம் |
| 7.30 | எம்.டி.வி நகழ்ச்சி | எம்.டி.வி நகழ்ச்சி | எம்.டி.வி நகழ்ச்சி | எம்.டி.வி நகழ்ச்சி | எம்.டி.வி நகழ்ச்சி | சங்கீதமேடை | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா |
| 8.00 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | ஒரு கதையின் கதை |
| 8.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | சிறுவர் நிகழ்ச்சி |
| 9.00 | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | ஹோலிவூட் மூவி | அரட்டை அரங்கம் |
| 9.30 | கொமடி டைம் இயற்கையுடன் ஒருநிமிடம் | கொமடி டைம் இயற்கையுடன் ஒருநிமிடம் | கொமடி டைம் இயற்கையுடன் ஒருநிமிடம் | கொமடி டைம் இயற்கையுடன் ஒருநிமிடம் | கொமடி டைம் இயற்கையுடன் ஒருநிமிடம் | குட்டி சுட்டி | சமையல் |
| 10.00 | பெப்சி உங்கள் சாய்ஸ் | மீண்டும் மீண்டும் சிரிப்பு | பாட்டுக்கு பாட்டு | நம்மநேரம் | கொண்டாட்டம் | சுனாமி நிகழ்ச்சி | சப்த ஸ்வரங்கள் |
| 10.30 | நெஞ்சில் நின்ற ராகங்கள் | சுகமான ராகங்கள் | ஆடலும் பாடலும் | இனிய கீதங்கள் | இசைத் தென்றல் | சுனாமி நிகழ்ச்சி | டொப் 10 விஸ் |
| 11.00 | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | இப்படிக்கு நீங்கள் | கிரிக்கெட் கோல்டன் மொமென்ஸ் ஒன் |
| 11.30 | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | சினி சொய்ஸ் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.00 | நட்சத்திரம் | திரை வானம் | சமையல் | விரியும் சிறகுகள் | மங்கை | சுனாமி நிகழ்ச்சி | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.30 | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | சுனாமி நிகழ்ச்சி | ஸ்டார் ஸ்பெஷல் |
| 1.00 | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 1.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 2.00 | (றொமான்ஸ்) | (அக்சன்) | (கொமடி) | (சித்திரம்) | (கிளசிக்) | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 2.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.00 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 4.00 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | கில்லி | விக்கிரமாதித்தன் | சுப்பர் 10 |
| 4.30 | டிஸ்னி வேல்ட் | டிஸ்னி வேல்ட் | மைடியர் பூதம் | மைடியர் பூதம் | மலரும் மொட்டும் | விக்கிரமாதித்தன் | நினைவுகள் |
| 5.00 | கிய பியர்ஸ் | கி-மான் | கிட்ஸ் சூன் | தமிழ் கார்ட்டூன் | என்றும் கலாட்டா | மிஸ்டர். பீன் | என்றும் கலாட்டா |
| 5.30 | கொண்டாட்டம் | சினி சொய்ஸ் | ஸ்டார் சமையல் | சுப்பர் சேன்ஸ் | இசைத் தென்றல் | ருத்ர வீணை | சுப்பர் சேன்ஸ் |
| 6.00 | இசைத்தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | பாடல்கள்/இளந்தளிர் | கோல்டன் மொமன்ஸ் | சக்தி ரீ.வி நிகழ்ச்சி | மின்னல் |
| 6.30 | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | திமி தக்க தா | மின்னல் |
| 7.00 | மனைவி | மனைவி | மனைவி | மனைவி | மனைவி | ஊரும் உலகும் | வேலன் |
| 7.30 | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | ஊரும் உலகும் | வேலன் |
| 8.00 | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் |
| 8.30 | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | றாஜ றாஜேஸ்வரி | இளைய கானம் |

# இளைஞர்களுடன் விளையாடுவது பெருமை; சுவீடன் கோல்வ் வீராங்கனை அன்னிகா தகவல்

சுவீடன் நாட்டைச்சேர்ந்தவர் அன்னிகா சொரன்ஸ்டாம். இவர் உலக அளவில் முதல் நிலை கோல்வ் விளையாட்டு வீராங்கனை யாக விளங்கி வருகிறார். அமெரிக்கா, ஐரோப்பா, ஆசியா மற்றும் அவுஸ்திரேலிய அளவில் கோல்வ் விளையாட்டில் 4 பட்டங் களை பெற்றுள்ளார்.



இந்தவெற்றிகள் கோல்வ் விளையாட் டில் உலக அளவில் சிறந்து விளங்கிவரும் ஆண் வீரர் டைகர் வூட்சுக்கு இணையாக அன்னிகாவையும் பேசவைத்துள்ளது.

தொடர்ந்து விளையாட வேண்டும் என்பதே என்னு டைய நோக்கம். தற்போது கோல்வ் விளையாட்டில் நிறைய இளம் வீராங்கனைகள் வந் திருக்கிறார்கள். அவர்களின் இளமை வேகத்துக்கு ஈடு கொடுத்து விளையாடுவதை பெருமையாக கருதுகிறேன் என்றுகூறும்அன்னிகாசொரன்ஸ் டாமின் வயது 34 ஆகும்.

இந்த வயதிலும் தன்னு டைய வெற்றிக்கு காரணம் கடின உழைப்பும், தன்னம்பிக்கையும் தானாம் என பெருமிதம் கொள்கிறார் அன்னிகா.

# அவுஸ்திரேலிய வீரர்களின் குடும்பங்களுக்கு கௌரவம்

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி 1868ஆம் ஆண்டு முதன் முறையாக இங்கிலாந்துக்கு பயணமானது. இந்த அணியை கௌரவப் படுத்த வேண்டும் என்று அவுஸ்திரேலிய முன்னாள் அணித்தலைவர் இயன் செப்பல் தீவிர முயற்சி எடுத்தார். அவருடைய கனவு தற்போதுதான் நிறைவேறி உள்ளது.

சமீபத்தில் அவுஸ்திரேலியாவில் உள்ள மெல்போர்ன் நகரில் நடந்த பாகிஸ்தான், அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணிகளுக்கு இடையேயான 2ஆவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் 2ஆம் நாள் ஆட்டத்தின் போது அவுஸ்திரேலிய அணி யில் முதன் முதலாக பங்கேற்ற வீரர்கள்தற் போது உயிரோடு இல்லை என்பதால் அவர்களுடைய உற வினர்கள் செப்பலால் கௌரவிக்கப்பட்ட னர்.



இந்த நிகழ்ச்சி எனக்கு மிகவும் சந் தோஷமாக உள்ளது. என் நீண்டநாள் முயற் சிக்கு கிடைத்தவெற்றி யின் பலனாக இது அமைந்திருக்கிறது என்றுநெகிழ்ச்சியுடன் கூறுகிறார்செப்பல்.

# அணியின் முதுகெலும்பு

பாகிஸ்தான் ஹொக்கி அணியின் முது கெலும்பாகத் திகழும் சொகைல் அப் பாஸுக்கு உலக ஹொக்கி அரங்கில் 'பெனால்ட்டி கார்னர் ஸ்பெஷலிஸ்ட்' என்ற செல்லப் பெயர் உண்டு.

அறிமுகமான 6 வருடங்களில் 268 கோல்களை அடித்து ஹொக்கி வரலாற்றி லேயே அதிக கோல் அடித்த வீரர் என்ற பெருமையை கடந்த ஆண்டு ஒக்டோபர் 8ஆம் திகதி அமிர்தசரஸில் நடந்த போட்டி யில் பெற்றார். இந்திய கிரிக்கெட் அணி டெண்டுல்கரை நம்பியிருப்பதைப் போல பாகிஸ்தான் ஹொக்கி அணி இவரை நம்பி யிருக்கிறது.

பாகிஸ்தான் அணி இதுவரை இவர் போன்ற ஒரு வீரரை உருவாக்கியதில்லை என்கிறார் பாகிஸ்தான் ஹொக்கி அணி யின் முகாமையாளர் சமி உல்லா.

இந்திய ஹொக்கி அணி வீரர்களிடம் சொகைலைப்பற்றிக் கேட்டால்—பாகிஸ்தான் அணிக்கு முதுகெலும்பாயிருந்து எதிரணி யின் வெற்றியை தடுக்கிறார் – என்று கூறுகின்றனர்.

சொகைல்



எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் அதிக கோல் அடித்த வீரர் என்ற பெரு மையும் இவருக்கு உண்டு. அந்த போட் டித் தொடரில் இவர் அடித்த கோல்களின் எண்ணிக்கை 11. சமீபத்தில் இந்தியாவு டனான 8 போட்டிகள் கொண்ட தொட ரில் இவர் அடித்த கோல்கள் 8 ஆகும். இந்தத் தொடரிலும் அதிக கோல்கள் அடித்தவர் என்ற பெருமை இவருக்குத் தான். இவர் ஹொக்கியில் இருந்தாலும் இவரின் குடும்பம் கிரிக்கெட் குடும்பம். இவரது அப்பா சையத் இப்திகார் ஹுஸைசன் பாகிஸ்தானின் முன்னணி கழகங்களில் முதல்தர கிரிக்கெட் விளையாடியவர். இவரது சகோதரர் ரகீல் கராச்சி அணிக்காக விளையாடி வரு கிறார்.

தற்போது அணியின் நம்பிக்கை நட்சத்திரமாக சொகைல் இருந்தாலும் எளிதில் பாகிஸ்தான் அணிக்குள் இவர் நுழைந்து விடவில்லை. பல போராட்டங் களுக்குப் பிறகே அணியில் இவருக்கு இடம் கிடைத்தது. தேர்வாளர்களின் கவனத்தைக் கவர்வதற்காக பலவருடங் கள் கடுமையாக உழைத்தேன் என்கி றார் சொகைல்.

# பெற்றோரை பெரிதும் நேசிக்கிறேன் மரியா ஷரபோவா மனமுருகுகிறார்

டெனிஸ் போட்டிகளில் அமெரிக்க ஆதிக்கத்தை கடந்த ஆண்டு ரஷ்ய வீராங் கனைகள் தகர்த்தெறிந்தனர். இதில் குறிப் பிடத்தக்கவராக 'விம்பிள்டன்' டெனிஸ் வீராங்கனை மரியா ஷரபோவா விளங்கி வருகிறார்.



கடந்த ஆண்டு நடைபெற்ற டெனிஸ் போட்டிகளில் 5 பட்டங்களை அவர் வென் றுள்ளார்.

கடந்த ஆண்டின் தொடக்கத்தில் தர வரிசையில் 32 ஆவது இடத்தில் இருந்த ஷரபோவா அந்த ஆண்டின் இறுதிக்குள் தன் திறமையை விம்பிள்டன் உட்பட 5 போட்டிகளில் பட்டங்களை வென்றதன் மூலம் உலக அளவில் டெனிஸ் வரிசையில் முதலாவது இடத்திற்கு முன்னேறி யுள்ளார்.

2004ஆம் ஆண்டு நடைபெற்ற பல டெனிஸ் போட்டிகளில் கலந்து கொண்டு சுமார் 22 கோடி ரூபா வரை சம்பாதித்துள்ளார். அதுமட்டுமின்றி அன்னகோர்னி கோவாவைப் போல் தற்போது விளம்பரப் படங்களில் நடித்தும், போஸ்கொடுத்தும் ஏராளமான அளவில் பணத்தை சம்பாதித்து வருகிறார்.

ரஷ்யாவில் பிறந்த ஷரபோவா தற்போது அமெரிக்காவில் வசித்து வருகிறார்.

பொதுவாக மேலை நாடுகளில் இளம் பருவத்தைக் கடந்தவாகள் தங்கள் பெற்றோரை விட்டுப் பிரிந்து தன் இஷ்டம்போல் வாழ் வார்கள். ஆனால், அதற்கு மாறாகதன் பெற்றோருடன் சேர்ந்து வாழ்ந்து வருகிறார் மரியா ஷரபோவா.

– அவர்கள் என்னைப் பெற்று வளர்த்தவர்கள். அவர்களை விட்டு விலகி இருக்கும் எண்ணம் எனக்கு என்றுமே தோன்றியதில்லை. நான் அவர்களை மிகவும் நேசிக்கிறேன் —என்று மனமுருக கூறுகிறார் இந்த விம்பிள்டன் வீராங்கனை.

ஷெனாயா

# சைக்கிளில் வெற்றி பதித்த அமெரிக்க வீரர் ஆம்ஸ்ட்ராங்

முதன்முதலில் நிலவில் காலடி வைத்து பெருமை பெற்ற நீல் ஆம்ஸ்ட்ராங்கைப் பற்றி நாம் அறிவோம். தற்போது அதே அமெரிக்க நாட்டைச் சேர்ந்த இன்னொரு ஆம்ஸ்ட்ராங் பிரபலம் அடைந்திருக்கிறார்.

இப்போதுள்ள இந்த ஆம்ஸ்ட்ராங் சைக்கிள் பந்தயவீரர்.

'டூர் 2 – டி பிரான்ஸ்' என்ற நீண்டதூர சவாலான சைக்கிள்போட்டியில் தொடர்ச்சி யாக 6 முறை அவர் வெற்றிபெற்றுள்ளார். அதுமட்டுமல்லாமல் இவர் 2002, 2003, 2004 ஆகிய ஆண்டுகளின் சிறந்த விளை யாட்டு வீரராகவும் உலக அளவில் தெரிந் தெடுக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன்பு மைக்கேல் ஜோர்டான் என்ற கூடைப் பந்துவீரரே தொடர்ந்து மூன்று முறை உலகின் சிறந்த விளையாட்டு வீரராக தெரிவு பெற்றுள்ளார்.

இந்த ஆண்டு நடைபெறும் நீண்டதூர சைக்கிள்போட்டியில் கண்டிப்பாக கலந்து கொள்வேன். 2006ஆம் ஆண்டு நடைபெறும் போட்டியில் கலந்துகொள்ள மாட்டேன் என்கிறார் ஆம்ஸ்ட்ராங்.

2004ஆம் ஆண்டின் சிறந்த வீரர் என்ற விருதை அசோசியேட் பிரஸ் என்ற அமைப்பு இவருக்கு வழங்கியுள்ளது.




# போலி டிக்கெட்டுகளை வாங்கி ஏமாறாதீர்

## உலகக் கிண்ண கால்பந்து அமைப்பு எச்சரிக்கை

கடுகு முதல் கணினிப் பொருட்கள் வரை இன்று பல பொருட்களுக்கு போலி கள் நடமாடத் தொடங்கிவிட்டன.

ஜெர்மனியில் நடந்துவரும் தேசிய கால் பந்து போட்டிகளின் போது போலி டிக்கெட் டுகள் பல வெளியில் விற்பனை செய்யப் பட்டன என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தநிலையில் 2006ஆம் ஆண்டு உலகக் கிண்ண கால்பந்துத்தொடர் ஜெர் மனியில் நடைபெற உள்ளது.

இதையொட்டி சில நிறுவனங்கள் இணையத்தளம் மூலம் உலகக் கிண்ண கால் பந்துக்கான டிக்கெட் விற்கப்படும் என்றும் அதற்கு முன்கூட்டியே பதிவுசெய்து கொள் ளுங்கள் என்றும் விளம்பரம் செய்து வரு கின்றன.

– அப்படி விற்கப்படும் டிக்கெட்டுகளை விலை கொடுத்து வாங்காதீர்கள். அது போலி யானது. உலகக் கிண்ண கால்பந்து சங்கத் தின் அனுமதி பெற்ற நிறுவனத்தின் மூலம் வழங்கப்படும் டிக்கெட்டுகளை மட்டும் வாங்கவேண்டும். போலி டிக்கெட்டுகளை வாங்கி ஏமாறாதீர்கள் – என்று ஜெர்மனில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கால் பந்து போட்டி அமைப்பின் துணைத் தலை வர் ஸ்காட் ஸ்மித் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# பெண்ணின் சுதந்திரம் என்பது எதுவரை இருக்க வேண்டும்?

இன்றைய நடைமுறையில் இருக்கின்ற ஆணாதிக்க சமுதாயக் கட்டமைப்பில் ஒரு பெண் தனக்கான இயல்புகளோடு வாழ்வது ஒருபுறம் இருக்கட்டும். ஆனால்,தனக்கான இயல்பு இதுதானென்று உணரக்கூடிய சந்தர்ப்பங்களையாவது சந்தித்திருக்கிறாளா? அல்லது சிந்திக்கவாவது செய்திருக்கிறாளா? என்ற மிகப் பெரிய கேள்வி எமக்குள் எழுவது இயல்பான விடயம்தான். இயல்புகளை உணருகின்ற தருணங்களுக்குப் பிறகு தானே அதுபற்றியதான வாழ்வும், வாழ்வு பற்றிய சிந்தனைகளும்...!

இந்தச் சமுதாயம் பெண்ணுக்கான இயல்புகள் என்று தீர்மானித்து வைத்திருக்கின்ற இயல்புகளை ஒட்டியோ, பின்பற்றியோதான்ஒவ்வொரு பெண்ணின் பாதைகளும்,பயணங்களும் இருக்கின்றன. தன் பயணங்களைத் தனி இயல்பில் தீர்மானிப்பதும், பாதைகளைத் தேடிச் சேர்வதும் என்பது ஒரு பெண் சிந்திக்க இயலாததாகவே இருக்கின்றது.

தன் இயல்புகளை உணரக்கூடிய தருணங்களை அறியாமலேயே தனக்கெதிரான தீர்மானங்கள் தன் முன்னே தனக்காகவென்று வைக்கப்படுவதையும் உணராது பெண்கள் இருப்பதே மிகக் கவலைக்குரிய விடயமாகும்.

இங்கு ஒரு பெண்ணின் வாழ்வென்பது அவளின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டிராது, யாரோ சிலரின் வாழ்க்கையாகவே கணிக்கப்படுகிறது. ஒரு பெண் தான் பெண் என்று தீர்மானிக்கப்பட்டுவிட்ட வாழ்வுக்குள் தன்னைத் திணித்துக்கொள்வதாலும், சார்ந்திருப்பதாலும் தனக்குள் விளைவிக்கும் உணர்வுச்சிதைவுகளை உணரக்கூட சக்தியற்றவளாக அவர்கள் வாழ்ந்து வருகின்றாள்.ஒன்று யோசித்துப்பார்க்க வேண்டும். ஒரு வீட்டில் இருக்கின்ற மாமியாரும், மருமகளும் அந்த வீட்டின் தலைவனைச் சார்ந்திருக்க சமுதாயம் பழக்கப்பட்டுவிட்டது.இங்கே யார் முதன்மைப்படுத்தப்படப்போகிறார்கள் என்ற கேள்வி இவர்கள் சார்ந்திருப்பதன் விளைவாக ஏற்படுகிறது.

சார்ந்திருப்பை அகற்றி இயல்புகளை உணரப்பழகிவிட்டால் ஆதிக்கம் மற்றும் அடிமைத்தனம் என்ற இரண்டுமே விலகிவிடும்.

பெண்ணியம் பற்றிப் பேசுபவர்கள் பெண் விடுதலை என்பது எந்தவிதக் கட்டுப்பாடுகளும் அல்லாத தான்தோன்றித் தனங்களைச் செய்வதும், இதுவரை யாரும் பேசாத விடயங்களைப் பேசுவதும்தான் என்று சொல்வதும் கண்டிக்கத்தக்கது.

பொதுவாக பெண்ணுக்குள் அடிமைத் தனங்களை விதைப்பது போல் ஆணுக்குள்ளும் ஆணாதிக்க மனோபாவங்கள் விதைக்கப்பட்டுள்ளன. அதற்காக பழமையான விடயங்களைத் தூக்கி எறிவது புதுமையல்ல. அவற்றை இன்றைய காலகட்டங்களுக்கும், தேவைகளுக்கும் ஏற்ப புனரமைப்பதும் எமது கடமையாகிறது. பழமைகள் எமது செல்வங்கள். வைத்துப்பூட்டிப் பாதுகாக்காமல் நல்ல வழியில் அவற்றைச் செலவிட வேண்டும்.

அகலிகைகள் வேண்டும். சந்தேகப்படும் கணவனைச் சாபமிடும் அகலிகைகள் வேண்டும். பாஞ்சாலி வேண்டும். பாண்டவர் வெற்றியில் கூந்தல் முடியாது தன் வெற்றியைத் தேடிப்புறப்படும் பாஞ்சாலிகள் வேண்டும்.

இந்தப் புனரமைப்புகள் எல்லாம் பெண் மொழியில் சொல்லப்பட வேண்டும். அது என்ன பெண்மொழி என்று யோசிக்கிறீர்களா? இதுவரை படைக்கப்பட்ட எல்லாப் படைப்புகளும் ஆணின் குரலாகவே பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

இராமன் சந்தேகத்திற்குத் தீக்குளிக்கச் சொன்னது ஆண் குரல். பண்டைய இலக்கியங்கள் மட்டுமல்ல, இன்றைய முதலாம் வகுப்புப் பாடப்புத்தகங்களில் குடும்பம் பற்றி வரும் படங்களில் கூட ஆண்குரல் தான் பதிவாகியுள்ளது.

பேதங்கள் தவிர்க்கப்பட வேண்டுமெனில் பெண்களுக்கான உரிமை என்றில்லாது சக மனிதர்களுக்கான உரிமைகள் என்கிற வகையில் எமக்குள் இருக்கின்ற ஆதிக்க மனப்பான்மை தகர்த்தெறியப்பட வேண்டும். பெண் ஆண்போல் மாறுவது சுதந்திரமல்ல. அவர் அவர் அவரவராகவே இருப்பதே சுதந்திரம்.

****

## நீரிழிவைக்கட்டுப்படுத்தும் நாவல் பழம்

உலகில் இன்று பல்வேறு நோய்கள் பெருகிவருகின்றன. உடலை வருத்தும் நோய்கள் சில. மனதை வாட்டும் நோய்கள் சில. மனதையும், உடலையும் வாட்டும் நோய்களோ பற்பல. நோய் வருவதைத் தடுக்கும், நோய் வந்தாலும் அதை விரட்டி அடிக்கும் சத்தும், மருத்துவக் குணங்களும் கொண்ட— இயற்கை எமக்களித்த சத்து மிகுந்த உணவு வகைகளையே உட்கொண்டு பூரண ஆரோக்கியத்துடன் வாழ நாம் முயற்சிக்க வேண்டும். இந்த மகிழ்ச்சியான, ஆரோக்கியமான வாழ்வுக்கு பழங்கள் மிகவும் துணைபுரிகின்றன.



சத்துமிக்க மருத்துவ குணம் கொண்ட பழங்கள் நிறைய உண்டு என்றாலும் நாவல் பழத்துக்கு அதில் தனி இடம் உண்டு.

நாவலில் வெள்ளை நாவல்,கொடி நாவல், ஐம்பு நாவல் என பலவகை உண்டு.

நாவல் பழத்தில் 84சதவீதம் தண்ணீர்ச்சத்து உள்ளது. இது தவிர எமது உடலுக்குத் தேவையான ஏனைய பல சத்துக்களும் அடங்கியுள்ளன.

துவர்ப்புச் சுவையும் குளிர்ச்சித் தன்மையும் கொண்ட நாவல் பழத்தை கையில் கிடைத்தவுடன் அப்படியே சாப்பிட்டுவிடக் கூடாது. நன்றாகக் கழுவி தண்ணீரைத் துடைத்த பின்னரே சாப்பிட வேண்டும்.




நீரிழிவையும், இரத்த அழுத்தத்தையும் கட்டுப்படுத்தும் அற்புத சக்தி நாவல் பழத்துக்கு இருக்கிறது. அதிகமாகத் தாகம் ஏற்படுதல்,உடல் உஷ்ணம் அதிகரித்தல், அதிகமாக சிறுநீர் வெளிப்படுதல், கண்களில் எரிச்சல் ஏற்படுதல், கண்களில் இருந்து நீர்வடிதல் போன்றவற்றையும் நாவல் பழம் தடுக்கும்.

நாவல் பழத்திலுள்ள சுண்ணாம்புச் சத்து எலும்புகளையும், பற்களையும் பலப்படுத்தும்.

நாவல் பழத்தைச் சாறு பிழிந்து அதே அளவு மாம்பழச்சாறுடன் கலந்து அருந்தினால், நாவரட்சி, அதிக தாகம் உடனே கட்டுப்படும். நாவல் பழச்சாற்றை ஒரு போத்தலில் ஒருமாதம் வரை மூடி வைத்துப் பின்னர் எடுத்துக்குடித்தால் நீரிழிவினால் உண்டாகும் நீர்வேட்கை குணமாகும்.

நாவல் பழம் மட்டுமல்ல நாவல் மரத்தின் பட்டை, இலை, கொழுந்து, வேர் ஆகியவையும் மருத்துவ பலன் கொண்டவை தான்.

நாவல் மரப்பட்டைக்குக் குரலை இனிமையாக்கும் சக்தி உண்டு.பட்டையை இடித்துச்சாறு எடுத்துக்கொப்பளித்தால் பல், ஈறு நோய்கள் குணமாகும். நாவல் மரப்பட்டையை இடித்துப் பொடியாக்கி எருமைத்தயிரில் கலந்து சாப்பிட்டால் பெண்களின் உதிரப் போக்குப்பிரச்சினை கட்டுப்படுத்தப்படும்.

பட்டையை அரைத்து அடிபட்ட இடத்தில் உள்ள வீக்கம், கட்டி ஆகியவற்றின் மீது தடவினால் அவை குணமாகும். பட்டைக் கசாயத்தை ஒரு நாளைக்கு 2 அல்லது 3 வேளை குடித்தால் நீரிழிவுநோய் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும்.

நாவல் பழக்கொட்டையைக் காய வைத்து இடித்துத் தூளாக்கி, கொதித்து ஆறிய ஒரு கப் நீரில் கலக்க வேண்டும். அதனை காலை, மாலை என தினமும் ஒரு தேக்கரண்டி அளவு குடித்தால் நீரிழிவுநோய் கட்டுப்பாட்டில் இருக்கும். இப் பொடியை தயிரில் கலக்கி தினமும் குடித்தால் இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவு குறையும்.

# உங்கள் அழகைப் பாதுகாக்க சருமத்தைப் பராமரியுங்கள்

பொதுவாக அழகு என்பது எல்லோரும் விரும்பி ரசிக்கும் ஓர் அம்சமாகும். அழகாக இருப்பவர்களைப் பார்த்து சிலர் நாம் இவ்வாறு அழகாக இல்லையே என்று அங்கலாய்ப்பதும் உண்டு. எம் எல்லோரிலுமே ஏதாவது ஒரு அழகு இருக்கும். ஆனால், அந்த அழகை எப்படி சரியான முறையில் வெளிப்படுத்துவது என்று தெரியாமலே எம்மில் பலர் அங்கலாய்க்கிறார்கள்.

இந்த அழகுப் பராமரிப்பில் முக்கிய இடத்தைப் பிடிப்பது சருமப்பராமரிப்பாகும்.

கொலாஜன் மற்றும் எலாக்ஸ்டின் என்ற இரண்டு புரதப் பதார்த்தங்கள் எமது உடற் சருமத்தின் பிரதான அமைப்பியல் மூலக் கூறுகளாகும்.

கொலாஜன் உற்பத்தி அல்லது அதன் உற்பத்தியின்மை போன்ற இரண்டு நிலைகளில் மாறும் சமநிலையைப் பொறுத்தே எமது சருமத்தில் சுருக்கங்கள், கோடுகள், சரும மடிப்புகள்,சருமம் தடிமனாதல் ஆகியவை ஏற்படுகின்றன.

எமது சருமத்தில் கண்ணுக்குப்புலப்படாத சில கோடுகள் மற்றும் சுருக்கங்கள் ஏற்படுவது எம்மால் தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

எமது சருமத்தின் நெகிழும் தன்மையும், வளையும் தன்மையும் குறையக் குறைய சருமத்துக்கு வயதாகிவிடுகிறது என்று அர்த்தம். கொலாஜன் மற்றும் எலாஸ்டின் ஆகியவற்றைச் சருமத்தில் அதிகளவு சேர்த்து வைத்தால் தோலின் வயதாகும் தன்மையை ஒரளவுக்குக் கட்டுப்படுத்தலாம்.

நாம் சிரிக்கும்போது கோடுகள் விழுவதும் மற்றும் நெற்றியைச் சுருக்கும்போது கோடுகள் விழுவதும் வயது செல்லச்செல்ல ஏற்படுவது என்பது தவிர்க்க முடியாததாய் இருந்தாலும், சருமத்தைச் சிறந்த முறையில் பராமரிப்புச் செய்வதன் மூலம் இதனை ஒத்திப்போடலாம்.

சருமத்தில் ஏற்படும் பாதிப்புக்களில் முக்காற்பங்குப் பாதிப்புகளை சரியான சருமப் பாதுகாப்பு முறைகளால் தீர்க்க முடியும் என்று சருமப் பாதுகாப்பு நிபுணர்கள் கூறுகின்றனர்.

சருமத்தில் ஏற்படும் பாதிப்புக்களைச் சீர்செய்ய முடியும் என்றவுடன், கிறீம்களைத் தடவுவது மற்றும் கடைகளில் விற்கும் சருமப் பாதுகாப்புப் பொருட்களை உபயோகிப்பது என்பதாக அர்த்தம் இல்லை.

கண்களைச்சுற்றியுள்ள பகுதிகளில் நாம் முக்கியமாக சிறப்புக்கவனம் எடுக்க வேண்டும். ஏனேனில், அதிகமாகத் தோல் பாதிக்கப்படுவது இப்பகுதியில் தான்.

முகத்தைக் கழுவும்போது கீழிருந்து மேலாகக் கழுவ வேண்டும். கிறீமோ, பவுடரோ போடும்போது அல்லது மேக்கப் செய்து கொள்ளும்போது கீழிருந்து மேலாகவே போட வேண்டும்.

எம்மில் பலர் சருமத்தை நன்றாகக் கழுவிச் சுத்தம் செய்தால், சருமம் வரண்டு விடும்—அதன் ஈரப்பதத்தை எடுத்துவிடும் என்று தவறாகப்புரிந்துகொள்கிறோம். ஆனால், சருமத்தில் இறந்துபோன செல்களைக் கழுவி வெளியேற்றி அழுக்குகளை அகற்றினால்தான் சருமம் பொலிவுடன் விளங்கும் என்பதை நாம் முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.

முகத்தைச் சுத்தம் செய்யும்போது மிருதுவான ஜெல் போன்றவற்றைப் பயன்படுத்தலாம். சுடுநீரில் முகம் கழுவுவதைத் தவிர்க்க வேண்டும்.

சொரசொரப்பான பொருட்களை உபயோகித்து முகத்தை இறுக்கித்தேய்க்கக் கூடாது.

திடீரென உடல் சதையோ,எடையோ குறைந்தால், சருமத்தில் இறுக்கம் தளர்ந்து, சுருக்கமும் கோடுகளும் ஏற்படும். எனவே உடல் எடையைக் குறைக்க முற்படும்போது நிதானமான முறையில் குறைக்க வேண்டும்.

அதிக சூடு, வெயில், அதிக காற்று, தூசி போன்றவற்றிலிருந்து நாம் எமது உடலின் மேற்பகுதியைப் பாதுகாக்க வேண்டும். இது எமது சருமத்தின் ஈரப்பதத்தைக் காய்ந்து போகச்செய்யும்.

சருமத்தில் ஏற்படும் பல பிரச்சினைகளுக்குக் காரணம் சூரிய வெப்பமே! சன் ஸ்கிரீன் லோஷனை தினமும் பயன்படுத்தலாம்.

இவற்றோடு சிறந்த புரதச்சத்து நிறைந்த உணவுகளை உட்கொள்ளுதல் எமது சருமத்தை மேலும் மிருதுவாகவும், பளபளப்பாகவும் வைத்திருக்க உதவும்.



## சமையல் குறிப்பு

### காலிபிளவர் ரவாபாத்

| | |
|---|---|
| காலிபிளவர் | 1 கப் |
| நெய் | தேவையான அளவு. |
| ரவை | 2 கப் |
| சேமியா | 1 கப் |
| எண்ணெய் | 1 கப் |
| கராம்பு | 5 |
| ஏலக்காய் | 5 |
| கறுவாப்பட்டை | 2 துண்டுகள் |
| மல்லித்தூள் | 1 தேக்கரண்டி |
| மஞ்சள் தூள் | 1 தேக்கரண்டி |
| முந்திரிப்பருப்பு | 2மேசைக்கரண்டி |
| பெரிய வெங்காயம் | தேவையான அளவு |
| பச்சை மிளகாய் | தேவையான அளவு |
| இஞ்சி | 1 தேக்கரண்டி |
| கறிவேப்பிலை | தேவையான அளவு |
| கொதித்த நீர் | 6 கப் |
| எலுமிச்சைச்சாறு | 1 தேக்கரண்டி |
| உப்பு | தேவையான அளவு. |

*செய்முறை*

காலிபிளவரை ஒவ்வொரு பூவாகப் பிய்த்து எடுத்து சுத்தப்படுத்தி ஆவியில் பாதி அளவு வேக வையுங்கள்.

சேமியாவையும் வறுத்து எடுத்து வேக வையுங்கள்.

முந்திரிப்பருப்பு ஒவ்வொன்றையும் நான்கு துண்டுகளாக நறுக்குங்கள்.

மல்லித்தூள், மிளகாய்தூள், மஞ்சள் தூள் மூன்றையும் ஒன்றாக்கி சிறிதளவு தண்ணீரில் போட்டுவையுங்கள்.


எண்ணெயைச் சூடாக்கி அதில் கராம்பு, ஏலக்காய், கறுவாப்பட்டை ஆகியவைகளைத் தாளியுங்கள். முந்திரிப் பருப்புச் சேர்த்து கிளறிவிட்டு, பெ.வெங்காயம், பச்சை மிளகாய், இஞ்சி, கறிவேப்பிலை ஆகியவைகளைக் கலந்து தாளியுங்கள். தண்ணீரில் ஊற வைத்திருக்கும் தூள் வகைகளையும் அப்படியே கொட்டுங்கள்.அதில் ரவையைச் சேருங்கள். சிறிது நேரம் ஆனதும் சேமியா சேர்த்துக் கிளறுங்கள்.

கொதித்த நீரில் எலுமிச்சைச்சாறும், உப்பும் கலந்து மேற்கண்ட கலவையில் சேருங்கள். வெந்து, வற்றி வரும்போது இறக்கிவிடுங்கள். சிறிதுநேரத்தில் புழுங் யோல் ஆகிவிடும். காலிபிளவரை நெய்யில் வறுத்து அலங்காரம் செய்யுங்கள்.

லேசாக வெந்த பட்டாணி, கரட் போன்றவைகளாலும் அலங்கரிக்கலாம்.

தேவைப்பட்டால் சிறிதளவு மல்லி இலையும் சேர்க்கலாம்.

# விந்தை உலகம்



உலகில் எது எதற்கு போட்டி வைப்ப தென்று ஒரு விவஸ்தையே இல்லாமல் போய் விட்டது. அண்மையில் அமெரிக்காவில் உதட்டோடு உதடு வைத்து யார் தொடர்ந்து கூடிய நேரம் முத்தமிடு கிறார்கள் என்று ஒரு போட்டி நடத்தப்பட்டது. அமெரிக்காவில் சண்டியாகோ என்ற பற்ப சையை வெளிடும் நிறுவனத்தினரே இந்த போட்டியை நடத்தியிருக்கிறார்கள்.

கரும்பு தின்ன கைக் கூலி வேண்டுமோ..... நான்காயிரம் ஜோடிகள் போட்டியில் கலந்து கொண்டு ஜமாய்த்து விட்டனர். படத்தைப் பாருங்கள் போட்டியாளர்கள் ஜமாய்த்துக் கொண்டிருக்கும் காட்சி. ஆனாலும் போட்டியாளர்களுக்கு இந்தப் போட்டியில் மிகுந்த கவலை யும் அதிருப்தியும் ஏற்பட்டு விட்டதாக தெரிவிக்கப் படுகிறது.

ஏனென்றால் போட்டியில் பங்குபற்றியஅனைவரும் தமது சொந்தப் பெண்டாட்டியையே முத்தமிட வேண்டும் பக்கத்து வீட்டுக் காரர் சின்னவீடு, செட்டப் கணக்கு பண்ணுணியது என்று எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்று போட்டியை நடத்தியவர்கள் கிடுக்கிப் பிடி போட்டுவிட்டாங்களாம். "அதுக்கு மட்டும் விட்டிருக்கோணும். நான்தான் ஜெயித்திருப்பேன்" என்று வீறாப்புப் பேசுகிறார்களாம் போட்டியில் பங்குபற்றி தோற்றுப்போன பலர்.



# கண்ணாமூச்சி



படத்திலே உள்ள அம்புக்குறிகள் எங்கே காட்டி நிற்கின்றன? உள் பக்கமா? அல்லது வெளிப்பக்கமா?

# நெட் குழப்பம்



படத்தைப்பார்த்தால் ஏதோ ஒரு நகரப்புறம் சுனாமியால் பாதிக்கப்பட்டு அலைகளினால் அலங்கோலப்படுத்தப்பட்டது போல் தெரிகிறதல்லவா? ஆனால் அது உண்மையில் அப்படி அல்ல. நாற்சந்தி ஒன்றின் நடுவில் ஒரு ஓவியம் கீறப்பட்டிருக்கிறது. அவ்வளவு தான்.


# ஓவியச் சிரிப்பு




ஆதிகாலத்தில் முதன்முதலில் உதைபந்தாட்டம் ஆடத்தொடங்கிய மனிதன் இவ்வாறு தான் உருண்டைக் கல் ஒன்றை காலால் அடித்து காயம்பட்டானாம். பின்னர்தான் தற்போதைய பந்துகள்.

# வித்தியாசமான படம்

படத்தைப் பாருங்கள். யாரோ ஒருவர் குப்புறப் படுத்திருக்க பின் பக்கத்தின் மேல் இன்னொருவர் உட்கார்ந்திருப்பது போல் இருக்கிறதல்லவா? ஆனால், உண்மை அதுவல்ல. படுத்திருப்பவர் எங்கோ படுத்திருக்கிறார். உட்கார்ந்திருப்பவர் எங்கோ உட்கார்ந்திருக்கிறார். ஆனால், படத்தை எடுத்தவர் ஒருவரின் மேல் ஒருவர் இருப்பதாக எடுத்திருக்கிறார். அவ்வளவுதான்.



# குறும்பு



திருமண பந்தத்தில் இணைவது சந்தோஷமான விடயம்தான். ஆனால், அதற்காக சாப்பாத்தில் HELP ME [என்னைக் காப்பாற்றுங்கள்] என்று எழுதி வைப்பது ரொம்ப ஓவர்.....

# மீனின் ஆசை


மழை பெய்து சில நாட்கள் ஆகியிருந்தது. ஒரு குளத்தில் பெரிய மீனொன்று இருந்தது. ஒரு தவளையும் கொக்கும் அடிக்கடி குளத்துக்கு வந்து போக அவை மீனுடன் நண்பர்களாகி விட்டன.

மீன் எப்பொழுதும் கற்பனையில் மிதந்து கொண்டே இருக்கும். தவளை சரியான வாயாடி.. கத்திக் கொண்டே இருக்கும். கொக்கு நல்ல புத்திசாலி. ஆனால் அமைதியாக பொறுமையுடன் இருக்கும்.

மீன், தவளை, கொக்கு மூன்றும் கூடிப் பேசிக் கொண்டிருந்தன. மீனும், தவளையும் வெகு நேரமாகக் கொக்கைச் சீண்டின. கொக்கு அதற்காக சிறிதும் கவலைப்படவில்லை.

''உன்னைப்போல் எங்களுக்குப் பொறுமை கிடையாது; நீ பொறுமையில் பூமாதேவியையே மிஞ்சிவிட்டாய்'' என்றது தவளை.

''என்னுடைய ஆசையை யாராவது நிறைவேற்றுகிறீர்களா? நானும் உங்களைப் போல் வெளியுலகை சுற்றிப் பார்க்க விரும்புகிறேன்'' என்றது மீன்.



''நீ வழக்கம்போல் உன்னுடைய கற்பனையிலேயே மூழ்கு! அதுதான் உனக்கு நல்லது'' சின்னச் சிரிப்புடன் சொல்லியது தவளை.

''எல்லைகளைத் தாண்ட நினைத்தால் எப்பொழுதுமே ஆபத்துத்தான். உன்னால் நீரில் மட்டுமே வாழ முடியும்'' எச்சரித்தது கொக்கு.

''நண்பனின் ஆசையை நிறைவேற்ற முடியாத நீங்கள் எல்லாம் நண்பர்களா? சேசே! எனக்குத் தான் அவமானம்'' அலுத்துக் கொண்டது மீன்.

''கம்பெடு! தடியெடு! வித்தெடு! விதைத்திடு!'' என்று சத்தமாகக் கத்தத் தொடங்கியது தவளை.

''ஏன் இப்படிக் கத்துகிறாய்?'' கொக்கு கேட்டது.

''அதோ ஒரு மனிதன் வருகிறான் பார்'' என்றது தவளை.

அந்த மனிதன் குளக்கரையில் வந்து உட்கார்ந்தான். அவன் முகத்தில் கவலை ரேகைகள் தென்பட்டன.

'வேலையும் இல்லை. குழம்பும் வைக்கலை. காய்கறி விக்கிற விலைக்கு நான் என்ன பண்ண முடியும்?'' காலையில் மனைவி சொன்னது அவனுக்கு ஞாபகம் வந்தது.

''என்ன செய்வது?' என்று யோசித்துக் கொண்டிருந்தான் அம்மனிதன். அவனை நோக்கி தவளை மீண்டும் கத்தத் தொடங்கியது.

''ஏ மனிதா! கம்பெடு! தடியெடு! வித்தெடு! விதைத்திடு!'' தவளையின் இக்குரல் அவனை தொந்தரவு செய்தது.

''மனிதனே! நான் இவ்வுலகைப் பார்க்க வேண்டும்! நீ என்னையும் உன்னுடன் அழைத்துச் செல் என்றது மீன்.

பெரிய மீனைப் பார்த்ததும் அந்த மனிதன் மகிழ்ந்தான். ஒரு கம்பை எடுத்துக் கொண்டு குளத்தை நோக்கி நடந்தான்.

''நான் சொன்னதும் கம்பை எடுத்து விட்டான்! மனிதர்கள் சரியான சோம்பேறிகள். நான் தான் மழை பெய்ததும் ஒவ்வொருத்தரிடமும் விதை விதைக்க சொல்ல வேண்டியிருந்தது'' அலட்டிக் கொண்டது தவளை.

''என் ஆசையை நிறைவேற்ற வருகிறான்'' மீன் சொல்லியது.

''மனிதர்கள் ஆபத்தானவர்கள்! அவர்களின் மனசுக்குள் என்ன இருக்கிறது என்று தெரியாது. நீ அவனை அழைக்காதே மீனே'' என்றது கொக்கு.

''நான் விதைகளை விதைக்கப் போகிறேன்! நீ அதைப் பார்க்க வருகிறாயா?'' மனிதன் அழைத்ததும் தவளை துள்ளிக் குதித்து வந்தது.

''உன் ஆசையையும் நிறை வேற்றுகிறேன் மீனே'' என்றவன் தண்ணீரில் இருந்து மீனை வெளியே எடுத்து மண்ணில் போட்டான்.

அடுத்து கையில் இருந்த கம்பால் தவளையை அடித்துக் கொன்றான். மீன் மணலில் துடிதுடித்து இறந்தது.

''தவளையே! நீ உன் வாயால் என்னைத் தொந்தரவு செய்ததால் இறந்தாய்! மீனே! நீ உன் எல்லையைத் தாண்ட நினைத்ததால் உயிர்விட்டாய்! மொத்தத்தில் எனக்கு இலாபம்'' மனிதன் வாய் விட்டு சொன்னபடி மீனை எடுத்துக் கொண்டு சென்றான்.

''ஒன்று சொல் புத்தி இருக்க வேண்டும்; இல்லாவிட்டால் சுய புத்தியாவது இருக்க வேண்டும்! இவருவரும் இப்படி அநியாயமாகப் போய்விட்டார்களே'' என நினைத்து வருந்தியது கொக்கு.




உலக அதிசயங்களில் ஒன்றான இத்தாலி நாட்டின் பைசா நகரில் உள்ள பைசா கோபுரத்தைக் கட்டி முடிக்க, கி.பி.1174 தொடங்கி 1350 வரை அதாவது சுமார் 175 ஆண்டுகாலம் பிடித்தது. பிரமிக்க வைக்கும் எட்டு அடுக்குகளைக் கொண்ட, இக்கோபுரத்தின் உயரம் 179 அடிகள். சாய்ந்த நிலையில் இருந்த இக்கோபுரம், மிக நவீன முறையில் அண்மையில் சரிசெய்யப்பட்டது.




மேலே உள்ள படத்தில் 'அ' வரிசையிலும் 'ஆ' வரிசையிலும் ஒரே மாதிரியான இரண்டு நிழல் உருவங்கள் இருக்கின்றன. எங்கே கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

## சிறார்களின் கைவண்ணம்



வி.ரூபன், தரம் – 12.
புளியடிச்சந்தி, விசுவமடு.




சி.அகல்யா, தரம் 3b
யா.இ.ஆ.பா.



மகேந்திரராஜா சுமங்கலா, தரம் 9
கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி



எஸ்.சர்மிலா,வவுனியா



அ.துஸ்யந்தினி, தரம் 10
மு/முல்லைத்தீவு ம.வி.
முல்லைத்தீவு.

## தீர்க்க முடியாத இரகசியத்துக்குள் அடங்கியிருப்பவை.

- மதிக்க வேண்டியது மூன்று
  - வயதுவந்தவரை
  - சமயம்
  - சட்டம்
- வியக்க வேண்டியது மூன்று
  - அறிவு
  - அழகு
  - இசை
- விருத்தி செய்ய வேண்டியது மூன்று
  - இரக்கம்
  - மகிழ்ச்சி
  - மனத்திருப்தி
- சேர்க்க வேண்டியது மூன்று
  - வாக்குறுதி
  - நண்பர்கள்
  - அன்பு
- ஆள வேண்டியது மூன்று
  - நாக்கு
  - மனநிலை
  - செயல்
- தடுக்க வேண்டியது மூன்று
  - சோம்பல்
  - பொய்மை
  - கொச்சைப்படுத்தல்
- பாதுகாக்க வேண்டியது மூன்று
  - நேர்மை
  - தூய்மை
  - உண்மை
- விலக்க வேண்டியது மூன்று
  - மதுபானம்
  - புகைத்தல்
  - சூதாடல்

*செ.டன்சி, வண்ணாங்குளம்*
*முல்லைத்தீவு.*

## சிந்தனைச் சிறகுகள்

- அறிவைப் பெறுதற்கு ஒருவன் கல்வி கற்க வேண்டும் ஆனால், ஞானத்தைப் பெறுவதற்கோ அவன் எதையும் ஆராந்து அறிய வேண்டும்..
- இன்று நீங்கள் நீங்களாகவே வாழ வேண்டும். அப்பொழுதுதான் நாளையும் நீங்கள் நீங்களாக வாழ முடியும்.....
- உங்களைக் கோபமுறச் செய்பவன்... உங்களை வென்று விடுகிறான்....
- அன்பின் செயல்கள் சிறியவையாகவும்.... அற்புதமாகப் பேசப்படுகின்றவையாகவும் இருக்கும்.... ஆனால், அவற்றின் எதிரொலிகள் முடிவற்றவை...
- அழகு எப்போதும் அன்பைக் காட்டுவதில்லை.... மாறாக அன்புதான் ஒருவரின் அழகை எடுத்துக் காட்டுகிறது.

*க.ஷாமினி, நெளுக்குளம், வவுனியா.*

## அகரவரிசையில் அறிவுத்துளிகள்

அ. அரண்மனையின் அடிமைகளை விட குடிசை வாழ் ஏழை உயர்ந்தவன்.

ஆ. ஆண்பாதி பெண்பாதி, வாழ்வின் இயற்கை நியதி.

இ. நிலத்தை நோக்குவான் முன்னேற மாட்டான்.

ஈ. ஈன்ற தாயும் நாடும் போற்றிட வாழ்ந்திடு.

உ. உன் வீடாயினும் குறுக்கு வழியில் நுழையாதே.

ஊ. ஊக்கம் என்பது ஆக்கம் தரும் வெற்றிப்படி.

எ. எது நீ செய்யினும் நலந்தர முயன்றிரு.

ஏ. ஏன் என்று கேட்டுஎடுத்த பணி தொடங்கிடு.

ஐ. ஐக்கியம் இன்றேல் அடைவாய் இடரே.

ஒ. ஒழுக்கம் அற்றவர் இழுக்கை அடைவார்.

ஓ. ஓய்வு என்பது யாவர்க்கும் பொதுவே.

ஔ. ஔடதம் கசக்கும் ஆயினும் முடிவில் இனிக்கும்.

*ஜெ.சுஜிதா, கிளி/ கனகாம்பிகைகுளம்.*
*அ/த/க/பா.*

## 16 மகனை மீட்கப் போராடும் தாய் இவள்

தூக்குத் தண்டனைக்கு காத்திருக்கும் தன் மகனை தூக்குக் கயிற்றின் பிடியிலிருந்து மீட்பதற்குப் போராடும் ஒரு தாயின் உண்மைக் கதை இது.

நவீன புறநானூறாக உணர்வும், விறுவிறுப்பும்நிறைத்து இதனைச் செதுக்கியுள்ளார் இளம் எழுத்தாளர் பூங்குழலி.

அதுபோல் திருமணம் முடிந்த மறுநாளே அன்பும் இராஜாவும் சிறை சென்று அறிவை சந்தித்தனர். அன்பு திருமணத்தின் போதே சிறையில் உடனிருந்த மற்றவர்களுக்கு பழகிவிட்டதால்அன்பும் இராஜாவும் சிறையில் ஒரு பொதுவான இடத்தில் நின்று வணங்க, அனைவரும் அவரவர் அறையில் நின்றபடி வாழ்த்துக் கூறினர்.

அதுமட்டுமா, அன்பு கர்ப்பமாக இருந்த போது நிறை மாசம் வரை அறிவை காண வந்து கொண்டுதான் இருந்தாள். மகன் அகரன் பிறந்த உடனேயே, மூன்று மணி நேரத்தில் அவனைப் புகைப்படம் எடுக்க வேண்டுமென பிடிவாதம் பிடித்து, ஒளி உமிழாமல் படம் எடுத்து அதை அறிவிடம் காட்டினர். அகரன் மூன்று வயதாகும்வரை அப்படி தொடர்ச்சியாக அவனது அசைவுகளை படம் பிடித்து தம்பிக்குக் காட்டுவதில் மகிழ்ந்தாள் அன்பு.

கொஞ்சம் உடல் தேறியவுடன் மகனைத் தூக்கிக் கொண்டு சிறைக்கே வர ஆரம்பித்தாள். அந்த அளவுக்கு தம்பி மீது அவளுக்குப் பாசம். அருள் மட்டுமென்ன? அண்ணன் வரும் வரையில் தனக்குத் திருமணமே வேண்டாம் என உறுதியுடன் காத்திருக்கும் அருமைத் தங்கை இல்லையா?

சிறு வயதிலிருந்தே அன்பு, அறிவு, அருள் மூவரும் தங்களுக்கென்று ஒரு தனி உலகை எழுப்பி, தங்களுக்குள்ளாகவே சிரித்து, பேசி விளையாடி மகிழ்ந்தனர். பிற குழந்தைகளுடன் அதிகமாய்ச் சேருவதில்லை. அதோடு குடும்பத்தில் எந்த முடிவு எடுப்பதாக இருந்தாலும் அது சிறியதோ பெரியதோ இவர்களின் விருப்பப்படியே எடுக்கப்பட்டது. மூவரும் கலந்து பேசி என்ன சொல்கிறார்களோ அப்படியே செய்தனர் அற்புதமும் குயில்தாசனும். இன்று வரையிலும் நடைமுறையில் அது உள்ளது. அப்போது வீட்டில் கூடிப் பேசியவர்கள் இப்போது சிறையில் பேசுகிறார்கள் என்பதுதான் கொடுமையான மாற்றம்.

இப்படி ஒற்றுமையான, பாசமான பிள்ளைகள் ஒன்றாய் வாழ முடியாத நிலையை எண்ணி எண்ணி அற்புதம் வருந்தாத நாள் இல்லை. ஒருவருக்கொடுவர் சண்டையிட்டுக் கொண்டு பகைவர்கள் போல வாழும் சகோதரர்கள்கூட ஒன்றாய் வாழும் போது, பாசத்தைத் தவிர வேறெதுவும் அறியாத நம்பிள்ளைகளுக்கு மட்டும் ஏன் இந்த நிலை?

'திருவனந்தபுரத்தை நெருங்கிட்டோம்' - குயில்தாசனின் குரல் கேட்டு பார்வையைத் திரையிட்ட நீரைத் துடைத்தவாறே உடைமைகளை எடுத்து இறங்கத் தயாரானார்.

நிலையத்தில் வண்டி நின்றவுடன் இறங்கி நெடுமாறனய்யா குறிப்பிட்டிருந்த தாமசை தேடினர். அடையாளம் தெரியாது எனினும், யாராவது தேடுகிறார்களா என்று பார்வையிட்டனர். ஒருவரையும் காணோம். அவரவர் அவர் வழியில் சென்று கொண்டிருந்தனர்.

வாயிலுக்குச் சென்று பார்க்கலாமென முடிவு செய்து சென்றனர். அங்கே ஒருவர் இவர்களை நோக்கி அவசரமாக வந்தார்.

'நீங்கள்தானே குயில்தாசன் ஐயா - அறிவின் பெற்றோர்'

'ஆம்! நீங்க... தாமசா?'

'ஆமாம்! நீங்க இந்த ரயிலிலேயே கன்னியாகுமரி வந்திருங்க; நான் அங்க உங்கள சந்திக்கிறேன்.

'சரிங்க' - என்று அவசரமாக மீண்டும் வந்த ரயிலிலேயே ஏறினர். அதுவும் அதுவரை அங்கு நின்றுக் கொண்டுதான் இருந்தது.

திருவனந்தபுரம் - கன்னியாகுமரி பாதை மிகுந்த வனப்புடன் இருந்தது. இயற்கையின் அழகு முழுமையாய்! மனதில் உறுத்தல் இருந்தாலும் அவற்றை ரசிக்காமல் இருக்க முடியவில்லை அற்புதத்தால்.

கன்னியாகுமரி ரயிலடியில் இறங்கியவர்களை ஒரு ஆட்டோவில் அழைத்துச் சென்றார் தாமசு. ஆட்டோ தங்குமிடத்துடன் கூடிய ஒரு விடுதியின் முன் நின்றது. வாயிலில் ஒரு முதியவரும் ஒரு வயதான பெண்மணியும் இவர்களை வரவேற்றனர். தனதுபெற்றோர்களென அவர்களை தாமசு அறிமுகம் செய்து வைத்தார்.

'கேப் லாட்ஜ்' - எனப்படும் அந்தத் தங்கும் விடுதிக்கு அவர்கள்தான் உரிமையாளர்கள் என்பதும் புரிந்தது. அப்போதும் அற்புதத்திற்கு ஒரு சின்ன சந்தேகம். எவ்வாறு தாமசு இவர்களைச் சரியாக அடையாளம் கண்டுகொண்டார் என்று. அதை தாமசிடமே கேட்டும் விட்டார். அவர் சிரித்துக் கொண்டே 'ஐயா சென்னையிலிருந்து பேசும்போதே மிக உயரமான ஒரு மனிதருடன் அவருடன் குள்ளமாக ஒரு அம்மாவும் வருவார்கள் எனக் கூறியிருந்தார். அதை வைத்துத்தான் எளிதில் கண்டுபிடித்தேன்' என்றார்.

கேட்ட அனைவரும் நகைத்தனர். ஆம். குயில்தாசனின் உயரம் ஆறடிக்கும்மேல். அற்புதத்தின் உயரமோ ஐந்தடிக்கும் குறைவு. அப்படியொரு அபூர்வதம்பதிகள்.

மிக எளிதாக யாரும் கண்டுபிடிக்கும் வண்ணம் ஒரு அடையாளத்தைக் கூறி இருந்தார் நெடுமாறன். அன்றையப்பொழுது மிக இனிமையாகக் கழிந்தது.

பகல் உணவிற்குப் பின் மாலையில் கடற்கரை சென்றனர்.



தங்களுக்கென்று ஒரு தனி உலகை எழுப்பி....
தங்களுக்குள்ளாகவே சிரித்து, பேசி விளையாடி

# தொடரும் தவிப்பு

முக்கடலும் சங்கமிக்கும் கன்னியாகுமரியில், வானத்துச் சூரியனும் மெதுவாய் இறங்கி கலக்கும் காட்சியை பிறர்கூற கேட்டிக்கிறார்.... ஆனால், அது உண்மையிலேயே இத்தனை அழகானதா......

மெது மெதுவாக கடல் தன் அலைக் கரங்களை நீட்டி சூரியனைத் தனக்குள் வாரி அணைக்க... உலகைப் பிரியும் வேதனையோ.... கடலைக் கூடும் மகிழ்ச்சியோ... மேனியெல்லாம் சிவந்து, கீழிறங்கும் சூரியனைக் காணக் காண அற்புதத்தின் மனதில் மகிழ்ச்சி பொங்கியது.

மிக மகிழ்ச்சி ஏற்படும் ஒவ்வொரு நொடியும் அற்புதத்திற்கு முள்குத்துவது போன்ற வலியும் தோன்றியது.

மகனுக்கு மரண தண்டனை. நமக்கு இந்த நேரத்தில் இதெல்லாம் ஒரு கேடாவென அவர் மனம் அரற்றியது. எந்த ஒரு இன்பத்தையும் முழுமையாய் அனுபவிக்க முடியாத ஒரு அவஸ்தை.

இரவு அந்தப் பெரியவர் தருமநாதன், தாமசின் தந்தை, காவல்துறையினரால் தான்பட்ட துன்பத்தையும், எவ்வாறு நெடுமாறன் அதிலிருந்து மீள தனக்கு உதவினார் என்பதையும் கூறக் கேட்டபோது, தங்களைப் போலவே பாதிக்கப்பட்ட குடும்பம் என்ற நிலையில், மனதில் அவர்களுடன் அற்புதத்திற்கு நெருக்கம் ஏற்பட்டது.

மறுநாள் மாலை தாமசு, அவர்கள் இருவரையும் திருவனந்தபுரம் பேருந்தில் ஏற்றி, நிகழ்ச்சி நடக்கும் இடத்திற்குச் செல்லும் வழியையும் கூறி அனுப்பிவைத்தார்.

திருவனந்தபுரத்தில் இறங்கி ஒரு ஆட்டோ மூலம் நிகழ்ச்சி நடக்கும் இடத்திற்குச் சென்றனர். இவர்கள் யாரென அறிந்ததும் நிகழ்ச்சி நடத்துபவர்கள் மிகுந்த மரியாதையுடன் அவர்களை வரவேற்று இரவு தங்கவும் ஏற்பாடுகள் செய்து தந்தனர்.

மறுநாள் காலை ஒரு பத்திரிகையாளர் சந்திப்புக்கு ஏற்பாடு செய்திருந்தனர். தமிழ்நாட்டுப் பத்திரிகையாளர்களுடன் ஏற்பட்டிருந்த அனுபவத்தால் அற்புதத்திற்கு பத்திரிகையாளர்களிடம் பேசவே தயக்கமாக இருந்தது.

'ஒன்று இவர்கள் நாம் சொல்லும் உண்மைகளைப் போடவே மாட்டார்கள், அல்லது சொல்லாததைச் சொல்லியதாக திரித்துப் போடுவார்கள். இவர்களிடம் என்ன பேசுவது' - என்ற எண்ணமே மேலோங்கி இருந்தது.

அதை வந்திருந்த பத்திரிகையாளர்களிடமும் வெளிப்படுத்தினார். அந்தப் பத்திரிகையாளர்கள் கோபப்படவில்லை. மாறாக 'நாங்க கண்டிப்பா நீங்க சொல்றதை அப்படியே போடுறோம். நீங்க என்ன சொல்ல நினைக்கிறீங்களோ அதை அப்படியோ சொல்லுங்கம்மா' - என்றனர்.

அற்புதமும் குயில்தாசனும் தங்கள் மகன் இவ்வழக்கில் சிக்க வைக்கப்பட்ட பின்னணியை எடுத்துரைத்தனர். முதலில் நம்பிக்கையற்ற தொனியில் இயந்தித் தனமாக சொல்லத் துவங்கியவர்கள், அந்த பத்திரிகையாளர்கள் காட்டிய ஆர்வத்தால் உந்தப்பட்டு, உணர்ச்சியோடு விளக்கினர். மகன் பற்றி மட்டுமல்லாது, தங்களுக்குத் தெரிந்த இவ்வழக்கில் நடந்த பித்தலாட்டங்களையும் கூறினர்.

அற்புதத்தின் குரலும், முகபாவங்களும் அந்தத் தாயின் உணர்ச்சிப் பெருக்கும், வந்திருந்த பத்திரிகையாளர்களை நெகிழ்த்திவிட்டன.

பிறகு குழு சார்பாக அன்று காலைதான் வந்திருந்த விடுதலை இராசேந்திரனும் சில விளக்கங்களை கொடுத்தார்.

பத்திரிகையாளர்களும் மிகுந்த ஆர்வத்தோடு பல கேள்விகளைக் கேட்டு தெளிவு பெற்றனர்.

உலகப் புகழ்பெற்ற இவ்வழக்கின் விசாரணை வெளிப்படையாக நடக்காது மூடிய அறைக்குள் நடந்ததால் பல விசயங்களில் பத்திரிகையாளர்கள் குழப்பமாகவே இருந்தனர் என்பது அவர்கள் கேட்ட கேள்விகளில் தெரிந்தது.

அற்புதம், குயில்தாசன், இராசேந்திரன் இவர்கள் கூறிய செய்திகள் அவர்களை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கின. பல உண்மைகளைத் தெரிந்து கொண்ட நிறைவோடு அவற்றை உலகறியச் செய்வோம் என்று உறுதியளித்து விடைபெற்றனர்.

மதிய உணவுக்குப் பின்னும் பல்வேறு பத்திரிகையாளர்கள் தனிப்பட்ட முறையில் வந்து பல செய்திகளை கேட்டறிந்து சென்றனர்.

மறுநாள் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் அற்புதத்தை அறிமுகம் செய்து பேச அழைத்தனர். அவர் தமிழில் பேசியதை ஒருவர் மலையாளத்தில் மொழி பெயர்த்தார். எந்தவித சிறு சத்தமுமின்றி மிக அமைதியாகவும் கவனமாகவும் கூடியிருந்தோர் அவர் பேசுவதைக் கேட்டனர்.

(தவிப்பு தொடரும்.....)

**யமனுக்கு மனிதநேயம் இருந்தது. மனிதர்களுக்கு....?**

# குறைவற்ற குள்ள மனிதர்.....

"கவலையா... எனக்கா? அப்படி எதுவுமே எனக்கு இல்லை. நான் ரொம்ப சந்தோஷமாக இருக்கிறேன்" என்கிறார் தமிழ்நாட்டைச் சேர்ந்த அஜய்குமார். குள்ள மனிதர், ஆனால் அமெரிக்காவை ஓர் உலுக்கு உலுக்கியவர்.

இவர் பிரபல மிமிக்கிரி கலைஞர். தனது குழுவோடு மிமிக்கிரி நடத்த அமெரிக்கா சென்றிருந்தார். திரும்பும்போது சிகாகோ விமான நிலையத்தில் இவரது குழுவில் உள்ள ஒருவரை பொலிஸ் பிடித்துவிட்டது. அவரது 'பேக்'கில் இரண்டு கத்திகள் இருந்தன. அவ்வளவுதான் எல்லாப் பகுதியிலும் பொலிஸ் உஷார். பெரிய தீவிரவாதக் கோஷ்டி ஒன்று சிக்கியது என்று நாடு முழுக்க தகவலும் பரவியது.

கத்தியோடு அவரைப் பிடித்த பொலிஸார், "உனது தலைவன் யார்?" என்று கேட்க. அவர் அஜய்குமாரை நோக்கி கையை நீட்ட பொலிஸுக்கு தலைசுற்றியது. "இந்த குள்ளமனிதனா?" என்று வியப்பு மேலிடக் கேட்டு பின்பு நிதானமாக விசாரித்த பின்னே, உண்மையை பொலிஸார் உணர்ந்திருக்கிறார்கள்.



அந்தக் கத்திக் கதை, கத்தியைவிட பெரியது. "என் நண்பன் ஒருவன் அமெரிக்கக் கத்தி நல்லாக வெட்டும் என் அப்பாவிடம் கொண்டு போய்க் கொடு என்று என்னிடம் தந்தான். அதுதான் இவ்வளவு பிரச்சினைக்கும் காரணம்" என்று சிரிக்கிறார் அஜய்.

இவருக்கு குள்ளம் ஒன்று 'மைனஸ்' இல்லை.... தனது திறமையைக் காட்டி உழைக்கிறார். பெரிய வீடு, கார் என்று வாழ்க்கை வசதியாகிவிட்டது. சகோதரிக்கு திருமணம் செய்து வைத்துவிட்டார்.

அஜய்குமார் குள்ளமான கதையும் வித்தியாசமானதுதான். அதை அவரது அம்மாவே சொல்கிறார். "பிறக்கும் போது எல்லாக் குழந்தைகளையும் போல் நன்றாகத்தான் இருந்தான். போலியோ ஊசி போடுவதற்காக கொண்டு சென்றேன். ஊசி போட்டதும் நன்றாக அழுதான். ஏதோ பிரச்சினை ஏற்பட்டிருப்பதாக டாக்டரிடம் கொண்டு சென்றேன். மருந்து மாறி இருக்கும் ஆரோக்கியத்திற்கு எதுவும் பாதிப்பு வராது என்றார். ஆனால், வளரவே முடியாமல் ஆகிவிட்டது..." என்கிறார்.

ஐந்தாம் வகுப்பு படிக்கும் போதே சினிமா சான்ஸ் கிடைத்தது. பின்பு மிமிக்கிரி. தனது கைவசம் உள்ள கலைக்கு கிடைக்கும் மரியாதையால், கிட்டத்தட்ட உலக நாடுகள் பலவற்றையும் சுற்றி நிகழ்ச்சி நடத்திவிட்டார் அஜய்.

கல்யாணம் எப்போது? "இப்போது வயது 26. நிறைய பெண்கள் சினிமாவிலும், டி.வி.யிலும் என்னைப் பார்த்துவிட்டு 'லவ் லெட்டர்' எழுதுகிறார்கள். ஆனால் எனக்கு மனைவியாகும் பெண்ணுக்கு சில 'விசேஷ தகுதிகள்' வேண்டுமே. அதற்காகத்தான் பொறுத்திருக்கிறேன்" என்றார்.

அவுஸ்திரேலியாவில்
சுடர் ஒளி
பெற்றுக்கொள்ள
எமது வீடியோகஸ்தர்கள்
M.K.S.International
23-25 Pultney St.
Dandenong 3175
Australia :- 03 97 013165

# முழங்கை மூட்டில் ஏற்படும் நோவு டென்னிஸ் ஆட்டக்காரருக்கு மட்டுமா?

**கேள்வி:** எனக்கு வயது 35. பெண். எனது வலது முழங்கை மூட்டில் ஒரு இடத்தில் சரியான வலி. இடியப்பம் பிழிவது துணியை கசக்கிப் பிழிவது போன்ற வேலைகள் செய்வது கஷ்டமாக இருக்கின்றது. டாக்டரிடம் காட்டிய போது இது TENNIS ELBOW நோய் என்று கூறினார். முழங்கை மூட்டில் ஒரு ஊசி போட்டால் சரியாகிவிடும் என்றார். நான் ஒரு போதும் 'டென்னிஸ்' விளையாடியதில்லை. எனக்கேன் இந்த நோய் வந்தது. வலியினால் இரவில் நித்திரைகூட இல்லை.

**பதில்:** ஆங்கில மருத்துவத்தில் ஆங்கில நாட்டில் உள்ள பழக்கங்களைக் கொண்டு நோய்களுக்கு பெயரிடும் பழக்கம் வழக்கத்தில் உள்ளது. அப்படி வந்த ஒரு பெயர் தான் டென்னிஸ் முழங்கை என்ற TENNIS ELBOW.

டென்னிஸ் வீரர்கள் அடிக்கும் மட்டையை கையில் ஏந்தி அடிக்கும்போது முழங்கை மூட்டிலிருந்து முன்கையை உயர்த்தி உள் பக்கமாக திருப்பி வேகமாக அடிப்பார்கள். இந்த அசைவை PRONATION என்று அழைப்பார்.

இந்த அசைவின்போது முழங்கை மூட்டில் மேல் கை எலும்போடு பொருத்தப்பட்டுள்ள ஒரு தசை, அசாதாரண உள்பக்க திரும்பலின்போது பொருத்தப்பட்ட இடத்தில் காயப்பட்டு போகிறது.

அதனால், அவ்விடத்தில் உங்களுக்கு ஏற்பட்ட வலி ஏற்படுகிறது. டென்னிஸ் விளையாடாத உங்களுக்கு இந்த வலி ஏன் ஏற்பட்டது? பாரமான பொருட்களை கையால் தூக்கும்போது – உதாரணமாக நீர் நிறைந்த பெரியவாளி, அல்லது காய்கறிப் பை என்பவற்றை கையில் காவி வரும்போது–இதே தசையின் பொருத்து இதே முறையில் காயப்படுகிறது. எனவேதான் உங்களுக்கு டென்னிஸ் வீராங்களைகள்போல் வலி ஏற்பட்டது. இந்த வலிக்கு வெந்நீர் ஒத்தடம், INFRA RED LAMP இன் வெப்ப ஒத்தடம் போடலாம். வலி நிவாரணி மாத்திரைகளை ஆரம்பகாலத்தில் உபயோகிக்கலாம். இவற்றுக்கு பெரிய அளவில் பயன் ஏற்படாவிடில் DEPOMEDROL என்ற ஊசிமருந்தை தசைபொருத்து இடத்தில் ஏற்ற வேண்டும். இது நிச்சயம் வலியைப் போக்கும்.

**கேள்வி:** வயது 35, பெண். எனக்கு நான்கு குழந்தைகள். நான்கும் பெண் குழந்தைகள். அத்தோடு அத்தனை குழந்தைகளும் சிசேரியன் மூலமாகத்தான் பிறந்தவை. கடைசிக் குழந்தை பிறந்தபோது கருத்தடை சத்திர சிகிச்சையும் செய்துவிட்டார்கள். எனக்கு ஒரு ஆண் குழந்தை விருப்பமாக இருக்கின்றது. கருத்தடை சிகிச்சையின் போது கட்டிய நூலை எடுத்துவிட்டால் குழந்தை பெறமுடியும் என்கின்றார்கள் உங்கள் ஆலோசனை என்ன?

**பதில்:** கருத்தடைசிகிச்சை முறை இரண்டு விதத்தில் நடைபெறுகிறது. ஒரு முறை BILATERAL LIGATION OF TUBES என்கின்ற இருபக்க குழாய்களையும், நூலினால் கட்டிவிடுவது.

இரண்டாவது முறை LOOP RESECTION TECHNIQUE என்கின்ற குழாய்கள் இரண்டையும் வளைத்துக்கட்டி, இடைப்பட்ட குழாய் துண்டை வெட்டுவது. முதலாவது கூறப்பட்ட முறை என்றால் கட்டிய குழாய்களை திரும்ப இணைப்பது இலகு. இரண்டாவது முறை என்றால் குழாய்களை மீண்டும் இணைப்பது கொஞ்சம் கஷ்டம். இந்த மீள் இணைப்பை RECANALISATION என்று கூறுவார்கள்.

இது எத்தனை சதவீதம் வெற்றிதரும் என்பதில் அபிப்பிராயங்கள் வேறுபடுகின்றன.



நூற்றுக்கு 5 சதவீதமான மீள் இணைப்புகள் கருத்தரித்தலுக்கு உதவியிருக்கின்றன என்று கூறுகின்றார்கள். அதுவும், விசேட நிபுணத்துவம் வாய்ந்த மருத்துவ நிபுணர்களில்தான் இந்த ஐந்துவீத வெற்றி பெறப்பட்டுள்ளது.

மேலும் இந்த மீள் இணைப்பு சத்திர சிகிச்சையை அரச பொது மருத்துவ மனைகளில் செய்ய மருத்துவர்கள் விரும்புவதில்லை. செயலுக்கேற்ற பலன் இல்லாததே இதற்கு காரணம். தனியார் மருத்துவ நிலையங்களில் அதிக பணச்செலவு இந்த சிகிச்சைக்கு தேவைப்படும். அப்படியானால் எனக்கு ஒரு ஆண்குழந்தை கிடைக்கும் வாய்ப்பில்லை என்று எண்ணுகின்றீர்களா?

உண்மையாக இன்னொரு குழந்தைக்கு ஆசைப்பட்டால் டெஸ்ட் டியூப் கருத்தரித்தல் மூலம் உங்கள் சூலகத்திலிருந்து முட்டையைப் பெற்று, உங்கள் கணவரின் ஜீவ அணுமூலம் கருத்தரிக்க வைத்து கருப்பையில் பதிய வைத்து, குழந்தைபெற முடியும். ஆனால், அது ஆண் குழந்தையாகத்தான் இருக்கும் என்று நிச்சயம் கூறமுடியாது.

இன்னொரு வழியும் உண்டு. உங்களுக்கும் உங்கள் கணவருக்கும் விருப்பமிருந்தால் ஒரு ஆண் குழந்தையை தத்தெடுத்து வளர்ப்பது நல்லது. சமீபத்தில் நடந்த சுனாமி அனர்த்தத்தில் எத்தனையோ பச்சிளம் பாலகர்கள் அநாதையாகி இருக்கின்றார்கள். அவர்களில் ஒருவருக்கு வாழ்க்கை கொடுத்த புண்ணியமாவது உங்களுக்குக் கிடைக்கும். பெற்றால் மட்டும் தான் பிள்ளையா? சிந்தித்துப்பாருங்கள்.

**கேள்வி:** எனது மகன் 5 வயது. நன்றாகச் சாப்பிடுவதில்லை. 'சாக்லெட்' இனிப்பு வகைகள் என்றால் விரும்பிச் சாப்பிடுகின்றான். டாக்டரிடம் காட்டினேன். நோய்கள் எதுவுமில்லை என்று பசி ஏற்படுத்துவதற்கு ஒரு 'டானிக்' தந்தார். என்றாலும் இன்னும் அவன் சரியாக சாப்பிடுவதில்லை இது நோயா?

**பதில்:** ஒரு குழந்தை நன்றாக விளையாடுகின்றான், நன்றாகச் சாப்பிடுகின்றான், நன்றாக தூங்குகின்றான் என்றால் அக்குழந்தைக்கு நிச்சயமாக ஒரு நோயுமில்லை. ஆனால், உணவு விஷயத்தில் அநேகமான குழந்தைகள் பத்து வயது வரும்வரை ஒழுங்கு இல்லை. இதற்கு பெற்றோரையும் குறைகாண வேண்டியுள்ளது.

ஒரு குழந்தைக்கு பசி ஏற்படுவதென்றால், அதாவது, உடலில் உள்ள குளுக்கோசு சத்து குறைய வேண்டும். அப்படிக் குறையும் போது அதாவது மூளையில் உள்ள APPETITE CENTRE தூண்டப்படுகின்றது. இதனால் பசிஉணர்வு ஏற்படுகிறது. உங்கள் குழந்தை அடிக்கடி 'சாக்லெட்' போன்ற இனிப்பு வகைகளை சாப்பிடுவதால் அதாவது பசித்தன்மையை அதிகரிக்க உடலில் குளுக்கோசு சத்து குறைவதில்லை. எனவேதான் உங்கள் குழந்தை சாப்பிடுவதில்லை. இனிமேல் உணவு அருந்தமுன்னர் அல்லது முக்கியமான காலை உணவு, மதிய உணவு, இரவு உணவு என்பவற்றுக்கு, இடையே உள்ள காலப்பகுதியில் இனிப்பு வகைகளை குழந்தைக்கு கொடுக்காதீர்கள்.

இனிப்பு வகைகளை உணவிற்குப்பின்னர் ஒரு அளவோடு கொடுங்கள். குழந்தைக்கு உணவு உண்பதற்கென்று ஒ[...] நேரத்தை ஒதுக்குங்கள். என்ன வேலை[...]யிருந்தாலும் அந்தக் குறிப்பிட்ட நேரத்தி[...]

> இலவச மருத்துவ ஆலோசனைகளை
> 'சுடர் ஒளி மூலம் வழங்குகிறார்
> டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
> நீங்கள் கேள்விகளை
> அனுப்பவேண்டிய முகவரி
> இலவச மருத்துவ ஆலோசனை
> 'சுடர் ஒளி'
> 85, ஜயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை
> கொழும்பு – 14

குழந்தையை உணவு உண்ணப் பழக்கு[...]கள். வேண்டுமானால் நீங்களும் கூ[...] இருந்து அந்த நேரத்தில் உணவு உட்கொ[...]ளுங்கள்.

குறித்த நேரத்தில் உணவு உட்கொள்ளு[...] பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டால் ப[...] உணர்வு அந்த நேரத்தில் ஏற்படும். தினமு[...] ஒரே மாதிரியான உணவை தயாரிக்காமல் விதம் விதமாக சமைத்துக் கொடுங்கள் ஒரேவிதமான உணவை சில குழந்தைகள் வெறுப்பது உண்டு. அதனால் அவர்கள் ஏதோ சாக்குப் போக்கு சொல்லி உணவை[...] தவிர்க்க முயல்வர். குழந்தை உணவை[...] உண்ணாவிட்டால் கண்டிக்காதீர்கள். ஒரு நேர உணவை விடுவதால் குழந்தைக்[...] ஒன்றும் ஆகாது. தெண்டிப்பது, தண்டிப்பது போன்ற விஷயங்கள் உணவு விஷயத்தில் குழந்தைகளுக்கு வெறுப்பை உண்டாக்கும்.

குழந்தைகள் நன்றாக ஓடியாடி விளையாடவேண்டும். இதனால் பசி ஏற்படும் குழந்தையின் உணவு வேளையில் நீங்கள் EMOTIONAL அதாவது கோபம், வெறுப்[...] உணர்வுகளோடு இருக்காதீர்கள். அதுபோல் குழந்தைகள் அழுகை, கோபம் இருக்கும் போது உணவை ஊட்ட தெண்டிக்கவேண்டாம்.

குழந்தைகளின் உணவை ஒரு ப[...]முறுத்தி உதவும் விஷயமாகவோ (BLACK MAIL) அல்லது வெகுமதி தரக்கூடிய விஷய[...]மாகவோ (REWARD) உபயோகிக்கக்கூடாது. உதாரணமாக 'நீ சாப்பிட்டால்தான் விளையாட விடுவேன்', 'நீ சாப்பிடாவிட்டால் டீ.வி பார்க்க விடமாட்டேன், என்று BLACKMAIL பண்ணுவது, உணவருந்துவதை ஒரு மனோநிலை போராட்டம் ஆக்கிவிடும்.

எனவே, உங்கள் குழந்தைக்கு இருப்பது நோயல்ல. ஆரோக்கியமான சிந்தனையுடன் குழந்தைக்கு உணவூட்ட முயலுங்கள்.

# நிர்க்கதி நிலையில் சங்கரமடம்....

(20 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜெயேந்திரர் சுவாமிகளுக்குப் பிணை வழங்கப்பட்ட செய்தி கிடைத்தவுடனேயே விஜயேந்திரர் கைதுக்கான முஸ்தீபுகள் தொடங்கிவிட்டன என்பதில் சந்தேகம் இல்லை.

காஞ்சி சங்கர மடத்தின் சங்கராச்சாரியார் ஜெயேந்திரரைத் தொடர்ந்து, சுந்தரேச ஐயர், ரகு, கணக்காளர் விஸ்வநாதன் என்று அடுத்தடுத்து நடந்த கைதுகள் எல்லாமே மடத்தை முடக்கும் உள்நோக்கத்துடன்தான் செய்யப்பட்டிருக்கின்றன என்று பக்தர்கள் மத்தியில் அசைக்க முடியாத ஒரு கருத்து இருக்கிறது.

## திடீர் கைது ஏன்?

ஏற்கனவே கைது செய்யப்பட்டவர்களில் ஒருவராவது ரஷி சுப்பிரமணியமும் கைது. இத்தனை பேரும் இளையவர் விஜயேந்திரரின் பெயரைச் சங்கரராமனின் கொலைக்குள் இழுத்தார்கள் எனப் பொலிஸ் தரப்பிலிருந்து எந்தச் செய்தியும் வரவில்லை. ஜெயேந்திரர் சுவாமிகளை மட்டுமே குறி வைத்து இவ்வழக்கு நகர்ந்தது. செய்திகளும் படுஜோராகப் பரப்பப்பட்டன.

இப்போது, திடீரென விஜேந்திரரைக் கைது செய்திருப்பது, வழக்கின் விசாரணை முறையை குறித்து, ஆயிரக்கணக்கான கேள்விகளைக் கிளப்பிவிட்டிருக்கின்றது.

காட்டு பங்களாவில் விஜயேந்திரரிடம் இரண்டுமுறை நடந்த விசாரணைகளின் போதும் அவர் தெரிவித்த பதில்களை வீடியோ நாடாவில் பதிவு செய்திருக்கிறது பொலிஸ் தரப்பு.

## வழக்கு திசைதிரும்பும் விதம்

சங்கரராமனின் கொலையில் ஜெயேந்திரருக்கு எந்தளவு பங்கிருப்பதாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதோ, அதே அளவு பங்கில் விஜயேந்திரர் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஜெயேந்திரர் சுவாமிகள் மீது சுமத்தப்படாத சங்கடமான இன்னும் சில குற்றச்சாட்டுகளையும் விஜயேந்திரர் மீது பதிவு செய்யும் மும்முரத்தில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிகிறது.

ஜெயேந்திரரைப் பொலிஸார் தமது தடுப்புக்காவலில் விசாரணை செய்தது போல் விஜயேந்திரரையும் விசாரிக்க முடிவுசெய்திருக்கின்றார்கள். பொலிஸாரிடம் இருந்து தொடுக்கப்படும் கேள்விக்கணைகள் மிகக் கஷ்டமான ஒரு சூழலை இளையவர் விஜயேந்திரருக்கு உருவாக்கும் என்கிறார்கள் அரசியல் ஆய்வாளர்கள்.

ஜனவரி 07ஆம் திகதி மகா பெரியவரின் 'வர்ஷிக ஆராதனை' நிகழ்ச்சியை, விஜயேந்திரர் நடத்தினார். இதற்கு முன்னதாக, மடத்தைச்சுற்றியுள்ள நான்கு வீதிகளிலும் மகா பெரியவரின் சிலையைச் சுமந்தபடி பக்தர்கள் வலம் வந்தனர். அந்தச் சிலையை எடுத்துக்கொண்டு ஏகாம்பர[...] நாதர் எனும் கோயிலின் தீர்த்தக்குளத்துக்குச் சென்றனர். அங்கு வைத்து அதற்கு அபிஷேகம் செய்தனர்.

அடுத்து மடத்தக்குள் கொண்டு வரப்பட்ட சிலை மகா பெரியவரின் அதிஷ்டானத்தில் வைக்கப்பட்டது. விசேட பூஜைகளும், பஜனைகளுமாக ஆராதனை களை கட்டியது. அங்கு உள்ள சிறிய மேடையில் அமர்ந்தபடி விஜயேந்திரர் அமைதியான முகத்துடன் அனைத்துப் பூஜைகளையும் நடத்தி முடித்தார்.

"இனி நடப்பதை எல்லாவற்றையும் மகா பெரியவரின் ஆன்மா பார்த்துக்கொள்ளும்" என்ற நிம்மதியான முணுமுணுப்புடன் சென்ற பக்தர்களின் நிம்மதி மூன்று நாட்கள் கூட நீடிக்கவில்லை. விஜயேந்திரரைக் கைதுசெய்து விட்டது தமிழகப் பொலிஸ் தரப்பு.

இப்போது, காஞ்சி சங்கர மடம் இரு மடாதிபதிகளும் இன்றி நிர்க்கதியான நிலையில் உள்ளது. இந்து மக்களின் மனதைப் புண்படுத்தி அரசியல் லாபம் தேடும் செய்கையாக இவ்விரு இந்துத் தலைவர்களது கைதும், இவர்களோடு தொடர்புடையவர்களது கைதும் இடம்பெற்றிருக்குமானால் உண்மையில் தமிழக அரசு இந்து மக்களின் மத உணர்வோடு விளையாடி – சீண்டிப்பார்த்திருக்கிறது என்றே சொல்ல வேண்டும்.

# திரும்பி வரும் விலங்குகள்

டிசம்பர் 26 ஆம் திகதி சுனாமி பேரலை இலங்கையின் வடக்கு, கிழக்கு கரையோரப்பகுதிகளையும், தென் பகுதியையும் தாக்கி அழித்த போது தென் பகுதியில் உள்ள யால தேசிய வனப்பகுதியும் பாதிக்கப்பட்டது.

ஆனால், இங்குள்ள மிருகங்கள் மற்றும் பறவைகள் ஒன்றாவது பாதிக்கப்பட வில்லை. சுனாமி பேரலை வருவதற்கு முன்பேயே அவை பாதுகாப்பான இடங்களுக்கு தப்பிச் சென்றிருந்தன. சுனாமி பேரலை அழிவு ஏற்பட்டு தற்போது மூன்று வாரங்கள் கழிந்துவிட்டன. மிருகங்களும், பறவைகளும் மீண்டும் பழைய இடங்களுக்குத் திரும்பி வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் வண்ணத்துப் பூச்சிகளை மட்டும் காணோம் என்கிறார் யால தேசிய வனப்பகுதிக்குப் பொறுப்பான அதிகாரி.



உல்லாசப் பயணிகள் இங்கு வருகை தருவது மீண்டும் ஆரம்பித்துவிட்டது.

சுனாமி பேரழிவுக்கு முன்பு வழக்கமாக நாள் ஒன்றுக்கு 150 பேர் வரை யாலக்கு வருவது வழக்கம். இவர்களில் வெளிநாட்டவர்கள் அதிகம். ஆனால், இப்போது 100 பேர் வரை வருகை தர ஆரம்பித்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

சுனாமியின் வருகையினை - இயற்கையில் ஏற்படக்கூடிய மாற்றத்தை - ஆரம்பத்திலே உணர்ந்த மிருகங்கள் பாதுகாப்பான பிரதேசத்தை நோக்கி ஓடின. ஆனால், மனிதர்களால் இந்த அனர்த்தத்தை விளங்க முடியாத காரணத்தால் இந்த யாலப்பகுதியல் 42 பேர் வரை இறந்தனர். இவர்களில் யாலதேசிய வனப்பகுதி ஊழியர்கள் நால்வர், மிகுதியானோர் உல்லாசப்பயணிகள். அதிலும் 16 பேர் ஜப்பானியர்கள். யாலப் பகுதியில் காணப்பட்ட பல மரங்கள் சில மைல்களுக்கு அப்பால் வீசப்பட்டிருக்கின்றன. சில இடங்களில் மரங்கள் இருந்த இடமே தெரியாமல் போய்விட்டது. ஆனால் வனப் பகுதியின் மத்தியில் அகாசி மரங்கள் மட்டும் தற்போது துளிர் விட ஆரம்பித்துள்ளன.





சுனாமிக்குத் தப்பிச்சென்ற யானைகள் மீள வரத் தொடங்கி யுள்ளன. அவற்றுக்கு அகாசி மரங்களின் இளம் துளிர்கள் என்றால் அதிகம் பிடிக்குமாம். இதனை அடுத்து ஏனைய மிருகங்களும் மீண்டும் தமது பழைய இருப்பிடம் நோக்கி வர ஆரம்பித்துள்ளன. நீர் எருமை, மான், குரங்கு, முதலை என்பன மீண்டும் வர ஆரம்பித்துள்ளன. ஆனாலும் வண்ணத்துப் பூச்சிகள் இன்னும் தென்படவில்லை.வண்ணத் துப்பூச்சிகள் வாழும் நீர் நிலைகள் பாதிக்கப்பட்டிருப்பதால் தமது இருப்பிடங்களை அவை மாற்றியிருக் கலாம் என நம்பப்படுகிறது. இறந்தோரில் பிரித்தானிய உல்லாச தம்பதியினரும் அடங்குவர் இவ்விடத்தை சுற்றிப் பார்ப் பதில் அவர்கள் அதிக அக்கறையும் ஆர்வமும் கொண்டிருந்தனர். வெகு குறை வாக மக்கள் இங்கு வருகை தருவதால் சந்தோசமாக இருக்கலாம் என எண்ணிய அந்த பிரித்தானிய தம்பதியினரும் சுனாமியின் பசிக்கு இரையாகினர்.


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 11.04.1956

மறைவு 01.02.2004

திருமதி நடராஜா புஸ்பராணி

ஓராண்டு ஒரு மாதம் போல் போனதம்மா
நீராண்ட வீடு களையிழந்து போச்சுதம்மா – மலர்
கொடியாய் நூற்றாண்டு காலம் –நீங்கள் வாழ நாம்
கனவு கண்டோம். – சடுதியாய் மின்னி மறைந்ததோ
உங்கள் வாழ்வு– ஆறுமோ எங்கள் மனம்?
ஆயிரம் உறவுகள் புன்னகையையும் குரலையும் கேட்க
எங்கள் முன்னிலையில் வருவாயா அம்மா!.
ஆத்மாசாந்தி பெற இறைவனை வேண்டி
துயரில் வாடுகின்றோம்.

தாஞ்சிபுரம். மாதகல்.

–தாய், கணவன், பிள்ளைகள், மருமகன், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.



திருகோணமலையில்... சுடர்ஒளி உதயன் விளம்பர பணிமனை

எமது பத்திரிகைகளில் உங்களது விளம்பரங்களை பிரசுரிக்க விரும்பினால் அவற்றினை திருகோணமலை 39, அருணகிரி வீதியில் அமைந்திருக்கும் எமது விளம்பர பணிமனையில் கையளிக்கலாம்.



50

திருமண வாழ்வின் 50ஆம் ஆண்டு நிறைவு வாழ்த்து



திரு.திருமதி ஆனந்த சுந்தரம்–சரஸ்வதி தம்பதிகள்

ஏழாலை தெற்கு சுன்னாகத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியர்களான

திரு.திருமதி ஆனந்த சுந்தரம் –சரஸ்வதி தம்பதிகளை இல்லற வாழ்வின் 50ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு பல்லாண்டு காலம் சிறப்புற வாழ வேண்டுமென்று உளமார வாழ்த்துகின்றோம்.

–மோகானந்தன்–டோறிஸ் குடும்பம் (பிரான்ஸ்). ஆனந்தவதனி - அம்பிகை நாதன் குடும்பம் (ஏழாலை). தயானந்தன் - ஸ்ரீ விஜயா குடும்பம் (ஹொலண்ட்). தேவானந்தன் - நந்தரூபி குடும்பம் (ஏழாலை). கோபி. ஜனார்த்தன் - சுபானந்தி. தர்சனா தர்சாந். தர்சானந் -பிரபானந். பிரமிலன்- நிஷானந்தி - கிருபானந்





மீண்டும் வன்னியில் புதுப்பொலிவுடன்...

உங்களின் இக்காலத் தெரிவுக்கு...

குமரகுரு

புடைவை அழகுப்பொருள் வாணிபம்

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி நவீன ஆடைகளை உள்ளடக்கிய திருமண மற்றும் மங்கள நிகழ்வுகளுக்கான காஞ்சிபுர சாறிகள், பட்டுச்சாறிகள், பட்டுவேட்டிகள் மற்றும் சல்வார் சேர்லிகிற் சூட் கவுண், சேட் சூட்டிங் மற்றும் பெரியோர்கள், சிறியோர்களுக்கான ஆடைகளை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்.



குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்

யாழ் சாலை, கிளிநொச்சி

Tel: 021 228 5971

KUMARAKURU TEXTILE & FANCY HOUSE

Yarl Road, Kilinochchi.



EXPOAIR

your friend in the skies...

எக்ஸ்போ எயார்

வானத்தில் உங்கள் நண்பன்...



யாழ் – கொழும்பு

விமான பயணத்திற்கு அழையுங்கள்:

யாழ்ப்பாணத்தில் - 021 222 3891/6297, 0772 349999/ 8888

கொழும்பில் - 011 2372952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360290/91

Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com




இப்பத்திரிகை கொழும்பு – 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லைன்ட்மார்க் என்டர் பிரைசஸ் ஸ்தாபனத்தினால் 2005, ஜன. 16ஆம் திகதி வெளியிடப்பட்டது.